80—பக்கங்கள்.

ஓம் பரப்பிரம்மணே நம :

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும், ஆநந்தகரமான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்களும் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
 திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.)

கமலம்-8.	சென்னை ஸ்ரீமுகளு மாசிமீ 1உ	இதழ் 95.
Vol. 8.	1934--ம்ளு பிப்ரவரிமீ 15உ	No. 95.



"ஹரிஹரன், ஸ்ரீதரன், கங்காதரன்" முதலிய திருநாமங்களைக் கொண்டு பற்பல ஸ்தலங்களிலும் எழுந்தருளி எல்லோர்க்கும் கிருபை செய்யும் பகவானை ஸதா பிரார்த்திக்கக் கடவோம். பாபங்கள் மிகுந்து அக்கிரமங்கள் அதிகரிப்பதால் எந்த மூர்த்தியும் தற்போது பிரஸன்னமாகிறதில்லை. விவேகியானவன் தன் நிலைமையும், உலகத்தினிலைமையும், காலநிலைமையும் அறிந்து க்ஷண நேரத்தையும் வீணுக்காமல் பகவானை ஸதா பஜித்தவாறு இருந்தால் ஞானமாகிய பாலை யுண்ணலாம். ஸகல மங்களங்களையும் பெறலாம்.

ஃ

"இராமகீதை" யென்னும் கிரந்தத்தில் ஸம்ஸார துக்க நிவர்த்தியைப் பற்றி ஹனுமார் கேட்க, அதற்குப் பகவான், "என்னுடைய ஸ்வாஸத்திலிருந்து வேதங்கள் பிறந்தன. சுருதி, ஸ்மிருதி, புராணங்களிலே சுருதிதான் சிரேஷ்டமானது. வேதமானது எள்ளைப்போலும், வேதாந்தமானது அதனுள்ளிருக்கும் எண்ணெயைப் போலும் இருக்கின்றன. வேதாந்தமானது வேதங்களின் ஸாரமடங்கியது. அதைப் படித்தாலன்றி ஸம்ஸார துக்கம்

இரவு முழுதும் விழித்திருந்து உன் வியாதிப்படுக்கையின் அருகே காத்து நிற்பவர் எவரெவரென்று கண்டுகொண்டு அவர்களை எப்பொழுதும் உன் பக்கத்தில் சேர்த்துவைத்துக் கொண்டிரு. பகலில் மட்டும்விழித்து நிற்போர் உதவி தேவையில்லை

நிவர்த்தியாகாது" என்றார். ஸ்ரீராமருடைய வாக்கியம் இதுவாகையால், ஒவ்வொருவரும் துக்க நிவர்த்தியினிமித்தம் வேதாந்த கிரந்தங்களை வாசிப்ப தவசியம்.

ஃ

"ஞானப்பிரதாயநீ" என்று அம்பிகைக்கு ஒரு பெயருண்டு. உலகத்தில் மனுஷ்யன் ஸம்பாதிக்கும் செல்வங்கள் அபரிமிதமாயிருக்கினும், அவற்றைப் பூரணமாய் அனுபவிக்கும் அதிர்ஷ்டம் மனுஷ்யனுக்குக் கிடையாது. பல்லுதிர்ந்த கிழவன் கரும்பை யுண்ண இயலா வயது சென்ற விருத்தன் உலக இன்பத்தை யனுபவிக்க முடியாது. இன்னும் இருமல், இழுப்பு முதலிய பிணிகள் எத்தனை ஆயிரமோ! இதனால், மனுஷ்யன் இளமை, செல்வம் முதலியனவற்றில், அஸந்துஷ்டியடைந்து என்று மழியாத பேரின்பத்தில் மனதை வைத்துக் கடவுளைப் பிரார்த்திக்கின்றான். அப்போது ஞானப்பிரதாயனியாகிய அம்பிகையையும் வணங்குகிறான்.

ஃ

"யாவும் பகவந் ஸங்கல்பம்" என்று பக்தர்கள் கூறுகின்றனர். தனவந்தர்களான அடியார்கள் ஆலயம் அமைப்பித்தல், தான தர்மங்களைப் புரிதல் முதலியவற்றை அனுஷ்டிக்கின்றனர். இவ்வுலகம் இருப்பினும் இல்லாவிடினும் அவற்றில் தமக்குச் சிந்தனையேயின்றித் தம்மைப் பூரணமாகப் பகவானுக்கு அற்பணம் செய்துள்ள பக்தர்கள் மேன்மேலும் பக்குவத்தையும் நிர்மலமான மனத்தையும் எய்துகின்றனர். இவ்வாறு தன்னைப் பரமாத்மாவுக்கு அர்ப்பணம் செய்து நடந்து அனுபவமடைந்தவனுக்கு உலகில் எந்த வஸ்துவும் அற்பமாகவே காணும். அவனே உண்மை ஞானியாவான்.

ஃ

"ரஸவாதம்" ஒரு தனவந்தர், வெகு கஷ்டத்துடன் விறகுக்கட்டைத் தூக்கிச் செல்லும் ஒரு வயோதிகரை வழியிலே கண்டார். மிக்க இரக்கத்துடன் க்ஷேமம் விசாரித்து, அவருக்கு ஒரு பைப் பணத்தைக் கொடுத்து வறுமையைப் போக்க எண்ணினார். அவர் நினைத்ததை ஞானதிருஷ்டியினலறிந்த விறகு தலையர் புன்னகையுடன் கையைத் தூக்கிப் பிரார்த்தித்தார். உடனே விறகுக்கட்டு முழுதும் பத்தரைமாற்றுப் பொன்னாயிற்று. தனவந்தர் திடுக்கிட்டு அவ்விறகு தலையர் ஒரு மஹான் என்று உணர்ந்து வணங்கினார். மறுபடியும் விறகுதலையர் கடவுளைப் பிரார்த்திக்கவே, முன்போன்று விறகுக்கட்டாய்விட்டது. உண்மை ரசவாதிகளான ஞானியர் ஏதுமறியாக் கூலிகள்போன் றுழைத்து ஜீவித்து மறைந்து நிற்க, பொய்யான ரசவாதிகளோ தங்களுக்கு அந்த வித்தை சித்தித்துவிட்டால் உலகையே மயக்கிவிட

மிஸ்டர் W. A. மியாட் கூறுகிறார்:—ஒருவர் மனதும் புண் படுவதற்கு இடங் கொடுக்காமல் பத்திராசிரியர் தமது சுயேச்சையைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. (2) பத்திரிகையில் பிரசுரமாவதற்குச் செய்திகளைப் பொறுக்குவதே பத்திராசிரியருக்குப் பெரிய கஷ்டமாயிருக்கிறது. (3) தோஷம் கூறுவதிலும் எந்த அளவு பேசுவதென்பதை முடிவு செய்வதும் கஷ்டமான விஷயம்.

லாமென்று எண்ணுகிறார்கள். அவர்களுக்கு அது சித்திப்பதுமில்லை. அவர்களும் பொய்யர்களாகின்றனர். பற்றற்றவனுக்கே வீடு.

ஃ

"போக்கை வாயன் மெச்சினான் பொரிமாவை" பல்லில்லாதவனு யுள்ளவனுக்குப் பலகாரங்களிலும், கடின பதார்த்தங்களிலும் ருசியிருந்தாலும், அவைகளை ருசி காண அவனுக்குப் பற்களில்லாத தோஷத்தால், அவன் வாய்க்கு மெதுவாகவிருக்கிற பொரிமாவைச் சிறப்பித்து அதற்குச் சமமானமில்லை யென்றானும். அதுபோலவே, உயர்ந்த விஷயங்களைக் கிரகிக்க சக்தியற்ற ஸாமான்யர்கள் அற்ப விஷயங்களில் புத்தியைச் செலுத்திக் கிரகித்து மகிழ்வார்கள். செவ்வனே கலைகற்ற புலவர்கள் எடுத்துக் கூறும் அரிய பெரிய விஷயங்களைக் கேட்டு மகிழாமல், தாளங்கள் மத்தளங்கள் முதலியவைகளுடன் பெருங் கூச்சலிட்டுப் பொருட் பொலிவற்ற வெறுங் கூச்சலைச் செவியேற்றுக் குதூகலிப்பர். இங்ஙனமே அரிய விஷயங்களைக் கிரகிக்கும் ஆற்றல் இல்லாதவர்கள் எளிய விஷயங்களைக் கேட்டு நாளடைவில் விவேகசாலிகளாவர். இது முறையேயானாலும், தாங்கள் கண்ட—கேட்ட—உணர்ந்த விஷயங்கள் மட்டுமே சிறந்தவை யெனவும், தாம் ஆராய்ந்தறியாததும் தமது அல்ப அறிவுக்கு எட்டாததுமான மற்றயவை இழிந்தவை யெனவும் கூறுதலும், துணிதலும் பெருங் குற்றமென்றுணர்க. பொதுவாக நம்முடைய புத்திக் குறைவே நாம் படும் கஷ்டங்கட்குக் காரணம். பகவத் பக்தியால் ஸகல கஷ்டங்களும் நீங்குமாதலின், எப்போதும் பகவானையே தியானிக்கக் கடவோம்.

நான் வரவில்லை.

ஒரு விவாகத்திற்கோ, ஒரு விசேஷத்திற்கோ வீட்டிலுள்ளவர்களை அழைத்தால், அதற்குப் போகவேண்டுமென்ற விருப்பம் உள்ளுக்கிருந்தாலும் அதை மறைத்துவிட்டு "நான் வரவில்லை" என்று சொல்லிவிடுகிறார்கள். பிறகு இவர்களை வற்புறுத்தி அழைத்துக்கொண்டு செல்வதில்; போன இடத்தில் ஏதேனும் கலகம், சண்டை, மனஸ்தாபம் நேர்ந்துகொண்டால், உடனே இவர்கள் "நான்தான் அப்போதே வரவில்லை யென்று சொன்னேனே! ஏன் வலிய அழைத்துவந்து இப்படிப் பாடுபடுத்த வேண்டும்" என்று சொல்ல ஆரம்பித்துக் கொள்ளுகிறார்கள். பிறகு, தாங்கள் வாய் திறப்பதற்கு ஒரு சந்து இருக்கும்படி முன்னதாகவே ஒரு வார்த்தையைப் போட்டு வைக்கிறது சாமர்த்தியமான சங்கதிதான். இவ்விதம் சாமர்த்தியம் காட்டியவர்கள் வாரிக்கொண்ட தொன்றையுங் காணோம்.

அமிர்தகுணபோதினி

ஸ்ரீமுகஞு மாசிமூ 1வ

அராபிய மஹான் ஆலகசாலி.

அவருடைய தத்துவஞானக் கொள்கைகள்.

ஆலகசாலி என்ற இந்த அராபிய மஹான் கி. பி. 1058-ம் வருஷம் பிறந்தவர். அவர் ஞானம் அடைந்ததைப்பற்றி அவரே கூறுவதை நாம் கேட்போமாக. அவர் குழந்தைப் பருவத்திலே தாம் கொண்டிருந்த அபிப்பிராயங்களை விட்டு விலகுவதற்குச் செய்த முயற்சிகளைப்பற்றிப் பின்வருமாறு விவரித்துக் கூறுகிறார்:—

1

"நான் என்னுள்ளே சொல்லிக்கொண்டதாவது:—பொருள்களின் உண்மையை யறிவதே எனது நோக்கம்; ஆகையால், 'அறிவு' என்பது இன்னதென்று நிச்சயிப்பது எனக்கு இன்றியமையாததாக இருக்கிறது.

ஃ

தெரியவேண்டிய விஷயத்தைப்பற்றிச் சகல சந்தேகமும் பூரணமாக அற்றுப்போகும்படி விவரித்து, அதனால் பின் எக்காலத்திலும் அவ்விஷயத்தைப்பற்றி எவ்வித தப்பெண்ணமாயினும், மாறுபட்ட அபிப்பிராயமாயினும் உண்டாவது அசாத்தியமாகும்படி செய்வதே நிச்சய ஞானமேன்பதாகும் என்று தெளிவாயுணர்ந்தேன்.

ஃ

நாம் அவ்வாறு அறியும் அறிவின் உறுதியானது, நமது உணரும் சக்திகளின் முயற்சி யாதொன்று மில்லாமலே, நமது மனத்தில்

காலணாவை நீட்டினதும் ஒரு பெண் ஓடிவருகிறாள். பெண் அவ்வளவு மலிவாகக் கிடைக்கும் சரக்கா? இல்லை யில்லை. காலணாவைத் தந்தை நீட்ட, அதைப் பெற்றுக்கொள்ள அவரது புத்திரி ஓடிவருகிறாள். இருவரிடையேயுள்ள அன்பானது அவ்விதம் தரவும், அதைப் பெற ஓடிவரவும் செய்கிறது.

'அது சரிதான்' என்கிற ஒரு அற்புதமான திடநம்பிக்கையை உண்டு பண்ணிவிடுகிறது.

ஃ

தவறு, தப்பிதம் வராமல் காக்கக்கூடிய ஒழுங்குகளுக்கும், அறிவுக்கும் ஒரு நெருங்கிய சம்பந்தம் இயல்பாகவே இருக்கிறது' ஆதலின், நாம் அறிந்துகொண்ட திடமான அறிவை எவராவது பொய்யென்று ரூபிக்க முயற்சி செய்தாலும் நாம் சந்தேகப்பட்டு மனம் தளர்வதில்லை. ஏனெனில், நாம் அறிந்த அந்த அறிவு தப்பா யிருக்குமோ என்று நமது மனம் சற்றும் சந்தேகப்படுவதேயில்லை.

ஃ

பத்து என்பது மூன்றுக்கும் அதிகமானதே என்று நான் தெரிந்து கொண்டிருக்கும்போது, இன்னொருவன் "அப்படியல்ல, மூன்று என்பது பத்துக்கும் அதிகப் பட்டதே" என்று கூறினால், அவன் பிழையாகப் பேசுகிறான் என்ற எனது உறுதியான எண்ணம் மாறுமோ? அவனுடைய பொய் சாமர்த்தியத்தைப் பற்றி ஆச்சரியப் படுவேனே யொழிய, என்னுடைய அறிவைப்பற்றி சந்தேகம் கொள்ளமாட்டேன். பத்து என்பது மூன்றுக்கும் அதிகமான தென்றே நான் நிச்சயிப்பேன்.

ஃ

அறிவு என்பது நிச்சயத்துடன் இருக்கவேண்டும். நிச்சய மில்லாத அறிவு மனத்தில் நம்பிக்கையும் உறுதிப்பாடும் உண்டாக் கத்தக்க சக்தியோடு கூடியதாயிராது. உறுதிப்பாடில்லாத அறிவோ, 'அறிவு' என்னும் பெயரை வகித்தற்கே தகுதியற்றது என்று உணர்ந்தேன்.

2

நான் அறிந்த அறிவுகளின் தன்மையைச் சோதித்துப் பார்த்தேன். புலன்கள் மூலமாக அறியும் ஞானத்தையும், மூன்றி லும் பத்து அதிகமானதே என்பது போன்ற மறுக்கப்படாத மூல தத்துவங்களையும் ஒப்புக்கொண்டேன். ஆனால், இப்படியே மற்ற

"உங்கள் காலில் விழுகிறேன், இப்போதாவது பதில் எழுதுங்கள்" என்று ஒரு அன்பர் கடிதம் எழுதினர். மனதில் அத்தனை ஆழ்ந்த அன்பும், கடிதத்துக்கு எதிர்பார்ப்பும் இருந்ததனுல்—"காலில் விழுகிறேன்"—என்ற பதம் ஒரு ஈனபதமாக அவருக்குத் தோன்றவில்லை. மனதில் அன்பு மட்டும் இருந்துவிட்டால் காலில் மட்டுமோ விழச் செய்யும்?—தாய்போன்று அருகிலி ருந்து—மலத்தைக்கூட எடுக்கச் செய்யும். தன் உயிரைக் கொடுக்கத் தயாராகிவிடும். தன்னிடமுள்ள பொருள்களையெல்லாம் வாரிவாரி எடுத்துத் தரவும் முந்திக்கொள்ளும். அன்பின் தவிப்பு கொஞ்சமா?

எல்லா அறிவுகளும் நிச்சயமான குணங்களுள்ளவையென்று நான் நம்பக் கூடாதவனாயினேன். இந்த நம்பிக்கையின்மைக்குக் காரணம் சொல்லுகிறேன்.

ஃ

நம்முடைய புலன்கள் எல்லாவற்றிலும் கண் என்கிற புலன் விசேஷ சக்தியுள்ளது. ஆயினும், ஒரு நிழலைப் பார்த்து, அது நிலையுள்ளதாகவும் அசைவற்றதாகவும் நமது கண்ணால் கண்டு, அசையும் தன்மை அதற்கில்லை யென்று தீர்மானிக்கிறோம். அப்படித் தீர்மானித்த பிறகு, அந்நிழல் இருந்த இடத்தை ஒரு நாழிகை கழித்து வந்து பார்க்கும்போது, அது,—உடனே மறைந்திடாமல் படிப்படியாகவும், சிறிது சிறிதாகவும், எக்காலும் நிலைகொள்ளாத வண்ணமாகவும் மறையும் இயல்புடையதாதலால்,—முன் இருந்த இடத்திலிருந்தும் அந்த நிழல் பிறகு எடுபட்டுப் போகிறதென்று அனுபவத்தினா லறிகிறோம்.

ஃ

இவ்விதமே நக்ஷத்திரங்களை நமது கண்ணைக்கொண்டு பார்ப்போமானால், அவைகள் சிறு நாணயங்கள் போலத் தோன்றுகின்றன. ஆனால், கணித சாஸ்திரமோ, அந்த நக்ஷத்திரங்கள் பூமியை விடப் பெரியதென்று நமக்கு நிச்சயம் பிறக்கும்படி ரூபிக்கின்றது. மேலே சொல்லிய நிழல், நக்ஷத்திரம் போன்றவைகளும், அவை போன்ற மற்றவைகளும் நமது கண்போன்ற புலன்களால் உண்மையானவைகளாக முதலில் நிர்ணயிக்கப் பட்டாலும், பிறகோ, அறிவினால் பொய்யானவைகளென்று தள்ளப்பட்டுப்போகின்றன. ஆகையால், கண்போன்ற புலன்கள் வெளியிடும் உண்மைகளில் வைத்த நம்பிக்கை ஸ்திரமில்லாமற் போனதைக் கண்டு அவைகளை நான் கைவிட்டு விட்டேன்.

3

இவ்வாறு யோசித்தபின் என்னுள்ளே சொல்லிக் கொண்டதாவது:—ஒரே பொருள் சிருஷ்டிக்கப்பட்டதாகவும், என்றென்றும் அனாதியாக உள்ளதாகவும் இருக்கமுடியாது. சிருஷ்டிக்கப்பட்ட ஒரு பொருள் ஏககாலத்தில் உள்ளதாகவும் இல்லாததாகவும் இருக்க முடியாது. சிருஷ்டிக்கப்பட்ட பொருள் அழியும்; சிருஷ்டிக்கப் படாத பொருளே என்றும் நிலைத்துள்ளதாம். என்றும் எண்ணி

ஒவ்வொரு தடவையும் உன்னை வந்து காணும்போதெல்லாம் உன்னிடத்துள்ள பல புஸ்தகங்களையும் இனாம் வகையில் சுருட்டிக்கொண்டு போகிறவனிடம் ஒரு புஸ்தகத்தைக் கிரயத்துக்கே கண்டிதமா யிருந்து விற்றுவிட்டால், மறுபடி உன்னிடம் புஸ்தகப்பரிசு கேட்கவரான். நீயும் அடுத்த தடவை தாராளமாக வாய்திறந்து "விலைக்குத்தான் புஸ்தகங்கள் தரமுடியும்" என்றும் சொல்லிவிடலாம். அதற்கான நெஞ்சுத் துணிவும் உனக்கு உண்டாகிவிடும். இப்படிப் பழகிக்கொள்.

னேன். அறிவின் தீர்மானங்களை மறுக்கக்கூடிய அறிவினுமுயர்ந்த சக்திமானான பரம புருஷன் ஒருவன் இருக்கலாகாதோ என்றும் தோன்றிற்று.

ஃ

அதன் மேல் நான் நினைத்ததாவது:—நித்திரை செய்யும் போது, அந்த நித்திரையிலே சொற்பனங்களின் மூலமாக நீ காணும் காட்சிகளை உண்மையும் பொருத்தமு முள்ளவைகளாக நீ அந்த நித்திரையின்போது கருதி, அவைகளின் உண்மையைப் பற்றிச் சந்தேகப்படுகிறதேயில்லை. பிறகு நீ விழித்த பின், அக் காட்சிகள் வெறும் தோற்றங்களேயன்றி வேறொன்றுமல்ல வென் பது உனக்குத் தெரிய வருகிறது.

ஃ

இப்படியே, நீ விழித்திருக்கும்போது உணருகிறவைகளும் அறிகிறவைகளும் ஆகிய எல்லாம் உண்மையாகவே இருக்கின்றன வென்பதற்கு—அப்படி நீ நிச்சயிப்பதற்கு—என்ன ஆதாரமிருக்கின்றது? அவ்விதமாகவே உணருதலும் அறிதலுமானவைகள் நடக்கிற இப்போதுள்ள உன் விழிப்புநிலை சம்பந்தப்பட்ட மட்டும் அவைகள் எல்லாம் உண்மையென்றே நீ சொல்லலாம்.

ஃ

ஆனால், நித்திரையிலே சொற்பனத்தில் நீ காணுகிற உணருகிற காட்சிகளுக்கு, விழிப்புநிலையிலே நீ அறிந்தவைகளே சொற்பனத்திலும் பலவிதமாகத் தோன்றி, அந்த சொற்பனங்களுக்கு நீ விழிப்பு நிலையில்கண்டறிந்தவைகளும் எண்ணியவைகளுமேகாரணமாகி,இப்படி சொற்பனக் காட்சியின் அவஸ்தைகளுக்கு விழிப்பு நிலையின் உணர்ச்சிகள்எவ்வாறு சம்பந்தமுள்ளதாக ஏற்பட்டதோ-அப்படியே, விழிப்புநிலையில் நீ உணருகிற-அறிகிற—அனுபவிக்கிறஅவஸ்தைகளுக்கும், அந்த விழிப்பு நிலைக்கும் மேற்பட்ட இன்னொரு மகத்தான அவஸ்தை—ஆட்டுவிக்கும் பொருள்—இருக்கவும் கூடியதே.

ஃ

இந்த மகத்துவமிக்க உயர்ந்த அவஸ்தையோடு விழிப்பு நிலையை ஒத்துப் பார்க்கும்போது, அந்த விழிப்பு நிலையானது சொற்பனாவஸ்தையைப்போல் கடைசியில் யாவும் பொய்யே யென்றும், விழிப்பு நிலையில் கண்டதும் அனுபவித்ததுமாகிய யாவும் உண்மையல்ல வென்றுமே நிச்சயிக்கும்படியாகிறது. அதாவது, சொற்

. காலில் விழுந்து கெஞ்சியும் கவனிக்காமற்போன—தங்களின் பிடிவாதச் சிந்தையையே காட்டிய,—கல்நெஞ்சினர்கள் பலர் உண்டு. பிறரது காலில் விழத்தகாத மகிமையுடையோர் விழுந்து கெஞ்சிய சம்பவத்தைக் கடவுள் சகிப்பதில்லை. தம் காலில் விழுந்தவர்களிடம் இரக்கம் காட்டாதவர்களைக் கடவுள் பல சோதனைகளால் அழித்து ஸர்வநாசம் செய்துவிடுகிறார். இது அனுபவம்.

பன நிலைக்கும், விழிப்பு நிலைக்கும் மேற்பட்ட மகத்துவ மிக்க மற்றொரு தனியான நிலை இருக்கிறதென்றும், அதுவே அழியாத உண்மையானதென்றும் தோன்றுகிறது.

4

என்னுடைய நிலைமையைப்பற்றிச் சிந்தனை செய்தபோது, இந்த உலகத்தோடு பல்லாயிர பந்தங்களாற் பிடிக்கப் பட்டவனாகவும், எப்பக்கங்களிலுமிருந்து செய்யப்படும் பல சோதனைகளுக்கும் உட்பட்டவனாகவும் நான் இருப்பதாகத் தெரிந்தேன். அதன் மேல் என்னுடைய செயல்களை ஆராயப் புகுந்தேன். அவற்றுள் போதனையும் கல்வி கற்பித்தலும் சிறந்தவைகளாயிருந்தன. இந்தக் கல்வியும் ஞானத்துக்கு அவ்வளவுக்கு வழி செய்வதாயில்லையென்று தெரிந்தேன். எனக்கு ஒருமகிமையைத் தேடிக்கொள்ளும் நிமித்தமே இவற்றிலெல்லாம் நான் பயிற்சி செய்யப்பட்டேனென்றும் உணர்ந்தேன். ஆகவே, என்னுடைய சொத்துக்களை யெல்லாம் தானம் செய்து விட்டு, பாக்தாது (Bagdad) நகரத்தை விட்டு நீங்கி, ஸிரியா என்ற (Syria) ஊரில் ஏகாந்தமாக ஒதுங்கி வாழ்ந்தேன். அங்கு ஆன்ம விசாரணை செய்யப் புகுந்து, தனிமையாக மனத்தோடு போராடி, ஆசைகளை வெல்லமுயன்று, ஹிருதய சுத்தி செய்வதிலும், மறுமையை யடைவதற்கு ஆயத்தம் பண்ணுவதிலும் இரண்டு வருடம் கழித்தேன்.

5

இது உண்மையும் சிரத்தையும் கொண்ட ஒருவருடைய மனப் போராட்டத்தை நன்கு விளக்குகின்றது. அவர் பின் வருகிற முடிவைக் கண்டுபிடிக்கிறார்.

1. முதலாவது குழந்தைப்பருவம்:—கண் முதலிய அறிகிற புலனுணர்ச்சி யொன்று மட்டுமே நிகழும் பருவம்.

2. இரண்டாவது பருவம் ஏழாவது வயதில் ஆரம்பிக்கிறது. முன் சொன்ன குழந்தைப் பருவத்திலே புலனுணர்ச்சியால் அறியப் பட்டவைகளை இந்தப் பருவத்தில் பகுத்தறிய முயல்கிறோம்.

3. மூன்றாவது பருவம் தெளிகிற பருவம். அதாவது, இன்னது விலக்கக் கூடாதது, இன்னது கூடியது, இன்னது மற்ற எதன் ஆதாரத்தையும் வேண்டாதது, என்று தெரிந்து கொள்வதோடு,

---

எந்தப் பிணியும் இராக்காலத்தில்தான் அதிக உபாதை செய்கிறது. இரவில்தான் நோயாளிக்குப் பசி யதிகம். தவிப்பும் அதிகம். அந்த சமயம் அவன் மனைவி மக்களெல்லாம் வரிசையாகத் தூங்கிக்கொண்டிருப்பதையும், தன்னருகே எவரும் இராததையும் பார்க்கையில், குடும்பத்துக்கு ஓயாது உழைத்த—உழைக்கிற அந்த மனிதனின் மனம் என்ன பாடு படுமோ?

மனத்துக்கெட்டாத எல்லா உயர்ந்த விஷயங்களையும் அறிந்து கொள்ளக் கூடியதான விவேகம் உண்டாகிற பருவம்.

4. நான்காவது பருவம் ஞானக்கண்ணுகிய வேருெரு கண் திறக்கப்படும் பருவம். இந்தப் பருவத்திலே, மற்றவர்களுக்கு மறைப்பட்டிருப்பவைகளாயுள்ள எதிர்காலத்து நிகழும் எல்லாவற்றையும் அறியக் கூடுமானதாகிறது. இதுவே தீர்க்க தரிசன சக்தி.

6

இவ்வாறு ஆலகசாலி என்ற மகான் நம்முடைய ஆயுள் காலத்தில் அனுசரிக்கவேண்டிய வாழ்க்கை நெறிகளுக்குத் தத்துவ சாஸ்திர ரீதியான ஆதாரம் கண்டு பிடித்து, மதத்தையும் தத்துவ சாஸ்திரத்தையும், (ஒன்றுக்கொன்று சாதாரணமாகத் தோன்றுகிறபடி, விரோதமுள்ளவைகளல்லவென்று காட்டி) ஒற்றுமைப்படுத்துகிருர். நிச்சயமாகவே, இந்த விவகாரத்தை இவர் கூறியதிலும் அதிகத் தெளிவாக மனதில் அழுந்தும்படி கூறுவது அசாத்தியமே. தம் சொந்த அனுபவத்தை, மற்ற யாவரிலும் நன்கு தெரிவிக்கும் வார்த்தைகளைக்கொண்டு மேற்சொல்லியவாறு விளங்கக் கூறியிருப்பது அற்புதமாகும்.

அவசரப்படேல்—நிதானி.

நேற்று உட்கார்ந்திருந்த அதே சாய்வு நாற்காலியில் நண்பன் அயர்ந்து தூங்குகிருன். நேற்று போர்த்திருந்த அதே போர்வையை அவன் போர்த்திருக்கிருன். அவனைக் காணச் சென்ற நேசன் அருகில் அமர்ந்து அவன் கரங்களைப்பற்றி ஆட்டுகிருன். தூங்கிய உருவம் விழித்துப் போர்வையை விலக்கிக்கொண்டு பார்த்து அந்நிய ஆடவன் அருகில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு திடுக்கிடுகிறது. நேசனும் எவரோ ஒரு பெண் என்று அறிந்து பிரமித்து எழுந்திருக்கப் பார்க்கிருன். அதேசமயம் அப்பெண்ணின் கணவனுன அன்று அவ்வீட்டுக்கு வந்த புது விருந்தாளி அங்கு வந்து பார்த்து அப்பெண்ணின் கையைத் தொட்டவனைப் பளீர் என்று அறைகிருன். அறை விழுந்த சமயம் அவ்வீட்டுக்காரனுன நண்பன் அங்கு ஓடி வந்து விஷயமறிந்து சமாதானம் செய்கிருன். கேட்காமல் உள்நுழைந்த சிறு சம்பவத்தால் எவ்வளவு அவமானம்?

நட்பின் அநுபவங்கள்.

1. உன்னைப் புகழ்ந்து பேசுகிற எவனும், நீ கஷ்டத்தை அடைந்த போது உனக்கு உதவக்கூடிய நேசனாகவோ, பந்துவாகவோ ஆகமாட்டான்.

2. வெறும் வாயால் உனக்கு வெகு பிரியம் உள்ளவனாக இருப்பதாய்ச் சொல்லுவது காற்று வீசுவதைவிடச் சுலபமானதே.

3. ஆபத்தில் உதவக்கூடிய உண்மையான நண்பர்களைக் காணுதல் தான் கஷ்டம்.

4. செலவிடக் கையிலும் பெட்டியிலும் பணம் உள்ளவரையும் உனக்கு உன் தெருவிலுள்ள ஒவ்வொருவனும் வெகு நேசனாய் இருப்பதாக நடிப்பான்.

5. உனது அதிகமான செலவுகளால் உன் சொத்துக்கள் குறையத் தலைப்படுமானால், அப்பொழுது உனக்கு ஏற்படுகிற கஷ்டங்களுக்கு எவனுமே உதவி செய்ய வரான்.

6. மட்டுக்கு மிஞ்சி அதிகச் செலவுகள் ஒருவன் செய்வோனாக இருந்தால், "ஆகா இவன் அரசனாக இருக்கக் கூடாதா? அப்போது இன்னும் அதிகமாகச் செலவிடுவானே; ஐயோ! பாவம்" என்று இவ்விஷயமாய்த் தித்திப்பான பேச்சுகள் பல பல சொல்லி, அவனை மகா தயாளு என்று கொண்டாடுவார்கள்.

7. என்றாலும், லக்ஷ்மியின் கிருபை ஒருதடவை உன்னை விட்டுப் போய்விடின், உனது நண்பர்கள் புகழ்ந்த புகழ்ச்சிகளும் அத்துடன் போய்விடும்.

8. முன்பு உன்னுடன் கூடிப் பழகி நேசித்து சிலாகித்து உயர்த்தினவர்கள் உன் சகவாசத்தைவிட்டு விலகிக்கொண்டு மறைந்தொழிவர்.

9. உண்மையாகவே உத்தம சத்திய நண்பனாக இருப்பவன் உனக்கு நீ துயரப்படும் நாளில் துணையாக முன்வந்து நின்று காப்பான். நீ கவலைப்படுகையில் அவனும் கண்ணீர் மயமாகித் தனக்கு வந்த கஷ்டம் போல் கதறுவான். நீ துன்பத்தோடு நித்திரையின்றி விழித்துக் கிடக்கையில், அவனும் தன் தூக்கத்தை விட்டவனாய் உன்பக்கமிருந்து ஆறுதல் உரைப்பான். இவ்விதம் உன் மனத்தில் உண்டாகும் ஒவ்வொரு சஞ்சல கஷ்டங்களின் போதும் உனது யதார்த்த நண்பனாகிய அவனும் உன் கஷ்டத்தில் தானும் ஓர் பங்கைப் பெற்றுக் கொண்டு என்றும் உன்னை விட்டுப் பிரியாத துணையாக இருப்பான்.

10. ஆகவே, மனப்பூர்வமான உண்மை நட்பையும், வெளியே சிரித்து உள்ளே பகைத்திருப்பவனையும், சுயநலக்கருத்தோடு சூழ்ந்து சுற்றித்திரியும் நேசச்சார்பற்றவனையும், மேற்சொல்லிய குறிப்புகளின் மூலமாக அறிந்து எச்சரிக்கை பெறக்கடவாயாக.

இன்றைக்கு அவர்கள் உன்னை விரோதித்துக்கொண்டாலும், அவர்கள் பிறகு படும் அனுபவங்களால் நீயே யாவரினும் மேலான நல்ல மனிதனென்றும் கண்டு கொள்கிறார்கள்.

சந்தேகப் பிசாசின் சங்கடம்.


(ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி அம்மாள்.)

"நண்பா! என்னுடைய மாமனிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. நான் இன்று சென்று அடுத்த வாரத்திலேயே திரும்பி விடுவேன். அங்கு எனக்கு முக்கியமான வேலை இருக்கிறது. ஆகையினால் நாளையதினம் நடக்கப்போகும் பர்தாட்டத்திற்கு நான் வரவியலாது. அதற்காக இதோ கடிதம் எழுதியிருக்கிறேன். இதை நீ அவர்களிடம் கொடுத்துவிடு" என்று கட்டுமெத்தான தேக வலிமையும், இளமை நிறைந்த பொலிவும், காந்தியும் ஒன்று கூடிய 22-வயதுடைய கேசவன் என்கிற வாலிபன் தன் நண்பனிடத்தில் அக்கடிதத்தைக் கொடுத்துவிட்டு ஊருக்குச் செல்லக்கூடிய பிரயாணத்துடன் எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று டிக்கட்டு பெற்றுக்கொண்டு வண்டியி லமர்ந்தான்.

ஃ

குறித்த நேரத்தில் வண்டி செங்கற்பட்டில் வந்து நின்றது. உடனே கேசவன் வண்டியினின்று இறங்கி ஓர் ஜட்கா வைத்துக்கொண்டு செங்கல்பட்டுக்கு அருகாமையிலுள்ள நத்தம் என்கிற ஊருக்குச் சென்றான். அவனைக் கண்டதே எல்லோரும் மிக்க மகிழ்வோடு வரவேற்று உபசரித்தார்கள். கேசவனுடைய மாமனின் மகளுக்கு இவனுடைய உறவின் முறையிலேயே மணம் செய்திருந்தமையினால் கேசவனுடன் அந்தப் பெண் எப்போதும் சகஜமாகப் பேசிக்கொண்டு வித்தியாசமின்றி இருப்பது வழக்கம். அன்று கேசவன் வந்தவுடனே அம்புஜம் என்கிற அந்தப் பெண் வாருங்கள்! வாருங்கள்! ஊரில் எல்லோரும் சவுக்கியமா! கடிதம் போட்டால்தான் வருவது, இல்லையேல் வருவதில்லை என்று நினைத்துக் கொண்டிருந்தீர்களா! ஸ்நானம் செய்துவிட்டுச் சாப்பிட வாருங்கள் என்று கூறி அழைத்தாள். கேசவனும் அவ்வாறே போஜனத்தை முடித்துக்கொண்டு எல்லோருடனும் பேசிக்கொண்டே இருந்தான்.

ஃ



கேசவன் இதற்கு முன்பு இரு முறைகளில் வந்திருந்தபோது அம்புஜம் சகஜமாக "அத்தான்! எனக்கு சோப்புகள், முகத்திற்குப் பூசும் பவு

நமது சொந்த சங்கதி, அல்லது பார்த்தறிந்த சங்கதி கலவாதது ஒரு அனுபவமாகாது. அந்த அனுபவத்தை உப்பில்லாப் பண்டத்திற்குச் சமமாகவே ஒப்பிட முடியும்.

டர், ஸ்நோ, வாசனை செண்டுகள், தைலம் இவைகள் வாங்கிக் கொடுங்கள் இங்கு யாரும் வாங்கிக் கொடுப்பாரில்லை. மாட்டேனென்று மறுக்கின்றனர் என்று கேட்டிருந்தாள். அதையே இப்போதும் நினைத்து ஊஞ்சலில் உட்கார்ந்திருந்த கேசவனைப் பார்த்து, அத்தான்! எனக்கு ஒன்றும் கொண்டுவரவில்லையா! நான்கேட்டதை மறந்துவிட்டீர்களா" என்று கேட்டாள். அது கேட்ட கேசவன் "அம்புஜா! நான் மறக்கவில்லை. இவ்விடத்திலுள்ளவர்கள் நம்மைப்பற்றி என்ன நினைத்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிந்துகொண்டேன். நாம் உடன்பிறந்தவர்களைப்போன்று களங்கமற்றிருப்பது சர்வேச்வரனுக்குத்தான் தெரியும். ஆகையினுல் நான் வாங்கிக்கொண்டு வரவில்லை. நானே இங்கு முக்கியமான வேலை இருப்பதால் வந்தேனேயன்றி ஒரு வேலையுமில்லாது இருப்பின் வந்திருக்கமாட்டேன். நான் வாங்கிக் கொடுப்பதால் உனக்கு யாதேனும் தீங்காக முடியுமோ என்று நான் பயந்தே வாங்கிக் கொண்டுவரவில்லை. சிலர் எவ்வளவு தாராளமாகப் பழகினுலும், ஒருவருடைய குணங்களையும் யோக்யதையையும் அறிந்துகொள்ளாத மூடராகிவிடுகிறார்கள்" என்றான்.

ஃ



இதைக் கேட்ட அம்புஜம் ஏதும் பேசாது போய்விட்டாள். அவன் கேசவனிடத்தில் பேசிக்கொண்டிருந்ததைப் பலகணி வழியாய் அவளுடைய நாத்தி பார்த்துவிட்டுத் தன் தாயினிடத்தில் சென்று மெல்ல தீ மூட்டினுள். அதைக் கேட்ட தாய் ஆத்திரங்கொண்டு "அந்தப் பயல் வருவதே எனக்கு இஷ்டமில்லை. அவனுடைய கபடத்தை யறியாது இந்த அசட்டு அம்மாஞ்சி வரவழைத்து விடுகின்றது. இருக்கட்டும், சமயம் பார்த்து நான் தக்கபடி செய்கிறேன்" என்று உறுமினுள்.

ஃ

கேசவன் வந்த காரியம் முடிந்தது. ஊருக்குச் செல்வதாகப் புறப்பட்டு விட்டான். கேசவனின் மாமன் மனைவியும், மகளும் சரியானபடி பேசவில்லை. இதுவே கேசவனுக்கு வருத்தமாகிவிட்டது. அதோடு எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு ஊருக்குச் சென்று விட்டான். அவன் சென்ற பிறகு அம்புஜத்தின் மாமியார் தன் குமாரனை நோக்கி, மாதவா! இந்தப் பயலை நான் யோக்யனென்று நினைத்தேன். அவன் சுத்த அயோக்யன். உன் மனைவியை நம்புவதில் எனக்குச் சற்றும் பிடித்தமில்லை. அவர்களிருவரும் இருந்த மாதிரி என்னை முற்றிலும் சந்தேகிக்கச் செய்துவிட்டது. இனி ஜாக்கிரதையாக இரு. அவனிடம் உன் மனைவி சற்றும் அச்சமின்றி சோப்பு, சென்டு முதலிய தளுக்கு மினுக்கு சாமான்கள் வாங்கிக்கொடு என்று கேட்ட கண்ராவி மிகவும் கேவலமாக இருந்தது. அதை நாங்கள் கண்ணுல் கண்டோம் என்று தூபம்போட்டு சந்தேகமென்னும் புகையை நன்ருகக் கிளப்பிவிட்டாள்.

ஃ

இது கேட்ட மாதவனின் மனம் கலங்கியது. ஏற்கெனவே தன்

மனைவி கேசவனுடன் பேசியதில்
சந்தேகங் கொண்டிருந்ததற்கனுகூல
மாக தன் தாயின் மொழியும் சேர்ந்த
தால் அம்புஜத்தினிடத்தில் மாதவன்
அன்று முதல் முற்றும் வித்யாசமாய்
நடக்கத் தொடங்கினான். சரியாகப்
பேசுவதில்லை. சயனத்தை வேறிடத்
தில் மாற்றிக்கொண்டான். இந்த
உண்மையான காரணத்தை யறியாத
அம்புஜம் மிகவும் விசனத்தையடைந்
தாள். மாதவன் மறுதினம் அகஸ்
மாத்தாக, தன் மனைவியின் பெட்டி
யைத் திறந்தான். அதில் சோப்புப்
பெட்டியுடன் சோப்பு ஒன்று. ஸ்னோ
பாட்டில் பவுடர் டப்பி, செண்டு,
மணிபர்ஸ் முதலியன இருப்பதைக்
கண்டதும் அவனுடைய சந்தேகம்
நன்றாகப் பலத்து உச்ச நிலைமையை
அடைந்து விட்டது. கண்கள்
சிவந்தன. பற்களை நரநாவென்று
கடிக்கின்றான். உடனே தன் தாயா
ரை அழைத்து அம்மா நீ சொல்லிய
தெல்லாம் உண்மை, இதோ பார்.
அந்த கிராதகியின் பெட்டியில்
இவைகள் இருக்கின்றன. ஐயோ!
சண்டாளி வெகு உத்தமியைப்
போன்று நடித்து நம்மை முற்றிலும்
ஏமாற்றிவிட்டாளே! ஹா! இதோ
இப்போதே அவளை எனக்குத்-துரோ
கம் நினைத்த கொலைபாதகியை—ஒழி
த்து விடுகிறேன் என்று கூறி ஆத்
திரத்துடன் சமையலறையிற் புகுந்
தான்.

ஃ



அம்புஜம் அப்போதுதான்
காப்பி வடிக்கட்டிக் கொண்டிருந்
தாள். மாதவன் வெகு கோபத்தோடு
அம்புஜத்தின் எதிரில் சென்று சண்
டாளீ! கெடுமதி கொண்ட படுபாவீ!
த்ரோகி! உன் மேனிக்கு மினுக்குக்
சாமான்கள் எத்தனை சுகமாக இருந்
ததோ அதற்குமேல் இதுவும் இருக்
கும் என்று கூறிக்கொண்டு அந்தக்
காப்பி டிகாஷனை எடுத்து திடீ
ரென்று அம்புஜத்தின் தலைமீது
கொட்டிவிட்டு அவள் கையைப்
பிடித்துத் தடதடவென்று இழுத்துக்
கொண்டு சென்று, அடீ! கபடீ!
கள்ளீ! இந்த உயர்தரமான வாசனை
சாமான்களை உன் கள்ளக் காதலன்
வாங்கிக் கொடுத்ததை நானறியமாட்
டேன் என்று நினைக்காதே! இவை
களை மட்டும் பூசிக்கொண்டால்
போதுமா! எப்போதும் பிரியாமலிரு
க்கும் பொருட்டு அந்தக் கேசவனுடன்
நீயும் தாராளமாகச் சென்று இருக்க
லாகுமே! என்று பின்னும் ஏதேதோ
தாருமாறாகக் கூறிக் கர்ஜித்தான்.

ஃ

அப்போது அவன் தாயும் தமக்
கையும்கூட ஒத்துப் பாடினார்கள்.
கபடமற்ற—நிஷ்களங்கமான மனத்
தையுடைய—அபலையாகிய அம்புஜம்
திடீரென்று தன்னாயகன் அபாரமான
சீற்றங் கொண்டு சூடான டிகாஷனை
எடுத்துத் தலைமீது கொட்டியதும்
சூடு தாங்காது தத்தளித்துத் துடி
த்து விட்டாள். அதோடு அவளைப்
பெட்டியின் அருகே இழுத்துக்
கொண்டுவந்து இவைகளெல்லாம்
உனக்கு எங்கிருந்து வந்ததடி என்று
கர்ஜித்தான். அம்மொழிகளைக் கேட்
டதும் அம்புஜ மடைந்த துன்பத்திற்
கும் விசனத்திற்கும் எல்லையே
இல்லை. தன்மீது அடங்காத ஆத்தி
ரம் உண்டாயதற்குக் காரணத்தை

அப்போதே தெரிந்து கொண்டாள். கண்ணீர் பெருகியவாறு, நாதா! நேற்றுமுதல் தாங்கள் வித்தியாசமாயிருப்பதன் காரணத்தை இப்பொழுதே உணர்ந்தேன். கடவுள்மீது ஆணையாக நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. இந்த சாமான்களையும் இந்த காகிதப் பெட்டியுடன் அத்தான் ஊஞ்சல் பலகையின்மீது வைத்துவிட்டு மறந்துவிட்டார்போலிருக்கிறது. அதை நான் எடுத்து என் பெட்டியில் வைத்தேன். இவ்வளவுதான் எனக்குத் தெரியும். என்றாள்.

ஃ

இது கேட்ட மாதவன், ஓகோ! இவைகளை நீ பெற்ற விவரத்தை அறியாத மூடத்தினிடமல்லவா உன் புளுகு மூட்டையைக் கொட்டியளக்கலாம். இதோ இந்த மணிபர்ஸில் 150 ரூபாய் வைத்திருக்கிறது. இதையும் வைத்து மறந்துவிட்டானல்லவா! சிச்சி! கள்ளி. என் முன் நில்லாதே என்று கண்டவாறு திட்டி ஙயைப் புடைத்துவிட்டான். அருகிலிருந்தோறும் அனுகூலிகளே!

ஃ

நிரம்பவும் சூடான காப்பித் தண்ணீரினால் தேகம் வெந்துவிட்டதோடு பலமாக அடித்துவிட்டதனால் மிகவும் சுகுமாரமான தேகத்தையுடைய அம்புஜம் இரு பாதைகளையும் தாங்காது மூர்ச்சையாகி விழுந்துவிட்டாள். மாதவன் சந்தேகப் பிசாசின் ஆட்டத்தில் கேசவனுக்குப் பின் வரும் கடிதத்தை எழுதினான்.

ஃ

கேசவா! நீ ஓரிடம், உன் காதலி அம்புஜம் ஓரிடமாக இருக்கவேண்டாம். ஐயோ பாவம்! மிக்க கஷ்டப்படுகிறாய். உடனே உன் ஆசை நாயகியை அழைத்துச் செல்லலாம். நீ என்னைத் துரோகம் செய்த பாவி என்பதை அறிந்துகொண்டேன். இனி உனக்குமெனக்குமுள்ள பாந்தவ்யம் விட்டுத் தொலைந்தது.

ஃ



இக்கடிதத்தை எழுதித் தபாலில் போடுவதற்காகச் சென்றான். அப்போது தபால் சேவகன் ஒரு கடிதத்தை இவனிடம் கொடுத்தான். உடனே அதைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான்.

என் அன்புள்ள மாதவா! நமஸ்காரம். நான் நேற்று ரயிலுக்குவரும்

ஒருவருக்கு ஏகுமாரனாக ஒருவன் இருந்தால், அவன் ஏதோ டம்பமாக நடப்பதுபோல் மற்றவர் முன்பாகத் தாழ்த்திப்பேசிச் சொட்டு வார்த்தை சொல்லி, தங்களை மேதாவிகள்போல் நினைத்துக்கொள்கிறார்கள். இந்த மேதாவிகள் அக்குமாரனைப்போல் தம் தந்தைக்கு ஏக புத்திரனாய் ஐசுவரியத்துடன் இருந்திருந்தால் அவனுக்கும் மேலாகத் தாண்டவமாடியிருக்கலாம். பிறர் முன்பு ஒருவரை இறக்கித் தாழ்த்திப் பேசுவது ஒழுங்காகாது. வாலிபன்தானே என்று கேவலம் செய்யவொண்ணாது.

அவசரத்தில் எனது சோப்பு, பவுடர் ஸ்நோ, செண்டு, மணிபர்ஸ், அதில் இன்று எனக்கு நெல்லு விற்றுவந்த பணமும் ரசீதும் இருக்கின்றன. இவைகளை ஒரு பச்சை நிறமுள்ள காகிதப் பெட்டியுடன் என் பெட்டியில் வைத்த நினைவாக அவசரத்தில் வந்துவிட்டேன். அப்பெட்டியை ஊஞ்சல் பலகையின்மீதோ, அல்லது உனது கட்டிலின்மீதோ வைத்ததாக நினைவு. தயவு செய்து அவைகளை உடனே அனுப்பிவிடு. பெட்டியைத் திறந்து பார்த்த பிறகே நான் மறந்து வைத்துவிட்டதை அறிந்தேன். உனக்குச் சிரமம் கொடுப்பதற்கு மன்னிக்கவும்.

இங்ஙனம்: கேசவன்.

என்றதைப் படித்ததும் மாதவனின் மனம் சடக்கென்று மாறி கேசவன் மீதும் தன் மனைவியின்மீதும் தான் எண்ணிய குற்றத்தைத் தெட்டென உணர்ந்தான். ஆகா! நாம் சற்று பொறுமையுடன் யோசிக்காமல் சந்தேகப் பிசாசின் அடிமையாகி அம்புஜத்தை அனியாயமாகக் கொலை செய்யாத குற்றமாகச் செய்துவிட்டேனே. ஆ! நல்ல வேளையாக நமது கடிதம் போடுவதற்கு முன்னர் இக்கடிதத்தைக் கடவுள் நமக்குக் கொடுத்தாரே! சீச்சீ! என்ன மடத்தனமாகப் பெண்பிள்ளைகளின் மதிகெட்ட வார்த்தையைக் கேட்டு சந்தேகங்கொண்டு சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டோம். குற்றமற்ற அம்புஜத்தை அனியாயமாகத் துன்புறுத்திவிட்டேனே என்று தன்னையேதான் நொந்துகொண்டு வெகு விரைவில் வீடுவந்து சேர்ந்தான். தன் தாயாரையும் தமக்கையும் அழைத்து இக்கடிதத்தைப் படித்துக் காட்டி, பின் அவர்களைத் திட்டிவிட்டு அம்புஜத்தினிடத்திற்கு ஓடினான். தேகம் முற்றும் கொப்பளித்துவிட்டது. அடித்த அடியினால் வீக்கமும் கண்டுவிட்டது. அம்புஜம் மரணபாதையுடன் ஐயோ! அப்பா! கருணாநிதியே! என் தலைவிதி இப்படியா இருந்தது. ஒரு பாபமும் அறியாமல் இருக்கையில் என்மீது என் கணவனுக்கு இத்தகைய சந்தேகம் என் உதிக்கச் செய்தாய்? என்னால் இன்னேயைச் சகிக்கக் கூடவில்லையே! என்று வாய்விட்டுக் கதறிக் கொண்டிருக்கையில் மாதவன் அவளிரு கைகளையும் பற்றிக் கொண்டு ஹா! அம்புஜம்! நான் மதியீனமாக உன் விஷயத்தில் மகா கொடிய தவறுதலைச் செய்துவிட்டேன். நீ என்னை மன்னிக்க வேண்டும். இதோ கேசவனின் கடிதத்தைப்பார். கண்மணி! உன் தேகத்தை ரணமாக்கிய மகா பாவியாகிவிட்டேன் என்று பின்னும் ஏதேதோ வார்த்தைகளைக் கூறி கண்ணீர் உதிர்த்தான். ஃ

இதுகேட்ட அம்புஜா இவ்விதமான சம்பவம் நடக்குமென்று கனவிலும் நினைக்கவில்லையாகையினால் நிரம்பவும் ஆச்சரியமடைந்து தேகம் பூரித்தாள். தன் மீது மூண்ட பழி நீங்கியதைக் கேட்டதே தன் நோய் தீர்ந்ததாக எண்ணி மட்டற்ற மகிழ்ச்சியை அடைந்து நாதா! சந்தேகம் செய்த சதி இது. வேறில்லை. அநியாயமாகத் திடீரென்று யாரையும் சந்தேகித்து விடக் கூடாது. என் கன்மத்தினால் இது

பலவித உபசாரங்களையும் உதவிகளையும் பெற்றுகொண்டு ஊருக்குச் சென்றவன், தன்னை ரயில் வரைக்கும் வந்தனுப்பியதையும் மறந்துவிட்டுக் கடிதமே எழுதாது மௌனமாயிருந்துவிடின், அவன் ஒரு ஸமத்காரமான சுயநலஸ்தனாக இருக்கலாம்.

ஒருகனவுபோலத்தோன்றியது. இது இவ்விதமே மறைந்துவிடட்டும். இனியேனும் சந்தேகத்திற்கு அடிமையாகாதீர்கள் என்றாள்.

ஃ

கோள்மூட்டிய பேய்கள் கடிதம் வந்த சங்கதி அறிந்ததும் தங்களின் திருவாயை மூடிக் கொண்டார்கள். மாதவன் வெகு கனிகரத்துடன் அம்புஜத்திற்கு வைத்தியம் செய்ததில் ஒரு மாதத்திற்குள் அம்புஜம் பழைய படியானாள். மாதவனின் சந்தேகத்தினால் நேர்ந்த சங்கடத்தை எப்படியோ தெரிந்துகொண்ட கேசவன் மிக்க வருந்தினான். மாதவன் கேசவனிடத்தில் தனது தப்பிதத்திற்காக மன்னிப்பு வாங்கிக் கொண்டான். பிறகு மாதவனும் அம்புஜமும் தேனும் பாலும்போல, பூவும் மணமும்போல இல்லறம் நடத்தலானார்கள். அவர்களின் அன்பின் விருக்ஷத்திலிருந்து உதிர்த்த அருங்கனியாகிய ஆண் குழந்தைக்குப் பெற்றோர்கள் ஆனார்கள். சுபம்.

ஸம்பிரதாய ஸ்துதி.

ஒருவரையொருவர் கண்டால் "க்ஷேமமா?" என்று கேட்பதும், இன்னொருவர் ஊரிலிருந்து வந்து நான்கு நாளாயினவென்று தனக்குத் தெரிந்திருந்தாலுங்கூட எதிரில் வரும்போது "எப்போது வந்தீர்கள்?" என்று விசாரிப்பதும், வழியில சாதாரணமாய்ச் சந்திக்கும்போது புன்சிரிப்பு தெரிவித்துக்கொள்ளுவதும், வீட்டிற்கு வந்தவர்களை வாருங்கள் என்பதும், மனப்பூர்வமாயில்லாவிடினும் ஒப்புக்காகவாவது அவர்களின் இவர்களின் சுகலாபங்களைத் தன் வீட்டுக்கு வந்தோரிடம் வினவுவதும், புறப்பட்டவர்களை இன்னும் இரண்டுநாள் இருந்து போகிறதுதானே என்பதும், ஒரு அதிகாரிக்கு அவரது தயவு வேண்டி நடத்துகிற விருந்தில், அவரை ஆகாயத்தில் தூக்கி வைத்துப் பேசுவதும் ஆகிய இவைபோன்றன யாவும் சம்பிரதாய ஸ்துதியாகும். ஒருவன் பிறரது மணம், மரணம் போன்றவைகட்குப் பணத்தைச் செலவிட்டுக்கொண்டு போய் விசாரித்து வருகிறான். அந்தப் பிறரோ இந்த ஒருவனது சுபாசுபங்கட்கு முக்காலணா செலவில் ஒரு கார்டு எழுதிவிட்டுத் தப்பித்துக்கொள்கிறார்கள். அதற்குப் பிறகு இவனும் அந்தப் பிறரின் சந்தோஷ துக்கங்கட்கு முன்போலப் புறப்பட்டுச் செல்லாமல் தானும் ஒரு கார்டு எழுதிப் பல்லிளித்துவிடுகிறான். இது பதிலுக்குப் பதில் செய்கிற சம்பிரதாய ஸ்துதியாகும்.



1. சிலர் விளக்க இருந்த தீங்கு பயங்கரமாயினும், அது பலிக்க இருந்ததாயினும், கடவுள் கிருபையால் தவறிவிடுகின்றது.

2. எவரிடத்திலும் பேதம் வேண்டாமென்ற ஸமரஸ நோக்குடன் மனப்பூர்வமாய் அவர்களை வரவேற்று உபசரித்து அனுப்பிவிடுவதே சரி. கிட்டாதிருந்தால் அதுவே போதும்.

3. நமது சார்பில் இல்லாதவர்கள் என்றால், "நமக்கு விரோதமாகயிருப்பவர்கள்" என்றுதான் இக்காலத்தில் பொருள் செய்ய வேண்டும்.

4. குழந்தைக்குப் பக்ஷணம் வாங்கித் தருதற்குக் கையில் ஒரு காசும் இன்மையால், வீட்டிலிருந்த அப்பளத்தைச் சுட்டுத் தந்துவிட்டு, இவ்வளவு தரித்திரமாவென்று வயிறு எரிந்தாள் ஒரு பெண்.

5. மற்றவர்கள் தங்களின் துயரத்தை அழுது அழுது தீர்ப்பாரா இல், நூலாசிரியர்கள் தங்களின்வேதனைகளை எழுதி எழுதித் தீர்த்துக் கொள்வர். "துக்கப்பட்டு என் செய்ய?"—என்று தேற்றுவது—அத்துக்கத்தை நெஞ்சிலே குத்தியது போன்று உணராத கபோதிகளின் மொழி. அவர்களின் சொந்த சங்கதியில் அவ்விதம் துக்கம் வந்தால் அழுவார்களா?—சிரிப்பார்களா? மறைந்தவர்கள் கைதொட்டுப் பழகி வைத்துச் சென்ற வஸ்துக்கள்தான் அவர்களின் உருவத் துண்டுகள்; ஞாபக நிலையங்கள். அவற்றைக் கொண்டுதான் மனது தேறவேண்டும்.

6. வேலை செய்யத் தொடங்கி ஒன்றைத் தேடும்போது முக்கியமான அது கிடைக்காவிடில். அதைப் பிறகு தேடி யெடுத்துச் செய்ய முயல்க. இப்போது வேளை வீண்போகாதிருப்பதற்காக வேறு வேலையைத் தொட்டுக்கொள்க.

7. நேரில் தருவது:— நேரில் ஒன்றைத் தர நினைப்பது அதைப் பெற்றுக்கொள்பவரின் புன்முறுவலை-மகிழ்வை—எதிருக்கெதிராகக் கண்டு இன்புறுதற்கேயாம். இந்த இன்ப சந்திரிகையை — தபாலில் அதை அனுப்பிக் காண இயலா. அதற்கே நேரில் தர அன்புச் சிந்தையோடு ஓடுவது.

8. ஒன்றில் பாதி:—ஒரு பழத்தை ஒருவரிடம் கொடுப்பதிலும், ஒரு பழத்தின் பாதியைத் தான் எடுத்துக் கொண்டு, மறு பாதியைத் தருவது அதிக பிரீதியைக் குறிப்பிடுவதாகும். காதலியின் பாதி மென்று கடித்த தாம்பூலத்தின் ருசியைக் காதலனே அறிய வல்லான். பாதியின் ருசிகரம் வெகு பெரிது.

9. மிக்க அழகுடன் விளங்கும் சிலரது வதனம் சிற்சில தருணங்களில் தேஜஸ் இழந்து அமங்களத் தோற்றமாய் இருண்டு கறுத்துக் காண்கின்றது. இது ஏனோ?

கடவுளின் சிருஷ்டிகளைக் கொன்று தின்று தொலைத்து விலக்கினால் அது மனிதனைத்தான் எழ்மை யாக்குகிறது.

10. "வைத்தாலும் வைத்தாய்! நல்ல இடம் பார்த்துக் கொள்ளிவைத்தாய்! ஆனால், புகைவந்ததே தவிர, பற்றிக்கொள்ளவில்லை. அது ஒன்று தான் பாக்கி. இதை மறந்துவிட அடுத்த ஜன்மத்தில்கூட எனக்கு சக்தியில்லை. சக்தியில்லாததை—மனம் கொதித்துநிற்பதை—'மறந்துவிடு'—என்றால் எப்படி சாத்தியம்? அது ஒரு பக்கம் இருக்கட்டும்; மற்றொருபுறத்தே நாம் மனப்பகையின்றி இருக்கக்கடவோம். அதுவே, ஒருவரையொருவர் இனியேனும் தூஷித்துக்கொள்ளாமல் வாழுள் கடத்தச் சுலபவழி. இந்த வழியேனும் நிறைவேறுமா? அது கேள்வி.

11. விவாக சுகம்:—விவாகம் செய்துகொள்ள நினைத்து, அதற்காக ஏராளமான பணத்தை வாரிக் கொட்டுமொருவன், தன் தாய்—ஸகோதர—ஸகோதரிகள் யாவரும் தனது புது மணவாழ்க்கைக்குத் துணையாக இருந்து தன்னைச் சுகப்படச் செய்வார்களென்ற நம்பிக்கையினாலேயே துணிகிறான். இத்துணை நம்பியவனை விவாகமானபின் கைவிட்டு—"உன்பாடு அவள் பாடு, நாங்கள் ஏன் நடுவிலே? எப்படியாவது போங்கள். அவளிடத்தில் எனக்கென்ன வார்த்தை? எப்பொழுது அவள் வந்தாளோ, அவளையே சேர்ந்த மனுஷ்யனாக நீயும் ஆகிவிட்டாய், உனக்கும் எனக்கும் ஒரு சம்பந்தமுமில்லை"—என்று இகழ்ச்சியாகக் கூறி விலகிக்கொள்வாராயின், இவர்களை நம்பி விவாகம் புரிந்தவன் "இதுதான் கலியாண சுகமா?" என்று வாய்விட்டலற வேண்டியதே. இவன் தன் மனுஷியர்களிடம் படும் சிறுமைகளைக் கவனித்து நோக்குகிற மணப்பெண்ணும் இவனிடத்து மதிப்பற்று, அவர்களைப் போல இவளும் அவனை மீறிப் பேசவும் எதிர்க்கவும் தொடங்கிவிடுகிறாள். அப்பொழுது விவாக சுகம் இரட்டித்துப் போய்விடும்! இது விவாகக்காரனை நம்பவைத்துப் பிறகு ஏமாற்றுகிற—ஏறவிட்டு ஏணியை வாங்குகிற துரோகமன்றோ?

12. பழைய பெருச்சாளிகளை ஒழித்து, புதிய ரத்தத்தைப் புகவிட்டால்தான், ஊழல்கள் தொலைந்து நிர்வாகமும் உருப்படும்.

13. நீ மானமும் ரோஷமும் உள்ளவனென்று உலகிற்கு அறிவிக்க விரும்புகிறாயா? அல்லது மானம் போனாலும், துட்டே குறியாக இருந்துவிடுகிறதென்று உன்னுடைய எண்ணமா?

14. யதார்த்தத்தில் உள்ளன்பு நிறைந்தவர்களைக் கண்டால்தான்,—அத்தகையோர் தன்னிடம் வந்து துக்கம் விசாரித்தால்தான், — கண்ணீர் தானாகவே பெருகும். துயரமும் அதிகரித்துத் தேம்பித் தேம்பி கதறிடச் செய்யும். ஒப்புக்குத் துக்கம் விசாரிக்க வருவோரின் முன்னிலையிலோ — "ஆம்" — என்று தலையசைத்துவிட்டு, அவர்களின் விசாரிப்பையும் அலக்ஷியப்படுத்திவிட்டு சாதாரணமா யிருந்துவிடவே நேரும்.

ஒன்றைப் பெறுவதற்கு முன் இருந்த ஆத்திரம் பெற்றதற்குப் பின் இருப்பதில்லையாம்.

எதையும் விலைக்கு வாங்குகிற வழக்க முடையோருக்குத் தாங்கள் கிரயத்திற்கு வாங்கியதில் கஷ்டம் தோன்றாது. ஆனால், இனாமாகவும் இலவசத்திலும் கைக்காசு செலவில்லாமலே பல முறை பெற்று வழக்கமான இடத்தில், காசு கொடுத்து வாங்குவதென்றால் வெகு கஷ்டமாயிருக்குமாம்.

கொண்டைப் பிரார்த்தனை.

சிங்காரவேலு என்பவன், சிங்கப்பூருக்கு உத்தியோகமாகச் சென்றான். அவன் மனைவி பாலாம்பாள், பக்கத்து வீட்டு பாலசுந்தரனை நேசம் பண்ணிக் கொண்டாள். சிங்கப்பூரிலிருக்கும் சிங்காரவேலுக்கு இதைப்பற்றி அக்கம் பக்கத்திலிருந்து அநாமதேயக் கடிதங்கள் வந்தன. அவைகளைப் பார்த்து அவன் எதிலும் பொறுமை வாய்ந்தவனானதால் நாம் நேரில் பார்க்காத விஷயத்தை நம்பக் கூடாது என்று, இதை நோடீஸ் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் பெண்சாதியின் க்ஷேமலாபங்களை அடிக்கடி கடிதமூலமாகத் தெரிந்து கொண்டும், மாதாமாதம் சாப்பாட்டுக்குப் பணம் அனுப்பிக்கொண்டுமிருந்தான்.

ஃ

சில வருஷங்கள் சென்றன. சிறிது ரொக்கம் சேர்த்துக்கொண்டான் சிங்காரம். பிறகு பட்டணம் போகலாமென்று நினைத்து உத்தியோகத்திற்கு ராஜிநாமா கொடுத்துவிட்டான். ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி பட்டணம் வருவதாக லெட்டர் எழுதித் தன் மனைவியைக் கப்பலண்டை வந்திருக்கும்படி தெரிவித்திருந்தான். இதைக் கண்ட பாலாம்பாள் தன் கள்ள நாயகனுக்குக் கடிதத்தைக் காண்பித்து, இனிமேல் என் வீட்டிற்கு வராதே என்று எச்சரிக்கை செய்தாள். "அப்படியா சமாச்சாரம்! ஏழெட்டு வருடங்களாய் நேசித்து வந்தவன் நானிருக்க; உன் புருஷன் வருகிறானென்று இப்படியா சொல்லுகிறாய்! உன்னை என்ன செய்கிறான் பார்?" என்று கோபமாய்ச் சென்றான். கடிதத்தில் கண்ட தேதி, மணி பிரகாரம், வீட்டில் சமையல் செய்து வைத்துவிட்டு கப்பல் துறைக்குச் சென்றாள் பாலாம்பாள். உடனே கப்பலிலிருந்து இறங்கிய சிங்காரம் தன் பெண்சாதியைத் தேடினான். இருவருக்கும்



முதலில் அடையாளம் தெரியாமல விழித்து பிறகு ஒருவாறு அறிந்து, இத்தனை வருஷங்களாகப் பிரிந்திருந்ததைப்பற்றி எண்ணித் துக்கித்தனர். பிறகு ஒரு வண்டி பேசி அங்கிருந்து வாங்கிவந்த சாமான்களை ஏற்றி இருவரும் ஏறிக்கொண்டு பேசிக்கொண்டே போகும் வழியில், புருஷன் புஷ்பம் வாங்கிக்கொடுக்க அதைக் கொண்டையில் அழகாக முடித்துக் கொண்டாள் பாலாம்பாள்.

ஃ

வீட்டுக்காரனுக்கு வீடு கசப்பாகக் காணும்படிச் செய்யும் தன் மனைவியை ஆண்டவன்தான் திருத்தவேண்டும். தன் கடமையையும் சத்தியத்தையும் கருதி ஆடவன் வீட்டோடு ஒட்டி நிற்பதல்லாமல் சந்தோஷப்பட்டல்ல

காலாடிப்பேட்டையில் இருக்கும் இவர்கள் வீட்டில் வந்து இறங்கிய தும் புருஷனுக்கு வெந்நீர் விளாவி குளிக்கச் செய்து, இண்ணி அலம்பி வைத்து, அன்னம் பரிமாறினுள். அவன் சாப்பிட்டுக்கொண் டிருக்கை யில் வாசலில் சில கற்கள் ஒன்றின் பின்ஞென்ருய் வந்து விழுந்தன. இதை சிங்காரம் வந்த அலுப்பில் கவனிக்கவில்லே. ஆனுல் பாலாம் பாளுக்கு பக்கென்றது. புழக்கடைப் பக்கம் போய்ப் பார்க்க, தன் அந்தர ங்கக் காதலனு யிருக்கக்கண்டு நடுங்கி "ஐயோ! இப்படியும் செய்யலாமா" என, "ஆமாண்டி, இத்தனை வருஷ மாக இருந்த என்னை வேண்டாமென் றிருயே, உன் கொண்டைக்குப் பூ ஒரு கேடா" என்று அந்தக் கொண்டை



யைப் பூவுடன் அறுத்துக்கொண்டு போய்விட்டான் பாலசுந்திரம். ஐயோ! என் புருஷனுக்கு என்ன சொல்லப் போகிறேனென்று உள்ளே போய் இண்ணியில் மறுசாதம் போட் டாள். நிமிர்ந்து பார்த்தான் சிங் காரம். கொண்டையைக் காணவில்லே. இதென்ன கூத்து எனத் திகைத்து "எங்கடி கொண்டை" என்ருன். உடனே அவள்,

"பார்கட் பரிகட் டோடிய
கப்பலில், என் புருஷன்
நோயற்று கொடியற்று
வருவாரே யாமாகில்
சோறிடுங் கலத்திற்கு முன்,
என் பூ முடிக்கும்
கொண்டையைப் பிள்ளையா
ருக்குச் சாற்றுவேன்."

என்று பிரார்த்தனை செய்துகொண் டேன். அதைப்போல் உங்களுக்கு மறுசாதம் வைப்பதற்குமுன் செலு த்திவிட்டு வந்தேன் என்று தந்திர மாய்ப் பதிலுரைத்தாள். இதைக் கேட்ட கணவன் "ஹா! அப்படியா!! எதோ காட்டுநான் பார்க்கவேண்டும்" என்று சாப்பிடும் கையை உதறிவிட்டு எழுந்து வந்தான். இவள் தைரி யத்தை விடாமல் சற்று தூரத்தி லிருந்த பிள்ளையார் கோயிலண்டை போய்ப் பார்க்க, அங்கே இவள் நற் காலமானது அவன் போட்டுவிட்டுப் போன அறுந்த கொண்டை பூ மணத் துடன் கிடக்கக் கண்டு, அதைத் தன் கணவனுக்குக் காண்பிக்க, அவன் அதைப் பார்த்து, ஆச்சரியப் பட்டு, மூக்கின்மேல் விரல் வைத்து, "ஹா! இவளல்லவோ பதிவிரதா சிகாமணி, தன் அழகிய கொண்டை யைச் செலுத்திவிட்டனளே. இவ ளைப்பற்றி அவதூருன கடிதங்கள் கிடைத்தனவே, அவை பொய்யாக வன்ரூே யிருக்கும், என்றெண்ணித் தன் உத்தம பத்தினியுடன் ஒத்து வாழ்ந்து வந்தான் சிங்காரம். பாலாம் பாளைப்போலிராமல், உங்கள் புருஷ னிடம் உண்மையாய் நடந்துகொள் ளுங்கள்.

R. D. கோமளவல்லியம்மாள்.

படிக்கும் வழி வேறு. படித்தபின் பிழைக்கும் வழி வேறு. படிக்கிற போதே பிழைக்கிற வழியையும் கற்றுக்கொள்ள விரும்பினுல் தகப்பனர் ஒரு வியாபாரியா யிருந்தால்தான் அது முடியும். உத்தியோகஸ்தரா யிருந் தால் அது பயன்படாது. அப்பனுக்கு அதிர்ஷ்டமிருந்து உத்தியோகம் கிடைத்தது. குமாரனுக்கு அந்த அதிர்ஷ்டம் இருக்கிறதோ இல்லேயோ!

அநுபவ விநோதங்கள்.

நாம் நமக்குக் கொடுத்துக் கொள்ளும் அந்தஸ்தே — மதிப்பே-பிறரும் நமக்குக் கொடுப்பார்கள். வீட்டு விஷயங்கள் தெரியாத புது மனிதர்கள் நம் வீட்டிற்கு வந்திருக்கையில் சகோதர, சகோதரிகளிடமோ, மனைவியிடமோ, மற்றும் எவரிடமோ நாம் நடந்துகொள்ளும் விதத்திலேதான் அப்புது மனிதர்கள் நம்மைச் சுற்றி யிருப்போருக்கு மதிப்பு கொடுப்பார்கள். பிறர் முன்னிலையில் நம்முடைய பந்துக்களைக் கேவலப்படுத்தி அவ்வன்னியர்களின் முன்னால் தான் மிகவும் சொல்வன்மை, செய்வன்மை பொருந்தியவனென்றும் காட்டிக் கொள்ளும் பிரமுகர்கள் தங்களைத்தான் கேவலப் படுத்திக் கொள்கிறார்கள் என்று அறிதல் வேண்டும்.

2. பலருக்குத் தங்களால் ஒன்றும் செய்ய முடியாது இருக்கும். ஆனால். அவர்கள் பிறர் செய்திருக்கும் விஷயங்களைக் குறித்துக் குற்றம் கூற வந்து விடுவார்கள். "அந்த வீடு அப்படி கட்டியிருந்தால் மிகவும் நலமாய் இருக்கும். அந்த ஜன்னலைத் தெற்கு பார்த்து வைத்தவன் வடக்கே பார்த்து வைப்பதற்கு எங்கே மூளையை இரவல் கொடுத்திருந்தானோ?" என்று பேசுவர். பத்திரிகைகளில் வெளியாயிருக்கும் விஷயங்களைக் குறித்துக் குற்றம் குறைகளைக் காண்பிப்பர். ஆனால், அக்குற்றம் குறைகள் எதுமின்றி இவர்களால் ஒரு வரி கூட எழுத முடியுமோ; அதுதான் கிடையாதே! எழுத முடிந்தால்தான் அவர்களுக்கு எழுதுதலின் கஷ்டம் தெரிந்திருக்குமே.

3. இன்றைக்கு நம்முடன் வெகு குதூகலமாக, நாம் பேசும் விஷயத்தையே அவர்களும் ஆராய்ந்து பேசித் தீர்த்துவிட்டு, நாளை மற்றவர்களிடம் போய் அவர்கள் இப்படியெல்லாம் அவர்களைத் தூஷணையாகப் பேசினார்களென்றும், தான் அவ்விவகாரத்தில் தலையிடவில்லையென்றும் அவர்களிடம் கோள் மூட்டும் பேர் வழிகள் அனேகர் உளர். இவர்களுக்கு அவ்வன்னியர்கள் மதிப்பு கொடுப்பார்களென்று எண்ணம். ஆனால், நாளடைவில் வெளவால் கதியாய் முடிந்து அவதிப்படுவார்கள். பின்னல் முன்பு பேசியவர்களைக் கண்டாலும் தங்களின் வார்த்தைகளைச் சுருக்கிக்கொள்வார்கள்.

4. நன்றாய் சாப்பிட்டுவிட்டுத் தூங்கி எழுந்திருந்து பின்னும் சாப்பிட்டுவிட்டு இவ்விதமே தன் காலம் பூராவையும் கடத்தும் புண்ணியவான்களை நாலு இடத்தில் சுற்றி எதாவதுஜீவனத்திற்கு வழிப்பண்ணி வரும்படி கேட்டால் அவர்களுக்கு மிகவும் கஷ்டமாகத்தான் இருக்கும்.

சிலர் சேர்க்கும் சொத்துகள் அவர்களுக்கு ஒட்டுவதில்லை. மற்றவர்களுக்கு முழு மொத்தமாய்த் தூக்கிக் கொடுத்து விடுவதற்காகவே அவர்கள் கால முழுதும் உழைத்துச் சேர்த்ததாய்ச் சொல்லும்படியாக முடிகிறது. சந்ததியற்று மரித்த தன் சிறிய தந்தையின் பெரிய சொத்துகளுக்குத் தானே திடீரென்று சொந்தக்காரனாய் விடுகிறான்.

5. சுகமாக சண்டை சச்சரவின் றிக் காலத்தைக் கடத்தும் வீட்டில் நுழைந்து தான் ஏதோ மிகவும் நல்லது செய்வதுபோல் தோற்றுவித்து அவ்வீட்டிலுள்ளோரின்சங்கதிகளைப் பூராவும் நன்ருய் அறிந்துகொண்டு ஒவ்வொருவருக்குள்ளும் ஒரு குட்டிக் கலகத்தை உண்டுபடுத்தி இவ்வகையில் தன் ஜீவிய காலத்தைப் போக்கும் ஒருவனை நம் வீட்டிற்குள் வர விடாது முதலிலேயே ஜாக்கிரதைப்பட்டு விரட்டிவிட்டால், அவன் மனம் மிகவும் அவதிப்படுமோம்.

6. மிகவும் விசாலமான வீட்டில் அநேக அறைகளைத் தன் வசப்படுத்திக்கொண்டு மிக உல்லாசமாகக் காலம் கடத்தினவனை ஒரு சின்ன அறையிலேயே தங்கி இருக்கும்படி கால வித்யாசம் செய்து விடுமோனல் அவன் மனம் மிகவும் வேதனைப்படுமாம்.

7. பிறரை எப்போதும் ஒட்டிக்கொண்டு, தான் ஒரு வேலையும் செய்யாது பொழுதைப் போக்கும் மனிதர்களுக்குத் தன்னையே பிறர் ஒட்டி வேலை வாங்க வந்தால், அது அவர்களுக்கு அப்போது மிகவும் கஷ்டமாகி அவதிப்படவைக்குமாம்.

7. ஒவ்வொரு விஷயத்திற்கும் குதர்க்கமாகப் பேசித் திரியும் ஆணுடனே பெண்களுடனே இருந்து காலம் தள்ளுவது மிகவும் கஷ்டம்.

9. தான் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்யாது அதில் பாதியையோ, அல்லது கால் பாகத்தையோ செய்து திரிவோரை, அவரின் மேல்உத்தியோகஸ்தர் அவரிடம் முழுவேலை வாங்க முற்பட்டாராஞல், அது அவர்களுக்குப் பெரிய தலைவலியாகிவிடுமோம்.

S. விஜயலக்ஷ்மி அம்மாள்.

கேட்டுக்கொண்டு உள்ளே போ.

எவ்வளவு பழகிய இடமாயினும், எத்தனை தடவை நீ உள் நுழைந்து சென்றிருப்பினும், மாடியில் போய் தங்கிப் பலமணி நேரம் இருந்திருப்பினும், மறுபடியும் நீ போகும் போது வெளிவாயிற்படியில் நின்று (1) உனக்கு வேண்டியவர் இருக்கிறரா?—(2) எங்கே இருக்கிறர்?—(3) அவர் இருக்கும் இடத்திற்குப் போக இது சமயந்தானு? என்பதை ஒரு முறைக்கு இருமுறை கேட்டுத் தெரிந்துகொண்டு அப்பால் உட் செல்லப் பார். இவ்விதம் விசாரித்துக்கொண்டு உட்செல்வது ஒரு முக்கிய கடமையும் ஒழுங்கும் ஆகுமேயன்றி, அது ஒருபோதும் கௌரவக் குறைவு ஆகமாட்டா. ஒவ்வொரு வீட்டு அமைப்பும், ஏற்பாடும், ஒவ்வொரு தினுசாக இருக்குமாதலின், எவ்வளவு தெரிந்திருந்த போதிலும் கேட்டு உட்செல்வதே கிரமம். ஆணுக்கு மட்டுமே இந்த விதி. பெண்ணுயின் எந்த வீட்டுக்குள்ளும் தாராளமாய் நுழையலாம். ஒவ்வொரு வீடும் பெண்களின் இராஜ்யமே.

பழமொழிக் குறிப்புகள்

4. மக்கள்.

(611-ம் பக்கத் தொடர்ச்சி.)

356. "அம்மையார் நூற்கிற நூலுக்கும் பேரன் கட்டுகிற அரைஞாண் கயிற்றுக்கும் சரி."

தாய் தந்தையர்களுடைய நிலைமையை அறிந்து அதற்குத் தக்கபடி நடக்க வேண்டும். தங்களுடைய அந்தஸ்துக்குமேல் செலவிடுவதும் ஆடம்பரமாயிருப்பதும் கூடாது. ஒரு கிழவி சிரமப்பட்டுத் தன் பேரனை முன்னுக்குக் கொண்டுவர நூல் நூற்று ஜீவனம் பண்ண ஆரம்பித்தால், அந்தப் பேரப்பிள்ளை அவள் ஒரு நாளில் நூற்கும் அவ்வளவு நூலையும் தனது அரைஞாண் கயிற்றுக்குச் செலவிட்டு வருவானேயானால், அப்புறம் அவன் முன்னுக்கு வருவது எப்படி? எப்பொழுதும் தன்னுடையவும், தன் வீட்டினுடையவும் நிலைமை தெரிந்து நடக்கவேண்டும்.

357. "அப்பன் அருமை அப்பன் மாண்டால் தெரியும்! உப்பின் அருமை உப்பில்லாவிட்டால் தெரியும்."

வெகு உண்மையான பழமொழி. அனுபவித் தறிந்தவர்களுக்குத் தான் இந்தப் பழமொழியின் கருத்து அதிக தெளிவாக விளங்கும். ஒன்று இல்லாத காலத்தில்தான் அதன் அருமை தெரிகிறது. தாய்தந்தையர்களை அலக்ஷியம் செய்து அவர்களின் சொற் கேளாமல் திரியும் வாலிபர்கள் பலருண்டு. அவன் அப்படித்தான் ஓயாது குலைத்துப் பிறகு அடங்குவான் என்று தங்களின் தந்தையைப் பழிப்பார்கள். அவர் கத்துவது கத்தட்டும், நாம் நடக்கிறபடி நடப்போம் என்று துணிகிற பையன்களுமுண்டு. இத்தகையோருக்குப் பெற்றோர்கள் இறந்தபிறகே அவர்களின் அருமை தெரிகிறது. தாய் தந்தையர்களுடன் தினமும் பழகுகிறதில் அவர்களின் அருமை அவ்வளவாகத் தெரியாமற்போகிறது. அவர்களின் உயர்வும் கௌரவமும் தங்களுக்காகப் பட்ட பாடுகளும் அத்தனையாகத் தெரிகிறதில்லை. அது எதுபோல் எனில், வீட்டுப் பானையில் எப்பொழுதும் இருந்துகொண்டிருக்கிற உப்பு ஒரு நாளைக்கு இல்லாவிட்டால், இரவலுக்கும் கிடைக்காவிட்டால் அப்பொழுது சமையலுக்கு எவ்வளவு தத்தளித்துப்போக நேருகிறதோ அதைப்போலவாம். ஒரு உப்புக்கல் குறைந்தாலும் சமைத்த பதார்த்தம் ருசி தராமல் சப்பென்று கிடக்கும். அப்போதுதான் அதன் அருமையும் விளங்கும்.

எவர் ஒருவர் எந்த சங்கதியைத் தன்னைப்பற்றி எழுதியதாகக் கருதுகிறாரோ, அவர் திட்டமாய் அவ்விஷயம் செய்தவராயிருப்பார்.

358. "அழுகிற ஆணையும் சிரிக்கிற பெண்ணையும் நம்பாதே."

அழுகிறது ஆணுக்குச் சிறப்பல்ல; சிரிக்கிறது பெண்ணின் அடக்கமான தன்மைக்கு ஒழுங்கல்ல. எல்லாக் கஷ்டங்களையும் தாங்கிச் சுமந்து சமாளித்து, நிர்வகிக்க வேண்டிய ஆண்பிள்ளை தைரியம் விட்டு அழுவது கேவலமாகும். ஒரு சமயம் வாய்விட்டழ நேர்ந்தாலும் அதற்கு அடுத்த சமயமே துணிந்துகொண்டு எழுந்து நிற்கவேண்டும். இவ்விதமின்றிப் பலஹீனத்தன்மையுடன் எதற்கும் அழுமூஞ்சித்தனமாய்ச் சோம்பிக் கிடப்பவனையும், நடுங்கி அழுபவனையும் நம்பிப் பயனில்லை. அவன் எந்த வேலைக்கும் உதவமாட்டான். இவ்விதமே, அச்சம், அடக்கம், நாணம் முதலிய குணங்களுடன் பணிந்திருக்கவேண்டிய பெண் அர்த்தமற்ற சிரிப்பு சிரித்து, எடுத்ததற்கெல்லாம் கலகலவென்று நகைக்கும் தன்மையுடையவளா யிருப்பாளானால், அவள் குடித்தன யோக்கியதைக்கு உட்பட்ட பெண்ணாகமாட்டாள். அவள் பிரயோஜனமற்றவளே. ஒரு பெண்ணின் சிரிப்பை நோக்கி, அதனால் அப்பெண் தங்களை விரும்புகிறாளென்று நம்பித் துணிந்துவிடும் ஆடவரும் பந்துக்களும் பலருண்டு. ஒரு பெண்ணின் சிரிப்பினால் ஒரு குடித்தனமே கெட்டுவிடலாம். சிரிக்கிறதற்கும் சந்தர்ப்பமுண்டு. சிரிக்கிறதிலும் ஒரு எல்லை—நிதானம்—கௌரவம்—மதிப்பு—இருக்கவேண்டும். ஒரு சமயம் அழுகிற ஆண் கபடமுள்ளவனாகவும் இருக்கலாம். தன் காரியத்திற்கு அழுததாகவும் இருக்கலாம். பெண்ணும் அப்படியே.

359. "ஒரு தாயற்ற பிள்ளைக்கு ஊரெல்லாம் தாய்."

யாருக்கு? நற்குண நற்செய்கைகள் பொருந்திய ஒரு பையனுக்கு. தனது சொந்தத் தாயானவள் ஏதோ காலத்தின் கொடுமையால் மாண்டுவிட்டால், அவ்வூரிலிருக்கும் ஒவ்வொரு தாய்மாரும் அவனிடம் மனமிரங்கி, தாய் பாராட்டவேண்டிய அன்பு, ஆதரவு முதலியவைகளை அவனிடம் காட்டி வருவார்கள். அதாவது, குணம் பிள்ளைகளுக்குப் பிரதானம் என்றபடி. எவ்வளவு துஷ்டப் பிள்ளையாயினும், அந்தத் துஷ்டத்தனத்தைத் தன் தாயிடம் காட்டுவதே தவிர, தாய் கண் மூடிவிட்டால், எல்லாத் துஷ்டத்தனமும் அடங்கி சாதுவாகிவிடுவது சாதாரணமாகக் காணும் அனுபவமே.

பத்திரிகைகளிலே அவதூறு வழக்குகள் வராதவரையும் பத்திராதிபர்கள் அதிர்ஷ்டசாலிகளே. அது வரையில் தங்களின் மனம் போனபடி எல்லாம் எழுதலாம் தான். அவதூறு வழக்கு வந்து விட்டாலோ, அப்போதுதான் வக்கீலுக்கும் மற்ற கோர்ட்டுச் செலவுக்கும் பணத்தை வாரி இறைக்கவேண்டிய கஷ்டம் தெரிந்து கலங்க வைக்கிறது.

நீ ஒரு நூலைப்படிக்கும்போது உனது சொந்த அநுபவங்கள் அதிலிருப்பின் அப்போதுதான் ஆனந்திக்கவும் விசனிக்கவும் முடியுமே தவிர, மற்றபடி நீ பட்டிராத விஷயங்கள் உன் மனதில் தைக்காது. ஆழமாகவும் விளங்காது. நீ ஒரு சாமர்த்தியமான மோசஞ் செய்திருந்து அந்த சங்கதியைப்போன்றதொரு குறிப்பு ஒரு கதையில் வருமானால் அதை வெகு கருத்தாகப் படிப்பாயல்லவா?

“அமிர்தகுணபோதினி”யின் ஒன்பதாம் வருடம்.

“அமிர்தகுண போதினி” என்னும் ஸர்வ சிலாக்கியமான பெயருடன் சொல்லற்கரிய பெருமையோடும் ஜ்வலிக்கும் நமது பத்திரிகைக்கு அடுத்த பங்குனிமாதத்துடன் எட்டாவது வருடம் பூர்த்தி பெறுகின்றது. இந்த எட்டு வருட காலத்திலும், இப்பத்திரிகை காலந்தவறாது நிர்விக்னமாய் நடைபெற்று உலாவிப் படிப்பவர்களுக்கு உத்ஸாகத்தை விளைத்து வந்திருக்கின்றது. மகான்களுடைய ஆசீர்வாதத்தாலும், இதன் கையொப்ப நேயர்களின் அளவற்ற அபிமானத்தாலும் ஒன்பதாவது வருடத்தில் இன்னும் அதிக மேன்மையாய் விளக்குமென்பதும் நிச்சயம்.

“அமிர்தகுணபோதினி”யின் உயர்நலங்கள்.

நமது செந்தமிழ் நாட்டில் “அமிர்தகுணபோதினி” மற்றொரு பத்திரிகையைப் பார்த்து அதன் மாதிரியாகவோ சாயலாகவோ இல்லாமல், தனக்கென்று ஒரு புது உருவமும், தனித்த சுதந்திர ஆகிஅமைப்பும் கொண்டு நவீன முறையில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றதென்பதை யாவரும் அறிந்திருப்பர். இனி தொடங்கும் ஒன்பதாவது வருஷத்திலும் “அமிர்தகுணபோதினியிலுள்ள விஷயங்களே படிக்கத்தக்கவை, அவைகளே மனதிற் கொள்ளத்தக்கவை, “அமிர்தகுணபோதினி”ப் பத்திரிகையே அபிமானிக்கத் தக்கதென்றும் நன்றாய்ப் புலப்படும்படி வேண்டிய சிரத்தையோடும் ஊக்கத்தோடும் எழுதி வருவோமென்பதில் தடையில்லை. அதனை ஸ்தாபித்த ஆசிரியராகிய நாம் ஒவ்வொரு விஷயத்தையும் நன்கு ஆராய்ந்து வெளியிடுகின்றோம். செவ்வனே உழைக்கும் ஒரு ஆசிரியர் செல்லும் உத்தம வழியில் முன்னோக்கி நடத்து பத்திரிகையை நானா வகையிலும் உன்னதமுற எழுதி அலங்கரித்து வருகின்றோம்.

சுருங்கச்சொல்லல்.

ஒவ்வொரு விஷயமும் சாரசங்கிரகமாகவே வரையப்படுகின்றது. “சுருங்கச்சொல்லல்” என்பதைத் தழுவி நடைபெறுகின்றது. ‘வீண் விரிவு’ என்ற குற்றம் என்றுமே கிடையாது. “அமிர்தகுண போதினி” யின் ஒவ்வொரு தலைப்பெயரும் ஒவ்வொரு புதுச்சுவையுடன் கூடியதென்பது யாவரும் ஒப்ப முடிந்த உண்மை.

அனுபவஞானத்தின் மாக்ஷிமை.

அனுபவச்சார்பில் நமது தமிழ் நாட்டில் “அமிர்தகுணபோதினி”யே முதல்தரமான பத்திரிகையாக ஜ்வலித்து வருகின்றது. அனுபவ பூர்வ

நீ எவ்வளவுக்கு உலக வாழ்வில் கஷ்டப்படுகிறாயோ அவ்வளவுக்கும் உனக்கு அனுபவச் சரக்கு சேரும். நீ நஷ்டப்பட்டேன் என்கிறாய்—அதுவும் ஒரு கண்டறிந்த அனுபவமே.

மாக ஒவ்வொன்றையும் ஆராய்ச்சி யின் வடிவில் விவரித்து எழுதுவ தென்பது சாமான்யமன்று. அவ்விதம் விசால சிந்தையுடன் வரையப்படு வனவற்றிலுள்ள அனுபவங்களின் ருசிகரத்தால், எவரும் அதைப்படிக்க ஆவல்கொள்ளுவரென்பதில் சிறிதும் ஆக்ஷேபமில்லை. ஸன்மார்க்கப் பிர வர்த்தகர்களான பெரியோர்கட்கு உவப்பாயுள்ள வேதாந்த விஷயங்க ளும், கிரகஸ்தாசிரமிகளான கன வான்கட்கு ஸந்தோஷகரமான நல் விஷயங்களும், சிறுவர்கட்கு உபயோ கமுள்ள நீதிகளும், தனிப்பகுதியாக விகட விநோதங்களும் "அமிர்தகுண போதினி"யில் ஏராளமா யிருக்கின் றன. ஆதலின், அமிர்தம் என்ற பெயர் அதற்குத் தகும்.

அமிர்தினியின் அபிவிர்த்தி.
இனிமேல் 80-பக்கங்கள்.

தமிழ் நாட்டில் முதன் முதலில் 48-56-பக்கங்களாக வெளி வந்தது. நம் "அமிர்தகுணபோதினி "தான். பிறகு 64-பக்கங்களுக்கும் 80-பக் கங்களுக்கும் உயர்ந்து விளங்கிப் பிர பலம் கொண்டது. இப்போது 64-பக்கங்களாக உள்ளதை இனி 80-பக் கங்களாக உயர்த்தியுள்ளோம். சித்திரப்படங்களையும் அதிகப்படு த்தி யிருக்கிறேம். மேல் அட்டையும் மூன்று வர்ணங்களில் வெளிவரும். இன்னும் பல அபிவிர்த்திகளுக்கும் ஏற்பாடுகள் செய்திருப்பதால், நமது அன்பர்கள் ஒன்பதாவது வருட சந்தாவை உடனே மணியாட ரில் அனுப்ப வேண்டுகிறேம்.

"அமிர்தகுணபோதினி"யின்
ஒன்பதாவது வருடம்.

நமது நேயர்கள் இந்த மாசி மாத ஸஞ்சிகையைப் பெற்றதும், ஒன்ப தாம் வருடத்திய புது சந்தாவை மணியாடர் மூலமாக அனுப்பிவைக் கும்படி வேண்டுகிறேம். அத்துடன் மற்றொரு உதவியாக, ஒவ்வொரு அன்பரும் பல புதிய சந்தாதாரரை யும் சேர்த்துக்கொடுத்து "அமிர்தினி" யை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள் கிறோம்.

வெளிநாடுகளிலுள்ள சந்தாதார்.

வெளிநாட்டிலுள்ள அன்பர்கள் இந்த மாஸ ஸஞ்சிகையைக் கரத் தேந்தியதும், ஒன்பதாம் வருடப் புது சந்தாவை யனுப்பிப் புது சந் தாதார்களையும் சேர்த்துக் கொடுக்க வேண்டுகிறோம். இப்பத்திரிகையைப் பெற்றதுமே சந்தாவை யனுப்பிக் கொடுத்தால்தான் நமக்கு உரியகாலத் தில் கிடைக்கும்.

உடனே மணியார்டர்
செய்யுங்கள்.

"அமிர்தகுணபோதினி"யின் புது வருட உள்நாட்டு சந்தாவான ரூபாய் ஒன்றையும்விரைவில்அனுப்புமாறு வேண்டுகிறேம். மணியாடர் செய்வ தில்தான் லாபமிருக்கிறது. எல்லா மணியாடர்களையும் மானேஜர், "அமிர்தகுணபோதினி" 158-A பிராட்வே, சென்னை" என்ற விலா ஸத்துக்கு அனுப்பி, என்றென்றைக் கும் "அமிர்தகுணபோதினியை" ஆதரிக்குமாறு பிரார்த்திக்கின்றோம்.

எஸ்.ஜி. இராமாநுஜலுநாயுடு,
பத்திராசிரியர்.

சொந்த சக்திகளைக் குறித்து நூல்வழியில் ஏதும் எழுதலாகாதென் கிறார்கள். சொந்த சக்தியின்றி அனுபவமாய் எழுத எவ்விதம் முடியும்?

காணமற்போன கண்ணன்.

"கேடுவார் கேடு நினைப்போர்"

"கண்ணா! கண்ணா!!" "கண்ணன் எங்கே? இப்போ இங்கே இருந்தானே! எண்டி லக்ஷிமி பாரடி! என்னடி பிசாசு பிடித்தாற்போல் நிற்கிறாய்!" என்று ராணி சொர்ணம்மாள் தன் குழந்தையை வைத்துக்கொள்ளும் தாதி லக்ஷிமியைக் கேட்டாள்.

"என்னடி! குழந்தை இருக்கிறானா இல்லையா" என்று அதட்டிக் கேட்டார் ராணியின் அண்ணனான ராஜு முதலியார்.

"இப்போதுதானே காமு ஆயா என்னிடமிருந்து வாங்கிக்கொண்டு போனாள்; அவளைக் கேளுங்கள்" என்றாள் ராணியின் மாமியாரான பெரிய ராணி மரகதம்மாள்.

"இங்கேயிருந்துகொஞ்சம் முன்னால்தானே அவன் லக்ஷிமியிடம் சென்றான்! எண்டி லக்ஷிமி! லக்ஷிமீ! என்னடி சொல்லேன்!" என்றாள் காமு.

"ஆம், சற்று முன்தான் கண்ணன் என் மடியில் வந்து உட்கார்ந்தான். அப்போது மடமடவென்று மேளம் கொட்ட, தடதடவெனத் தாளம் தட்ட, ஹா ஹா எனப் பலர் ஆர்ப்பரிக்க, ஒருவன் கையில் தூக்கி மார்போடணைத்துப் பிடித்துக் கொண்டிருந்த ஐம்பதடி உயரமுள்ள மூங்கில் கம்பத்தின் உச்சியில் கழைக் கூத்தாடி தன் தலையில் 8-பெரிய பானைகளை ஒன்றின்மேல் ஒன்றாய் அடுக்கடுக்காய் வைத்துக் கொண்டு ஊஞ்சல் ஆடுவதைப்போல் பானைகள் விழாமல் அந்தரத்தில் ஆடிய அபூர்வ அதிசயத்தை இமைகொட்டாது எல்லாரும் பார்த்துக்கொண்டிருந்ததைப் போல் நானும் பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது கண்ணன் ஞாபகம்வர, பக்கத்தில் பார்த்தேன். இல்லாமற்போகவே, "கண்ணா! கண்ணா!! எனக் கதறினேன்" என்றாள் லக்ஷிமி.

"ஆமாண்டி! அதற்குள் குழந்தை எங்கே போய்விடுவான்? ராஜு முதலியாரின் உத்தரவுப் பிரகாரம் அரமனையின் வாசல்கதவுகளெல்லாம் பூட்டப்பட்டுதானே இருக்கின்றன. வாசலில் பரமசிவன் பாரா இருக்கிறானா இல்லையா? மாடியிலுள்ள கட்டில்கள், சோபாக்கள், நாற்காலிகள், மேஜைகள், அலமாரிகள், பீர்வாக்கள் முதலியவற்றின் மறைவில் விளையாடிக்கொண்டிருப்பான். குழந்தை ரெக்கை கட்டிக்கொண்டு பறந்தா போய்விடுவான்? சரியாய்த் தேடுங்கள்" என்றாள் பெரிய ராணி.

உடனே எல்லோரும் அந்த அறை, இந்த அறை, பூஜை அறை யாகிய எல்லா அறைகளிலும் தேடினார்கள். எங்கும் "கண்ணா! கண்ணா" என்ற கதறுதலும், "அகப்பட்டானா அகப்பட்டானா" என்ற ஆரவாரமும்,

"இல்லை இல்லை" என்ற பதில்களும் பலமா யிருந்தனவே யொழிய கண்ணனைக் காணவே காணோம். அப்பால் தான் கண்ணன் மணிவண்ணனைப் போல் மாயமாய் மறைந்து விட்டா னென்று எல்லோர் மனதிலும் பட்டது. கதவுகளைத் திறக்காது அப்படியே வைத்துக்கொண்டு கனம் கலெக்டர் துரையவர்களுக்குக் கடிதம் எழுதியனுப்ப, அவர் வாங்கி வாசித்ததும் தன்னுடன் பேசிக்கொண்டிருந்த இளவலூர் ஜமீந்தாரின் சகோதரராகிய லட்சுமணசுவாமி முதலியாரிடம் கொடுத்தார். அவர் அதை வாங்கி வாசித்தார்.

2

இப்போது காணமற்போன கண்ணன் தென் ஜில்லாவிலுள்ள இளவலூர் ஜமீன்தாரராகிய ஸ்ரீமான் ராமசாமி முதலியாரின் ஐந்து வயதுள்ள ஏகபுத்திரன். ஸ்ரீமான் ராமசாமி முதலியாரும், அவர் உடன் பிறந்த லட்சுமணசாமி முதலியாரும் இரட்டைப் பிள்ளைகளாய்ப் பிறந்து அவர்கள் பேர்களுக்கிணங்க இராம லட்சுமணர்போல் அன்னியோன்னியமாய் வளர்ந்து, உயர்தரப் பரீட்சைகளில் தேறி, மிகவும் புத்திசாலிகளாய் இருந்து வந்தார்கள். அவர்கள் தகப்பனர் இறந்து போகவே; இருவரும் ஜமீன் விஷயங்களில் அக்கரையுடன் உழைத்து விருத்தி செய்துவந்தார்கள். ஸ்ரீமான் இராமசாமி முதலியாரவர்களுக்குத் தாய்மாமன் மகளாகிய சொர்ணம்மாளை விவாகம் செய்யவேண்டுமென்ற பிரேரணை எற்பட்டதும்.அந்தப் பெண்ணிடம் அதிர்ப்திபட்டு இளையவர் தன்னால் கூடியவரை தடுத்தும் பெரியவர் அந்தம்மாளையே விவாகம் செய்து கொண்டதுமுதல் அண்ணன் தம்பி, பண்டிகை நாட்களில்கூட சேர்ந்திருப்பதில்லை. விவாகமான ஒரு வருஷத்தில் கண்ணன் பிறந்தான். திடீரென்று ராமசாமி முதலியார் பிணிவாய்ப்பட்டு குணமாகாது, நோய் அதிகமானவுடன் அயலூரில் வசிக்கும் தன் சகோதரரைக் கூப்பிட விட்டு "உன் வார்த்தைகளைத் தட்டி நடந்ததற்குப் போதிய பலன் அனுபவித்துவிட்டேன். என்ன கட்டுப்பாடு திட்டங்களில் என் மனைவியை வைத்தும், அன்பால் நடத்தியும், என்னை உண்மையில் மதிப்பவளாயில்லை. என்ன நேரிட்ட போதிலும் சரிதான்; நீ என் விஷயத்தில் எவ்வாறு அண்ணன் என்னும் அபிமானம் வைத்து உண்மைத் தம்பியாய் இதுவரை உழைத்துவந்தாயோ அவ்வாறே நமது கண்ணன் விஷயத்திலும் 'அண்ணன் மகன்' என்னும் அபிமானம் வைத்து உன் ஆயுள்பரியந்தம் நடத்துவதாக வாக்களி" என்றதும், தம்பி கண்ணீர்வடித்த படியே வாக்களித்தார். பேச்சுமடங்கிற்று, மூச்சுமொடுங்கிற்று. இராமசாமி முதலியார் எழுந்திராத தூக்கம் தூங்கலானார். கிரியைகளெல்லாம் முடிந்தபின் லட்சுமணசாமி முதலியார் வழக்கம்போல் கிராமங்கள் சென்று ஜமீன் வேலைகளைப் பார்த்து வந்தார். ஆனால், ராணி தனது அண்ணன் ராஜு முதலியாரின் சொல் கேட்டு, தனது கொழுந்தனர் எவ்வாறுவது கண்ணனைக் கொன்று விட்டு ஜமீனைத் தனக்குச் சொந்தம் பண்ணிக்கொள்ள முயல்வதாக பல மனுக்கள் கலெக்டர், சூப்பிரண்டன்டன்ட், கவர்ன்மெண்ட் ஆகியோருக்கு அனுப்பினாள். அக்கடிதங்களெல்லாம் ஆதாரமற்றவை என நிராகரிக்கப்பட்டன. அப்பால் தான் கண்ணன் காணமற் போனான்.

3

நிற்க, லட்சுமணசாமி முதலியார் கலெக்டர்துரை கொடுத்த கடி

தத்தை வாசித்ததும், "காணமற் போன கண்ணனைப்பற்றி விசாரிக்க உடனே போவது நலமென நினைக்கிறேன்" என்ருர். இருவரும் போலீஸ் உத்தியோகஸ்தருடன் அரண்மனை சென்று விசாரித்ததில் "அன்று கழைக்கூத்தாடிகள் அரண்மனையில் வந்து ஆட அனுமதி கேட்டதாகவும், வேடிக்கைகள் நடந்தால் ஊர் ஜனங்கள் வேடிக்கை பார்க்க வருவார்களென்றும், கும்பலில் கண்ணனை எவராவது ஏமாற்றி எடுத்துப் போக ஹேதுவிருக்குமென்றும், ஆகையால் அனுமதிக்கக் கூடாதென்று ராணி சொன்னதாகவும், அரண்மனையின் கதவுகளையெல்லாம் பூட்டி வீட்டுக்காரர் நீங்கலாக வேறு எவரையும் மாடியில் விடாவிட்டால் ஆபத்தேற்படாதெனச் சொல்லி ராஜு முதலியார் சிபார்சு செய்த பின்தான் அனுமதியளிக்கப் பட்டதாகவும், அப்படி யிருந்தும் தனது கொழுந்தனை சண்டாளன் எவ்வாறே குழந்தையைக் கொண்டு போய்க் கொன்ருே, ஒளித்தோ, வைத்துவிட்டுக் 'கோழி திருடிவிட்டுக் கூட இருந்து தேடுவது போல்" அபினயிக்கிருரென்றும் அவரை எதிரில் வைத்தே ஏகதேசமாய்ப் பேசினர்கள்.

4

அப்போது கலெக்டர் "அம்மா! சென்ற இரண்டுமணி நேரமாய் அவர் என்னுடனிருந்ததால் அவர் கண்ணனை அபகரித்திருக்க முடியாது என்பதற்கு நானே சாக்ஷியாகிறேன்" என்ருர். "அவர் தன் ஆட்களை ஏவிவிட்டு தான் நிர்அபராதி எனக் காட்டுவதற்காகத் தங்களிடம் பேசிக்கொண்டிருந்திருக்கலாமல்லவா?" என்ருள். "அப்படியே வைத்துக்கொண்டாலும் அரண்மனைக் கதவுகளெல்லாம் பூட்டப்பட்டிருந்த போது அவருடைய ஆட்கள் எவ்வாறு உள்ளிருந்தவர்களின் உதவியில்லாமல் குழந்தையை அப்புறப்படுத்தக் கூடும்? சொல்லுங்கள் பார்ப்போம்" என்ருர் கலெக்டர். அந்தம்மாளால் சரியான பதிலளிக்க முடியவில்லை. ஆயினும் தான் கொழுந்தனுரைத் திட்டிக் கொண்டே யிருந்தார்கள். அச்சமயத்தில் கலெக்டரவர்களுக்கு, ஒரு தந்தி வந்தது. "மாடியிலிருந்த எல்லோரையும், எங்கும் போகாது கவனிக்க ஏற்பாடு செய்யுங்கள்; நான் காலையில் வந்து சேருகிறேன். நான் வரும் விஷயம் வெளியில் பிரஸ்தாபிக்க வேண்டாம். பாவானிசிங்" என்று தந்தியிலிருந்தது. அதை அவர் வாசித்ததும், ஜோப்பியில் வைத்துக்கொண்டு ராணியிடம் "அம்மா! நான் நாளை காலையில் வந்து விஸ்தாரமான விசாரணை ஆரம்பிக்க உத்தேசித்திருக்கிறேன். அதுவரையில் மாடியிலுள்ளவர்களில் எவரும் வெளியே போகாமல் தாங்கள் கவனித்து காலையில் ஒப்புவிக்கத் தங்களால் முடியுமா? அல்லது நான் பாரா போடட்டுமோ?" என்று கேட்டார். தான் ஒப்புவிப்பதாக ஒப்புக்கொள்ளவே, கலெக்டர் முதலியோர் தத்தம் இல்லங்களுக்குச் சென்றனர். மறுநாட் காலையில், கலெக்டர், சின்ன முதலியார், முதலியோர் வந்து விசாரணை ஆரம்பிக்க உத்தேசித்து தாதி லக்ஷ்மியைக் கூப்பிட்டபோது அவளைக் காணேம். அவள் எப்படி, எப்போது, எங்கு சென்ருளென எவருக்கும் தெரியாதென விசாரணையில் தெரிந்தது.

வீட்டுத் தலைவிகள் வீட்டில் இல்லாத நேரத்தில் குட்டித் தலைவிகளின் அரசாக்ஷியே பெரிதாயிருக்கலாம்.

5

மேற்சொன்ன விஷயங்கள் நடந்த 2-ம் நாள் பாராவிலிருந்தவனான பரமசிவன் பக்கத்து வீதியில் போனதும், ஒருவர் அவன் கையைப் பிடித்துக்கொண்டு "ஆஹா உன்னைப் பார்த்து எத்தனையோ வருஷங்களாகி விட்டதே" என்றார். "தாங்கள் யார் தெரியவில்லையே! தங்கள் பேர் என்ன?" என்றார் பரமசிவன்.

'காக்கா' என்றார்.

"என்ன காக்கா?" "அண்டங் காக்கா" "என்ன அண்டம்? அற்புதப் பேராயிருக்கிறதே? என்றார் பரமசிவம்.

"பிரம்மாண்டம்" என்றார் வந்தவர்.

"பிரமாண்டமா?" "எந்த ஊர்?"

"டாப் ஆங்கிள்"

"டாப் ஆங்கிள்" என்று ஓர் ஊர் இருப்பதாகக் கேள்விப்பட்டதே யில்லையே" என்றார்.

"நண்பரே! "டாப் என்ற பதத்திற்கு அர்த்தமென்ன?"

"சிகரம்-உச்சி-கும்பம்."

"கடைசி பதத்தை வைத்துக் கொள்ளும். "ஆங்கிள்" என்ற பதத்திற்கு அர்த்தமென்ன? "கோணம்" என்பதாம். இரண்டையும் சேர்த்துச் சொல்லும். "கும்பம்+கோணம்" இதில் ம்-என்ற சந்தியைத் தள்ளிச் சரியாய்ச் சொல்லும்.

"ஆஹா கும்பகோணமா? இப்போது தெரிந்தது" என்றார்.

"இப்போதாவது உமது நண்பன் கும்பகோணம் பிரம்மாண்டம் எனத் தெரிந்ததா?" என்று கேட்டார் வந்தவர்.

"ஆஹா எனது பால்ய நண்பன் பிரம்மாண்டமா நீ" என்றதும் அதிக ஆச்சரியப்பட்டார்.

உடனே பிரம்மாண்டம், "பரமசிவம்! நாமிருவரும் ஒன்றாய்ச் சாப்பிட்டு வெகு காலமாயிற்று; வா, டபிள்சௌண்டும், குவார்ட்டர்பீயும் சாப்பிடுவோம்" என்றார்.

"இவ்வளவு வயதாகியும் உனது அகடவிகடம் இருந்துகொண்டு தானே யிருக்கிறது. நீ சொன்னது என்னவென்றே தெரியவில்லையே"! என்றார் பரமசிவம்.

"முதலில் கல்லில் ஊற்றும் போது 'சுய்' என்று ஒரு சத்தமும்; திருப்பிப் போடும்போது 'சுய்'என்று மறு சத்தமுமாகப் போடும் பலகாரமான தோசையே 'டபிள்சௌண்ட்' என்பது உமக்குத் தெரியாதா? என்றார்.

"ஆஹா! தோசையா? அது தோசையா? தெரிந்தது. குவார்டர்பீ என்றீரே! அது என்ன?"

"ஓ அதுவா? குவார்டர் என்றால் அர்த்தம் என்ன?" "கால்" அத்துடன் "பீ" சேர்த்துச் சொல்லும். "கால்பீ"சந்தி நீக்கிச் சொல்லுமே."

உத்தமியின் கண்ணீர் வீணவதில்லை. அவளைத் துன்புறுத்திய கணவனும் நல்ல வாழ்வு வாழ்வதில்லை.

"ஆஹா காப்பியா?" இப்போது தெரிந்தது என்றார்.

உடனே இருவரும் வந்தவர் வீடு போகவே தோசையும் காப்பியும் கொண்டு வரும்படி சாப்பிட்டார்கள். காப்பி சாப்பிட்ட சில நிமிஷங்களில் பரமசிவம் மயக்கமடைந்தார். அவர் ஜோப்பியிலிருந்த உரையைக் கிழிக்காமல் ஜாக்கிரதையாய்ப் பிரித்து வாசித்து மீண்டும் ஒட்டி அவர் ஜோபியில் வைத்துவிட்டு, வேறொரு மருந்தை அவர் மூக்கில் வைக்க பரமசிவம் எழுந்தார்.

"டபிள்சௌண்டும் குவார்டர்பீயும்" சாப்பிட்ட ஜோர், கால் தூக்கம் கூட வந்தாற்போலிருக்கிறதே" என்றார். பரமசிவத்திற்கு ஜோப்பியிலிருந்த கடிதம் ஞாபகம் வரவே சாவகாசமாய்ப் பின் வருவதாகச் சொல்லி விடைபெற்றுச் சென்றார்.

6

மூன்றாம் நாள் ராணி சொர்ணம்மாள் விலாசத்திற்கு ஒரு கடிதம் வந்தது. அதில் 'தங்கள் புத்திரன் கண்ணனை உயிருடன்பெற விரும்பினால், இன்று இரவு 8-மணிக்கு இரண்டாம் பேருக்குத் தெரியாமல் தாங்களும் தங்கள் சகோதரர் ராஜு முதலியாரும் மூவாயிரம் சவரன்களுடன் ஆற்றின் தென்கரையில் குண்டுக்கல் மடுவின் அருகிலுள்ள ஆலமரத்தடியில் வந்தால் 3000 - சவரன்களைக் கொடுத்துவிட்டுக் கண்ணனை மீட்டுப் போகலாம். போலீசாருக்காவது வேறு யாருக்காவது தெரிவித்தாலாவது, அல்லது வேறு ஆட்களுடன் வந்து எங்களைப் பிடிக்க முயன்றாலாவது, தாமதித்தாலாவது, கண்ணன் பிரேதத்தைக் காண்பீர்கள்; சத்தியம்' என்று எழுதியிருந்தது. ராணி ராஜு முதலியாரிடம் கடிதத்தைக் காட்டி யோசனைசெய்து, நகைகளைக் கொதுவை வைத்து சவரன்கள் வாங்கிப் போய்க் கண்ணனை மீட்பதெனத் தீர்மானித்து ராஜுவையே மோட்டார் ஓட்டிவரச் சொல்லிச் சென்றார்கள். எட்டு அடித்ததும் நாணல் புல்லில் மறைத்துக் கட்டியிருந்த படகிலிருந்து முகமூடியணிந்த ஒருவன் வந்து "எங்கே சவரன்கள்" என்றான். ராஜு முதலியார் "கண்ணன் எங்கே" என்றார். "கண்ணன் வடகரையி லிருக்கிறான். சவரன்களுடன் படகில் வந்தால் கண்ணனைப் பெற்று வரலாம்" என்றான். "அங்கு கண்ணன் இருக்கிறானென்பது என்ன நிச்சயம்? அங்கு அழைத்துப்போய் சவரன்களைப் பிடுங்கிக்கொண்டு அனுப்பினால் என் செய்வது" என்றார் ராஜு. "உங்களிருவரையும் இப்போதே இத்துப்பாக்கியால் சுட்டு வீழ்த்திவிட்டு சவரன்களை எடுத்துப் போனால் என்ன செய்வீர்கள்? நாங்கள் சொன்ன சொல் தட்டாதவர்கள்; இதோ இங்கிருந்தபடியே கண்ணனைக் காண்பிக்கிறேன்" என்றதும், ஊதுகுழலால் ஊதிவிட்டு "அக்கரையைப் பாருங்கள்" என்றான். இருட்டாயிருந்த அக்கரை திடீரென்று பிரகாச வெளிச்சத்துடன் தோன்றிற்று; கண்ணனைக் கையில் தூக்கிக் காட்டியதும் வெளிச்சம் மறைந்தது. ராணி மோட்டாரில் ஏறி உட்கார்ந்து கொண்டு ராஜுவைப் படகில்போய் சவரன்களைக் கொடுத்துவிட்டுக் கண்ணனைப் பெற்று வரும்படி சொல்ல, அவர் படகேறியதும் ஆற்றில் வெள்ளம் அதிகமாயிருந்ததாலும், தண்ணீர் வேகமாய்ச் சென்றதாலும் படகை மெதுவாகவே தண்ணீரை எதிர்த்துத் தள்ளவேண்டியிருந்தது.

படகு சற்று தூரம் சென்றதும் ஏற்கனவே அவ்விடத்தில் மறைந்

திருந்த ஒருவர் அங்கு தோன்றி, "ராணி! நான் கலெக்டர்; கண்ணனைக் கண்டுபிடித்து விட்டோம்; இதற்குள் அக்கரையில் கண்ணனைத் திருடிக் கொண்டு போனவர்களெல்லோரும் கைதி செய்யப்பட்டிருப்பார்கள்; வாருங்கள் போவோம்" என்றதும் அவரே காரில் ஏறி வேகமாய்க் காரை ஓட்டி வாராவதியைச் சுற்றிச் சென்று ஒரு பர்லாங்கு தூரத்திலேயே மோட்டாரை நிறுத்தி, "நடக்கும் சத்தம் தெரியாமலும் பேசாமலும் மெதுவாக நடந்து வாருங்கள்; படகு முக்கால் பங்கு வழிதான் கடந்திருக்கிறது" என்று சொல்லி ராணியை அழைத்துச் சென்றார். அவர்கள் போவதும் படகுகரை சேர்ந்ததும் ஒன்றாயிருந்தது. 12-அடி சுற்றளவுள்ள அங்கிருந்த புளியமரத்து மறைவில் ராணியும் கலெக்டரும் மறைந்து நின்றனர்.

ராஜூ முதலியாரும் கள்வரும் ஏறிச்சென்ற படகு அக்கரை சேர்ந்தவுடன் ராஜூ முதலியார் அங்கே கண்ணனை வைத்திருந்தவளைப் பார்த்ததும், அடி கண்மணி! அத்தடிப்பயல் கலெக்டர் மறுநாள் காலையில் வந்து விசாரணை செய்யப்போவதாய்ச் சொன்னவுடனே பயந்து செத்தாயே! பார்த்தாயா என் சமர்த்தை! மூன்று தினங்களில் 3000-சவரன்கள் சம்பாதித்துவிட்டேன்" என்றதும் அவளுக்கு ஒரு முத்தம் கொடுத்தார். அப்பால் ராஜூ முதலியாருக்கு 1500 சவரன்களும், மற்ற மூவருகளும் தலைக்கு 500 சவரன்களும் பங்குபோட்டுக்கொண்டார்கள். அப்போது திடீரென்று அங்கு பட்டப்பகல் போல் வெளிச்சம் உண்டாயிற்று. மரத்திலிருந்து கைகளில் கைத்துப்பாக்கிகளுடன் பவானிசிங்கும் லட்சுமணசாமி முதலியாரும் குதித்துக் "கைகளைத் தூக்குங்கள், இல்லாவிட்டால் நாய்களைப்போல் சுட்டுக் கொல்வோம்" என்றதும், நால்வரும் கைகளைத் தூக்கினார்கள்; மரத்து மறைவிலிருந்த கலெக்டர், ராணியைக் கூப்பிட்டுக் "கண்ணனைக் கவர்ந்த கள்வர்கள் யார் எனப்பாருங்கள்?" என்றதும் மூவர் அணிந்திருந்த முக மூடிகளையும் அப்புறப்படுத்த, ராணி அடைந்த ஆச்சரியத்திற்கும் விசனத்திற்கும் அளவேயில்லை எனெனில் தன் அண்ணனுடன்சேர்ந்து கண்ணனைக் கவர்ந்தவர்கள் தாதி லக்ஷ்மியும், பாராக்காரப் பரமசிவனும், தன் அந்தரங்கக் காதலனான கோதண்ட முதலியாரும் என அறிந்ததும் மூர்ச்சையுற்றுக் கீழே சாய்ந்தாள். அவள் தலை அங்கு கிடந்த கருங்கல்லில் தாக்கவே அப்படியே பிராணன் போய்விட்டது. கணவனையே மதியாத ஒரு ஸ்திரீயின் சரிதம் இப்படி முடிந்துவிட்டது சந்தோஷமே. இத்தகைய அயோக்கியர்களையே பெண்கள் தங்களுக்கு மிக நம்பிக்கையுள்ளவர்களென்று பரமவிசுவாசம்வைத்து, அந்தரங்கத்தில் கற்பும் கெடுகிறார்கள்.

கண்ணனைத் திருடிய நால்வரும் கைதிசெய்யப்பட்டு விசாரணை நடந்தபோது கலெக்டரால் அழைக்கப்பட்டதுப்பறியும் பவானிசிங் பின்வருமாறு சொன்னார்:—"எனக்குத் தந்தி கிடைத்ததும் இவ்வூரிலுள்ள எனது துப்பறியும் நண்பனுக்கு "அரண்மனையிலிருந்து அன்றிரவு வெளியேசெல்லப்பட்டவர்கள் யாவர் என்றும், எங்கு செல்கிறார்களென்றும்" கவனிக்கும்படி தந்தி கொடுத்த பிரகாரம், அவர் தன் ஆட்களுடன் கவனித்ததில் ராஜூ முதலியாரும், பரமசிவனும், லக்ஷ்மியை ஜாமத்தில் அழைத்துவந்து குடும்பங் கலக்கிச் சண்டாளனான கோதண்ட முதலியாரிடம் விட்டு, கண்ணனை ஜாக்கிரதையாகப்

பார்த்துக்கொள்ளச் சொல்லி அனுப் பினூர்களென்றும், அவர்களைப் பின் பற்றியதில் கண்ணனிருந்த இடம் அன்றே கண்டுகொண்டதாகவும் நான் வந்தவுடன் தெரிவித்தார்கள். அங்கு கண்ணனுடன் லக்ஷிமி மட்டும் இருந்தாலும், இதில் சம்மந்தப்பட்ட நால்வரையும் ஸகயு மெய்யுமாய்க் காட்டி ருஜு செய்தாலொழிய, அவர் களின் பக்கத்து மனுஷியாகிய ராணி லட்சுமணசாமி முதலியாரே அதற்கு காரண கர்த்தாவெனக் கூறக்கூடுமாத லாலும், ராஜு முதலியார் மீண்டும், பல தொல்லைகள் விளைவிக்கலாமென் றும், ஆகையால் அவர்களைப் பின்பற் றிச் சென்றேன். அவர்கள் காரியா திகளைக் கவனித்து வரும்போது ராஜுமுதலியார் பாராக்காரனுன பரமசிவத்திடம் இரகசியமாய் ஓர் கடிதம் அனுப்பினூர். அவர்கள் காரி யாதிகளையெல்லாம் நான் முன்கூட்டி விசாரித் தறிந்திருந்தே ஞதைலால், பரமசிவத்தின் பால்ய நண்ப னுன பிரம்மாண்டமேன அவன் நம்பும்படி செய்து ஏமாற்றி அவன் ஜோப்பிலிருந்த கடிதத்தைப் பார்த்ததும், அவர்கள் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறர்களென அறிந்துகொண்டதால், பின் சுலப மாய் எல்லோரையும் ஏக சமயத் தில் பிடிக்க ஹேதுவாயிற்று'' என் றூர்.

விசாரணை முடிந்து அந்நால் வரும் 10 - வருஷக் கடினகாவல் சிக்ஷை விதிக்கப்பெற்றனர்.

லட்சுமணசாமி முதலியாரைக் கெடுக்கும் எண்ணத்துடன் சதியா லோசனைகள் செய்த நால்வரும் "கெடுவான் கேடு நினைப்பான்" என் னும் ஆன்றோர் மொழியை இன்னு மோர் முறை உலகுக்கு உண்மை யென நிரூபித்தார்கள்.

மஹா சாதுக்களும் தர்மவான் களுமாகிய ஸ்ரீமான்கள் இராமசாமி, லட்சுமணசாமி முதலியார்களின் மனங்களை நோகச் செய்ததின் பல ஞக ராணி சொர்ணம்மாள் அவ மிருத்யு அடைந்தாள். சாதுக்களின் மனம் நோகும்படி செய்தால், அவர்க ளாக எவ்வித கெடுதல்கள் செய்யா விட்டாலும், சர்வ வியாபகராகிய பகவான் அவர்களுக்குப் பதிலாக எவ்விதமாவது இக்கலியுகத்திலும் தண்டிக்கவே செய்கிறூர் என்பது இதன் மூலமாய்த் தெரிகிறதல்லவா?

பாரிஸ்டர் இராமசாமி.

—யதார்த்த நட்பு—

I

நாராயணய்யருக்குத் தன் குமாரனின் ஸ்நேகிதர்களெவரும் பிடிக்கவில்லை. இவர்களில்எவரும் மேலாபத்துக்கு உதவமாட்டார்களென்றெண்ணினார். ஏனெனில், அவர் உலக அனுபவத்தில் பழுத்தவராக இருந்தார். இதைத் தனது குமாரன் பாரிஸ்டர் இராமசாமிக்கும் கபடின்றித் தெரிவித்து, நீ தினமும் இரவில் உன் நண்பர்களின் விருந்து தமாஷ்களுக்குப் போய் 12-மணி, 1-மணிக்கு மேல் வருவது குடித்தன ஒழுங்கல்ல என்றார். அதற்கு இராமசாமி கோபத்துடன் என் நண்பர்கள் போக்கிரிகளல்ல, சீமையில் வசித்துப் படித்துப் பழகிய வழக்கம் இங்கும் இரவுகளில் ஒவ்வொரு நண்பரின் அழைப்புக்கும் போய்த் தீரவேண்டியதாயிருக்கிறது என்றார். அதற்கு நாராயண ஐயர் இந்தக் காலத்திலாவது உண்மை நட்பாவது மண்ணாவது யதார்த்த சிநேகம் கிடையாது; இதை இன்றிரவே உனக்குக் காட்டி விடுகிறேன் புறப்படு என்று சொல்லி சிறு மூட்டையுடன் எழுந்தார். இராமசாமிக்குத் தன் தந்தையின் புத்திக் குறைவான எண்ணத்தை மாற்ற வேண்டுமென்று அதிக ஆவலேற்பட்டுவிட்டது. ஆதலின், பால்யப் பள்ளி நேசனும், இப்போது சிறந்த பாரிஸ்டரும், தன் பூரண நம்பிக்கைக்குரியவருமான ஜெகதீச சர்மா வீட்டிற்கு அழைத்துச் சென்று கதவைத் தட்டினான். சர்மா நாராயணய்யரைக் கண்டதும் ஸ்தோத்திர மொழிகளால் பேசி எதற்காக வந்தீர்கள் என வினவினார்.

ஃ

நாராயணய்யர்: — இவ்வுபசாரமெல்லாம் இருக்கட்டும்; உன்னுடைய சிநேகிதன் ராமசாமி ஒரு கஷ்டத்தில் அகப்பட்டுக்கொண்டுவிட்டான். இப்படிப்பட்ட சமயத்தில் நீ உன்னால் இயன்ற உதவியை அவனுக்கு செய்து அவனைக் கஷ்டத்திலிருந்து விடுவிக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அவன் உயிருடனிருப்பதேமுடியாது.

சர்மாவுக்கு ஒரே பீதி பிடித்தது. ராமசாமியை உற்று நோக்கினார். ஒருவருடைய முகத்திலும் சந்தோஷ அறிகுறி யில்லை. இடித்த புளிபோல் நிச்சப்தமாய் எல்லாரும் உட்கார்ந்திருந்தார்கள்.

ஆச்சரியத்துடன் என்ன விசேஷம் என்றார் சர்மா.

நாராயணய்யர்:—இன்று உன் சிநேகிதன் ராமசாமி தன் மனைவியைக் கோபத்தால் கொன்றுவிட்டான்.

சர்மா:—என் நீங்கள் இங்கே வந்து தொந்திரவு செய்கிறீர்கள்? என்னால் இந்த விஷயத்தில் உபகாரம் ஒன்றும் செய்ய முடியாது

ராத்திரி மணி ஒன்று ஆகிறது. இது எனக்கு முன்னாலே தெரிந்தால் உங்களை ஜவாப் சொல்லாமலே அனுப்பியிருப்பேன். நன்றாய் என்னைத் தேடிவந்தீர்கள்! ராமசாமிக்கு எவ்வளவோ சிநேகிதர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் போகாமல் நன்றாய் என் வீடு தேடி வந்தீர்கள். பிறர் சங்கடத்தில் எனக்கு என்ன? உடனே வீட்டை விட்டு வெளியே போய்விடுங்கள். இல்லாவிடில் உடனே போலீஸுக்குத் தெரியப்படுத்துவேன்.

II

ராமசாமிக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. அப்பொழுதுதான் தன்னுடைய உலக அனுபவமுள்ள வயது சென்ற தகப்பனை உற்று நோக்கினான். அவருடைய வார்த்தை சரியாக நிறைவேறிவிட்டது.

ஃ

பிறகு அரை மணிக்கெல்லாம் பிதாவும் புத்திரனுமாகத் தெருவில் போய்க்கொண்டிருந்தார்கள். கே. சி. சிவராமன் பி. சி. இ. இன்ஜினியர் வீட்டுக்குச் சென்றார்கள். கதவைத் தட்டினார். ஒரு சேவகன் கதவைத் திறந்தான். எஜமான் தூங்கிக்கொண்டிருப்பதாகச் சொன்னான். இவர்கள் தங்களின் வரவை அவசரமாய்க்கூறி சிவராமனை எழுப்பித் தெரியப்படுத்தச் சொன்னார்கள். சிவராமன் கண் விழித்து ஜன்னல் வழியாகப் பேசினார். "கொஞ்சம் தூக்கக் கலக்கம். எதாவது காரியம் அவஸரமா யிருந்தால் வருகிறேன். இல்லாவிட்டால் காலையில் வரலாமே. ரொம்ப அவஸர விசேஷமுண்டா?" என்றார்.

நாராயணய்யர் ராமசாமிக்கு ஜாடை காட்டினார். இருவரும் ஜன்னல்கீழ் போய் நின்றுகொண்டார்கள். நாராயணய்யர் மெதுவாக "உங்களுடைய சிநேகிதர், தன் மனைவியை அடித்துக் கொன்றுவிட்டார். தலையை வெட்டிவிட்டார். உடலைப் புதைத்துவிட்டு தலைமட்டும் கொண்டு வந்து இருக்கிறோம். விடியற்காலை வரை ராமசாமி இங்கே இருக்கும்படி செய்யவேண்டும். இந்த விஷயத்தில் அவனுக்கு அபவாதம் அபாயம் ஏற்படாமல் கஷ்டத்திலிருந்து காப்பாற்ற வேண்டும். நீங்கள் செய்யும் உபகாரத்தை எந்நாளும் மறக்கமாட்டோம்" என்றார்.

சிவராமன்:—என்னால் பொய் சொல்ல முடியாது. சுவாமி! இந்த மாதிரி விஷயங்களில் நான் தலையிட்டுக் கொள்வதில்லை. இந்தக் கொலை விஷயமாய் ஒருவித உபகாரத்தையும் என்னிடம் எதிர்பார்ப்பதில் பிரயோஜனமில்லை. உடனே போய்வாருங்கள்! என்று 'சடக்' என்று கதவை மூடிக்கொண்டார்.

நாராயணய்யர்:—ஒரே ஒரு வார்த்தை சொல்லி விடுகிறேன். கையில் ஒரு தம்படிகூட இல்லை. ராமஸ்வாமியை ஊருக்கு அனுப்பி விடுகிறேன். ரூ. 10 மட்டும் கடனாகக் கொடுத்து உபகாரம் செய்யவேணும். நாளையதினம் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்.

சிவராமன்:—இந்த விஷயத்தில் நான் ஒன்றும் செய்வதற்கில்லை. நன்றாய் என்னைத் தூக்கத்திலிருந்து எழுப்பித் தொந்திரவு செய்தீர்கள். பணம் ஒரு பைசாகூட என்னிடமில்லை. இப்போது சௌகரியப்

எந்த சங்கதியிலும் பழய நட்பு கெடாதிருக்கும்படி தொடர்ந்து தலைமைசைக்கபடியே செல்.

படாது. என் நின்று காலதாமதம் செய்கின்றீர்கள்? இங்கே ஒருநிமிஷம் கூட இருக்கவேண்டாம். நீங்கள் போகாவிட்டால் வேலைக்காரனிடம் சொல்லி 'சல்தா' கொடுக்கச் சொல்லுவேன், என்று கூறிக் கதவை மூடிக்கொண்டு வீட்டிற்குள்ளே போய்விட்டார்.

ராமசாமிக்கு ஒன்றும் தோன்றவில்லை. கண்களில் நீர் ததும்பியது. இவர்களுக்குச் செலவிட்டதோ ஏராளம். என்ன உலகம்? சிநேகிதன் என்று நினைத்தவர், பிறருடைய கஷ்டத்தைப் பொறுமையுடன் கேட்கக் கூடத் துணியவில்லையே! இப்பேர்ப்பட்ட சிநேகிதர் பேசினபேச்சென்ன? இவர்களுக்கு என்னிடம் என்ன அன்பு? என்ன தமாஷ் பேச்சுகள்! இப்போதுதான் எனக்கு சிநேகிதர்களுடைய மனப்பான்மை உண்மையில் தெரியவந்தது என்று கலங்கினுர்.

. நாராயணய்யர்:—என்ன ராமு! உனக்கு இன்னும் எந்த சிநேகிதர்களிடம் நம்பிக்கை இருக்கிறதோ சொல்லு; அதையும் பரீக்ஷைசெய்து விடுவோம் வா.

ராமஸ்வாமி:--இதுதான் எனக்கு முதல் அநுபவம். வெளுத்ததெல்லாம் பால் என்று எண்ணினேன். இப்போதுதான் ஒரு ஆங்கில தத்துவ ஞானியின் (Philosopher) வார்த்தை என் நினைவுக்கு வருகிறது. அவர் சொன்னதாவது.—(உலகில் ஈசுவரனையுங்கூடக் காணலாம். உண்மைச் சிநேகிதனைக் காண்பது அரிது.) இம்மொழியை வேடிக்கையென்றே நினைத்தேன். இப்போது அதன் கருத்து விளங்கியது.

நாராயணர்:—உண்மைச் சிநேகிதரைப்பற்றிக் கட்டுக்கதைகள் அநேகமிருக்கின்றன. ஆயினும் அவர்களை எப்பொழுதாவது எங்கேயாவது பார்த்திருக்கிறேமா? இருந்தாலும் எனக்கு உண்மைச் சிநேகிதன் ஒருவன் இருக்கிறுன்.

ராமசாமி:—என் நம்பிக்கையெல்லாம் அடியோடு போய்விட்டது. தாங்கள் இனி என்னைப் பரீக்ஷிக்க வேண்டாம்.

நாராயணர்:—என்னுடைய சிநேகிதனை உனக்குத் தெரிவிக்கிறேன். இப்போதே அவனிடம் போவோம். எனக்கு சிநேகிதர்கள் அநேகம் கிடையாது. அவன் ஒரே சிநேகிதன்தான் உண்டு. எனக்கு ஆயுள் பூராவும் ஒரு சிநேகிதன்தான் கிடைத்தான். இவன் தன் உயிரையும் எனக்காகவிடத் தயாராக இருக்கிறுன். அவனுடைய நட்புதான் உண்மை நட்பு என்றுர்.

நடுநிசியில் தகப்பனும் பிள்ளையும் அலைந்து ஒரு சந்தில் நுழைந்தனர். ஒரு சிறு வீட்டிற்கு முன் நின்று கதவைத் தட்டி "கோவிந்தா" என்று சத்தம் போட்டார்கள்.

கோவிந்தன் தூங்கிக் கொண்டிருந்தார். சப்தம் கேட்டு விழித்துக்கொண்டு 'யார் அது' என்று கேட்டார்.

"நான்தான் கதவைத்திற" என்றுர் நாராயணய்யர். கோவிந்தம் பிள்ளையும் குரலைகேட்டு அறிந்து ஏதோ ஆபத்துபோல இருக்கிறதென்று நினைத்தார். கதவைதிறந்து "என்ன? என்ன? மெள்ளச் சொல்லுங்கோ" என்றுர்.

இவர்கள் எல்லாரும் வீட்டிற்குள் சென்றுர்கள். நாராயணய்யர் எல்லா விஷயங்களையும் முன்போலச் சொன்னுர். கோவிந்தம்பிள்ளை "முண்டம்தலை எங்கே?" என்றுர்.

'இதோ' என்று தன் துணி மூட்டையைக் காட்டினார் ஐயர்.

கோவிந்தம் பிள்ளை:— "என்னிடம் கொடுத்துவிடு."

நாராயணய்யர்:—என்ன செய்யப் போகிறாய்?"

கோவிந்தம்பிள்ளை: — எங்கேயாவது மறைத்துவிடுகிறேன். நேரமாகிறது.

நாராயணய்யர்: —ஒருவரிடமும் சொல்லக்கூடாது. போலீஸார் ஒரு வேளை உன்னுடைய வீட்டைச் சோதனை செய்தால் என்ன செய்வாய்?

கோவி:—என்ன பிதற்றிக்கொண்டிருக்கிறாய்? வாயை மூடிக்கொண்டு நீ போய்விடு! நான் எல்லாம் பார்த்துக்கொள்ளுகிறேன் கவலைப்படாதே.

நாராய:—இலகுவாய்ப் பேசிவிட்டால் போதுமா! காரியத்தை நடத்துவது கஷ்டம்.

கோவி:—(கோபத்துடன்) என்ன! என்னை அவமானப்படுத்துகிறாய்? சீ! அதிகமாய் வீணாகப் பேச எனக்குத் தெரியாது. ஒரு விஷயந்தான் எனக்குத் தெரியும். என்னிடம் நம்பிக்கை இருந்தால் செய்யுங்கோ சாமி! இல்லாவிட்டால் உங்கள் இஷ்டப்படி செய்யுங்கோ.

தகப்பனும், பிள்ளையும் கோவிந்தப் பிள்ளையினுடைய கோபத்தின் காரணம் அன்பே என்று எண்ணினர். ராமசாமியின் கண்களில் சந்தோஷத்தால் நீர் பெருகியது. நல்ல முத்துபோல் இருப்பது போலி முத்தா யிருக்கிறது, போலிமுத்துபோலத் தோற்றுவது நல்ல முத்தா யிருக்கிறது என்ன ஆச்சரியம் என்றார்.

நாராய:—(எழுந்து நின்று) "கோவிந்தா, உன்னையே நம்பியிருக்கிறேன். கைவிடாதே. உன்னுடைய பேச்சை நம்பி என்னுடைய பிள்ளையின் உயிரை உன் கையில் ஒப்பித்துவிட்டேன். தேன் ஒழுக நீயும் பேசிவிட்டாய். காரியத்தில் எப்படியோ தெய்வந்தான் துணை.

கோவிந்:—பின்னால் எல்லாம் நன்றாக விளங்கும். நீர் சொல்லுவது போல், பேச்சால் மட்டும் நம்பிக்கை எப்படி உண்டாகும்?

நாராயணய்யர் தன் சிநேகிதனிடம் நம்பிக்கை இல்லாதவன்போலப் பாசாங்குசெய்து, அத்துணி மூட்டையை ஒரு அறையில் வைத்துவிட்டுப் பூட்டிக்கொண்டு சாவியுடன் புறப்பட்டு விட்டார்.

ஃ

வழியில் ராமசாமியை நோக்கி, "பார்த்தாயா! இதற்கு என்ன சொல்லுகிறாய்?" என்றார்.

ராமசாமி:-இவன் மனிதன் அல்ல; இவரை தேவதையாகத்தான் நினைக்க வேண்டும். இவருடைய ஹிருதயம் அன்பால் நிறைந்திருக்கிறது. பிறர்கஷ்டத்தைத் தன் கஷ்டம்போல பூர்ண மனத்துடன் பாவிக்கும் மனிதனை நான் பார்த்ததில்லை. இவர் நாளைக்கு ஒருக்கால் வரக்கூடிய துன்பத்தையும் கவனிக்காமல் பிறர்க்கு உதவி செய்யத் துணிந்துவிட்டார்.

பெண்களின் முன்னேறுவதைப்பற்றி பிரஸங்கிக்கிறார்கள். அவர்களுக்கு ஓட்டு சுதந்திரம் வந்துவிட்டதென்கிறார்கள். இவையனைத்தும் வெளி தடபுடல். உண்மையை நோக்கில் எவ்வளவோ பெண்கள் கணவனாலும், குடும்பத்துள்ளோராலும் அடிகள் பட்டுக் கண்ணீர் விடுகிறார்கள். அடிமை மாடாகக் கிடந்து அழுகின்றார்கள்.

இதுவே தியாகம். இவருடைய பாதாரவிந்தத்தை எக்காலும் நமஸ்காரம் செய்துகொண்டே இருக்கத் தீர்மானித்துவிட்டேன்.

நாரா:—கொஞ்சம் பொறுமையுடன் இரு; அவஸரப்படாதே. இப் பரீக்ஷை இன்னும் கொஞ்சம் பாக்கி இருக்கிறது. அது முடிந்தவுடன் பேசிக்கொள்ளலாம்.

ராமசாமிக்குத் தன் தகப்பனுடைய அனுபவத்தைப் பார்த்து ஆச்சரியமுண்டாயிற்று. இன்னும் என்ன பாக்கி இருக்கிறதோவென்று யோஜித்தும் அவனுக்குப் புலப்படவில்லை. போகிறவழியில் மற்றொரு அருமைச் சிநேகனான டாக்டர் சுப்பிரமணியத்திடம் நாராயணய்யர் சென்று, கொலையின் விவரங்களைக் கூறி அவ்விரவில் ராமசாமி தஞ்சாவூரிலிருந்ததாக ஒரு சாக்ஷி கூறும்படி கேட்க, அவர் கண்டிதமாய் மறுத்துத் துரத்திவிட்டார்.

ஃ

இரண்டுநாள் கழிந்தபின் மத்தியான சமயம். ராமசாமியும் கோர்ட்டு பார்—ரூமில் உட்கார்ந்து ஹிந்து தினசரிப் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தான். ராமசாமியினுடைய மனோபாவமும் ஒருவித மாறுதலை அடைந்திருந்தது. முன்போல, சிநேகிதர்களுடன் பேசுவதை நிறுத்திவிட்டான். இவனுடைய சிநேகிதர்களில் ஒருவர் இவனுக்குப் பின்னால் வந்து "என்னடா" என்று தட்டித் தோளில் கை வைத்தார் ராமசாமியும் திடுக்கிட்டுத் திரும்பி டாக்டர் சுப்பிரமணியனைக் கண்டார். ராமசாமியும் ஒன்றும் பேசவில்லை. அவன் முகத்தில் ஒருவித துக்கமும் கோபமும் வெறுப்புக்குறிகளும்தோன்றின. இரண்டு மூன்று நிமிஷத்திற்குப் பிறகு பெருமூச்சு விட்டுக்கொண்டு "வா உட்காரு" என்றான். வார்த்தையில் விகல்பமில்லை. ஆனால், சொல்லின் தோரணையும் முற்றும் டாக்டருக்கு ஒருவிதமாய்த் தோன்றிற்று. டாக்டர் முகத்தில் "ஈ" ஆடவில்லை. டாக்டரும் கைகுட்டையைப்பாக்கெட்டிலிருந்து எடுத்து முகத்தைத்தடவி, பங்காவை பார்த்து "ரொம்ப வெயிலாகவிருக்கிறது" என்றார்.

ராம்:—இக்கடும் வெயிலில் நீ வீட்டைவிட்டுப் புறப்படக்கூடாது.

டாக்டர்:—இங்கே உன்னைச் சந்திக்கலாமென்று புறப்பட்டேன். 2, 3 நாளாக உன்னைப் பார்க்க முடியவில்லையே? என்?

ராம்:—வேறு வழியாகப் போகிறேன். உன்னுடைய வீட்டுவழி போகிறதில்லை.

டாக்டர்:—2, 3 நாளாக வழியில் உன்னைப் பார்க்க எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தேன். உன்னைக் காணோம். இங்கே வந்தாகிலும் உன்னைப் பார்க்கலாமே என்று வந்தேன்.

ராம்:—உன்னுடைய பிரியம் வெளியாய்விட்டதே! என்னைக் காணாமல் கண்கள் உனக்கு சோர்ந்துவிட்டதா பாவம்! என் உபசாரவார்த்தை? உன்னுடைய சுபாவத்தைத் தெரிந்து கொண்டேன், போதும்!

டாக்டர்:-(கோபத்துடன்) 'என் உனக்காகப் பொய்சாக்ஷி சொல்லவேணுமா? நல்ல யோக்கியதை?

பெண்களின் படிப்பெல்லாம் தாய்வீட்டிலிருக்கும் வரையுமே விருத்தியாகும். அதன்பின் அப்பெண்ணுக்கு வருகிற புருஷன் மூர்க்கனாய் இருந்து புஸ்தகத்தைப் பிடுங்கி அடுப்பிற்குள் போடுபவனாக மாறினால் பெண்கல்வியின் அபிவிர்த்தி எவ்வாறு முடியும்?

உடனே ராமசாமி பத்திரிகையை மேஜையின்மேல் போட்டுவிட்டு—"உன்னை ஒரு காரியத்திலும் நம்புவதற்கில்லை என்பதை நான் கண்டு கொண்டேன்" என்றான்.

டாகடர்:—அந்தரங்க சிநேகிதர்களுடன் கொஞ்சம் ஜாக்கிரதையாய்ப் பேசப்பா! உன் ரகஸ்யம் என் கையில் இருக்கிறது.

ராமசாமி:—(கோபத்துடன்) நீ என்னுடைய அந்தரங்க சிநேகிதன் அல்லவென்று தெரிந்துகொண்டேன்.

டாக்டர் உடனே நாற்காலியை விட்டு எழுந்து "இன்று முதல் உன்னை என் சத்துருவாகவே பாவிக்கிறேன்" என்று கூச்சல்போட்டான்.

ராமசாமி:-அப்படி நினைத்துக்கொண்டு என்ன செய்யப்போகிறாய்?

டாக்டர்:—என்னால் என்னசெய்ய முடியுமென்று நினைத்துப் பார். உன்னுடைய மானமும் உயிரும் என் உள்ளங்கையிலிருக்கிறது. உஷார்! வேணுமென்றால் என்னதான் செய்ய முடியாது?

ராமசாமி:—நீ செய்வதைச்செய்? மனதில் வைத்துக்கொண்டு தவிக்காதே. நீ சிநேகிதன் என்று மட்டும் இனி என்னிடம் என்றைக்கும் சொல்லிக்கொள்ளாதே.

டாக்டருக்கும் ரொம்ப கோபம் வந்துவிட்டது. ராமசாமியை ஒரு விதமாய்ப் பார்த்துவிட்டு வெளியே சென்றார்.

ஃ

டாக்டரான நண்பன் ஒருக்கால் பச்சாத்தாபப்பட்டு மறுபடியும் தன்னை மன்னிப்பு கேட்பான் என்ற ஆசை மட்டும் ராமசாமியின் மனத்தைவிட்டு விலகவில்லை ஆசைபங்கம் கொஞ்சம் பாக்கி இருந்தது. டாக்டர் போன போக்கை நினைத்தால் நிச்சயமாய்ப் போலீஸிடம் சொல்லி விடுவான் என்று சந்தேகமுமிருந்தது நம்பிக்கையும் விசுவாசமும் கொஞ்சத்தில் விலகாது.

சாயங்காலம் கச்சேரி மூடும் நேரமாகிவிட்டது.

எதிர்பார்த்தபடி போலீஸ்காரர் ஒருவரும் வரவில்லை. ராமசாமியும் அனுவசியமாய் டாக்டரைப்பற்றிக் கடூரமாய் நினைத்ததைப்பற்றி விசனப்பட்டான். வீட்டுக்குள் சென்று தன் ஆபீஸ் ரூமில் அமர்ந்தான் உடனே டிப்டி போலீஸ் சூப்ரெண்டு கான்ஸ்டேபிள்களுடன்கூட ரூமில் நுழைந்தார். உடனே ராமசாமி எழுந்து கை குலுக்க, இருவரும் உட்கார்ந்தார்கள்.

ராமசாமி:—என்ன சார்! இங்கே வந்தது?

சூப்ரெண்டு ராமசாமியினுடைய முகத்தைப் பார்த்தார். அவன் முகத்தில் யாதொரு குறிகளாவது, கொலை செய்தவன்போலத் தோன்றவில்லை.

சூப்ரெண்ட்:—என்ன, ஏதாவது விசேஷமுண்டோ? தங்களுடைய மனைவி சௌக்கியமா?

ராமசாமி:—உடனே கொல் என்று சிரித்தான். மனைவி சௌக்கியந்தான், வியாதி ஒன்றுமில்லையே.

சூப்ரெண்டுக்கு ஒன்றும் புலப்படவில்லை. ராமசாமி கொலை செய்

உன் நோக்கங்களைப் பின்பற்றுதவர்களை எவ்வளவுதான் நீ கஷ்டப்பட்டாலும் உன் பக்கமாக அவர்களைத் திருப்புவது கஷ்டம்.

திருந்தால் என்னைக் கண்டு பயப்பட மாட்டானு! என்று நினைத்து ஆச்சரியமடைந்தார். ஒருகால் இவனுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதோ! என்று சிந்தித்தார்.

ராமசாமி:—என்ன விசேஷம்?

சூப்ரண்டு;—நீங்கள் மனைவியைக் கொலை செய்ததாகக் கேள்வி.

ராமசாமியும் சிரிப்புடன் எல்லா சமாசாரங்களையும் விவரமாகக் கூறினான். தன் மனைவியை உடனே கூப்பிட்டான். சிநேகிதர்களைப் பரீக்ஷிக்க ஒரு பொய்க்கதை கட்டிவிட்டேன். தங்களுக்கு டாக்டர் சிரமம் கொடுத்ததற்கு மன்னிக்க வேண்டும்.

சூப்ரேண்ட்:—டாக்டரை இப்படிப் பரிக்ஷை செய்தது சரியல்ல. யார்தான் இம்மாதிரியான கஷ்டத்தில் உபகாரம் செய்யத் துணிவார்?

ராமசாமி:—அப்படிப்பட்ட ஆசாமி ஒருவன் இருக்கிறான். அவனைப் பற்றித் தங்களுடைய அபிப்பிராயம் என்ன?

சூப்ரே:—அப்படி இருந்தால் அவனே தெய்வம்; மனிதனன்று; என்ன பைத்தியமாய் இருக்கிறாயே.

சூப்ரே:—வந்த கான்ஸ்டேபிலைக் கூப்பிட்டு கோவிந்தப்பிள்ளையின்வீட்டுக்குப்போய், அவனை அரஸ்டு செய்வதுபோல அழைத்துவர உத்திரவு செய்தார்.

கோவிந்தப்பிள்ளை இவர்களைப் பார்த்தவுடன் தான்குற்றவாளியென்றும், ராமசாமி பெண்சாதியைக் கொலைசெய்ததாகவும் ஒப்புக்கொண்டு உடனே புறப்பட்டுப்போனான்.

சூப்ரே:—கோவிந்தப்பிள்ளை! உம்மை அரஸ்டு செய்திருக்கிறேன் தெரியுமா?

கோவிந்தன்:—தெரியும். தண்டனையும் சொல்லிவிட்டால் தயாராக இருக்கிறேன்.

சூப்ரே:—நீ செய்த குற்றத்திற்குத் தண்டனை கோர்ட்டில் விதிப்பார்கள். நீ வாஸ்தவத்தில் கொலை செய்யவில்லை என்று எனக்குத் தெரியும். ஏன் குற்றத்தை ஏற்றுக் கொள்ளுகிறாய்? உண்மையைச் சொன்னால் தப்பித்துக் கொள்ளலாம்.

கோவிந்தன்:—கொலை செய்துவிட்டு அதை மறைப்பது நானல்ல. விசாரணைக்கும் தண்டனைக்கும் தயங்கவில்லை.

சூப்ரே:—உடனே கோவிந்தப்பிள்ளையைத் தட்டிக் கொடுத்துப் புகழ்ந்தார். உடனே நாராயணய்யர் கோவிந்தப்பிள்ளையைக் கட்டிக்கொண்டு ஆனந்தபாஷ்பம் சொரிந்தார்.

ஃ ஃ ஃ

ராமசாமிக்கு வக்கீல் தொழிலில் நன்றாய் வரும்படி கிடைக்கிறது. ஆயினும், ஒருவரையும் சிநேகிதர் என்று நினைப்பதுமட்டும் கிடையாது. குழந்தை, பணம் இதர சௌகரியங்களுக்கும் குறைவேயில்லை. ஆயினும், ராமசாமி தனியே உட்கார்ந்திருக்கும்பொழுது கோவிந்தப்பிள்ளையின் உயர் நட்பினை நினைத்து நினைத்து ஆநந்தப்படுவார். கோவிந்தப்பிள்ளையும் நாராயணய்யரும் க்ஷேமமே.

('ஹிந்தி'யில் வெளியான கதையைச் சுருக்கப்பட்டது.)

S. V. ஸ்ரீநிவாஸன் B.A. B.L.

சுயமரியாதை இயக்கத்தால் அதிகப் பிரஸங்கமாய் எல்லை மீறி நடந்து பாழ்பட்டுப்போன குடும்பங்கள் சிலவற்றின் பரிதாபம் பகரொணாது.

ஒரு ராணியினது கற்பின் சோதனை

"என் அருமைத் தந்தாய்! விடைபெற்றுக் கொள்கிறேன். நமது பூர்வ மேன்மையை ஒருபோதும் மறவேன். மறுபடியும் உயர்ந்த நிலைக்கு வர என்னால் ஆமளவும் முயற்சிப்பேன். தங்களின்உத்திரவுப் படியே நான் பாரீஸுக்குப் போய்த் துப்பாக்கிப் படையிற் சேர்ந்துகொள்கிறேன். கடவுள் நம் இருவரையும் மறுபடியும் சந்தோஷத்துடன் சந்திக்கவைப்பாராக" என்று "ஆர்டாக்நான்" என்ற வாலிபன் தன் தந்தையை வணங்கி ஆசிபெற்றுப் பாரீஸ் நகரத்துக்குப் பிரயாணமானான்.

ஃ

பாரீஸ் நகரத்தை 13-வது லூயிஸ் அரசர் அரசாக்ஷி செய்து வந்தார். கிறிஸ்து மத குருவான போப்பின் பிரதிநிதியாக ரிச்செல்யூ என்பவர் இருந்தார். அவர் மனதில் ஒரு பேராசை எண்ணம் தோன்றிற்று. லூயி அரசரைத் தமது கைப்பொம்மையாக வசப்படுத்திக்கொண்டு இராஜ்யாதிகாரத்தைத் தாமே நடத்த வேண்டுமென்று விரும்பினார். இதற்கு இராணி தடையாக இருப்பதைக் கண்டு, அவள் மீது ஏதாவது விபசாரக் குற்றம் சாட்டி விலக்கிவிடின் தமது எண்ணம் நிறைவேறுமென்று யோசித்து, லூயி அரசரிடம் சென்று இங்கிலாந்திலுள்ள பக்கிங்ஹாம் பிரபுவுக்கும் ராணிக்கும் சிநேகமிருப்பதாகக் கோள் கூறினார். அரசர் அதைக் கேட்டுச் சகியாதவராய் ராணியின் அறைக்குச் சென்று அவளது கடிதங்களை யெல்லாம் ஆராய்ந்தும் குற்றமான கடிதம் எதுவும் கிடைக்கவில்லை. அரசர் மனோசமாதானத்துடன் பன்னிரு வைரங்கள் பதிப்பித்த பதக்கமொன்றை இராணிக்குப் பரிசாகத் தந்தார்.

ஃ

ரிச்செல்யூ தான் மூட்டிய கலக நெருப்பைப் பலப்படுத்தஎண்ணி, அரசரும் அரசியும் இருக்கும் சமயம் பார்த்துவந்து, ஒரு முக்கிய விஷயமாக இராஜாங்கக் காகிதத்தில் இருவரிடமும் கையொப்பம் வாங்கினார். அதே சமயத்தில் வேறொரு கடிதத்திலும் மோசமாக ராணியிடத்தில் கையெழுத்துப் பெற்றுக்கொண்டு சென்றார். அந்தக் கடிதத்தில் காதல் வார்த்தைகளைக் காண்பித்து இராணி பக்கிங்ஹாம் பிரபுவை வரும்படி எழுதியதுபோல் எழுதி அதைப் பக்கிங்ஹாம் பிரபுவுக்கு அனுப்பி, நேரில் அவர் வந்து ராணியைக் காணும்படியான வழியை உண்டு பண்ணிவிட்டார்.

ஃ

இந்த சமயத்தில் ஆர்டாக்நான் என்ற வாலிபன் பாரீஸ் நகரம் வந்து அப்போது அங்கு நடந்த பேர்போன மூன்று கத்திச் சண்டைகளில் அரசரின் சேனையோடு சேர்ந்து, ரிச்செல்யூவின் ஆட்களை எதிர்த்து வீழ்த்தி அரசரிடத்தில் பரிசு பெறுவதானான்.

ஃ

எவ்வளவோ நெருங்கிய நண்பர்களா யிருந்தாலும் ஒரு சிறு அல்ப சங்கதி அவர்களைப் பிரித்துக் கொடிய விரோதிகளாக்கிவிடுகின்றது.

காதற் கடிதத்தைக் கண்ட பக்கிங்ஹாம் பிரபு அது உண்மையாகவே இராணியால் எழுதப்பட்டதாக எண்ணிப் பாரீஸ் வந்துசேர்ந்து, அராஸ்மனைத் தையற்காரியின் மூலமாக இராணியைக் கண்டுகொண்டார். இராணியோ தான் எந்தக் காதற் கடிதமும் எழுதவில்லையென்று மறுத்துவிட்டு, கடைசியில் பக்கிங்ஹாம் பிரபு ஒரு ஞாபக அடையாளம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்காக அரசர் தந்த புதிய பதக்கத்தைக் கொடுத்தனுப்பி, அத்துடன் சனி தொலைந்ததென்று மனோ சமாதானமானாள்.

ஃ

இராணி தனது பதக்கத்தைப் பக்கிங்ஹாம் பிரபுவுக்குக் கொடுத்தனுப்பியதை ரிச்சல்யூ எவ்விதமோ அறிந்து கொண்டார். அப்படித்தான் அறிந்ததை ராணிக்குத் தெரிவித்து அவளைத் தன் கைவசப்படுத்த முயன்றும் முடியவில்லை. அதன் பின் அரசரிடம் சென்று சமீபத்தில் நடக்கப்போகும் ராஜாங்கக் கூத்து ஒன்றுக்கு இராணி புதுப் பதக்கம் அணிந்து வந்தால் நன்றாயிருக்குமென்று கூற, அரசரும் ஆம், அப்படியே செய்யலாம் என்றார்.

ஃ

இராணிக்கு இந்தச் செய்தி எட்டிற்று. என்ன செய்வதென்று யோசித்தாள். அரசர் பிரியமாயளித்த பதக்கம் பக்கிங்ஹாம் பிரபுவினிடம் போய்விட்டதென்று வெளியானால், அரசரின் கோபத்துக்கு ஆளாக வேண்டுமே, அத்துடன் மானக்குறைவும் சம்பவிக்குமே என்று கலங்கினாள்.

ஃ

இந்த சமயத்தில் ஆர்டெக்னான் அந்தப் பதக்கத்தைத் தான் கொண்டு வந்துவிடுவதாக இராணிக்குத் தைரியம் கூறி அராஸ்மனைத் தையற்காரியின் துணையோடு இன்னும் மூவரைச் சேர்த்துக்கொண்டு லண்டனுக்குப் புறப்படுவதானான். இவ்விஷயத்தைத் தையற்காரியின் மாமன் லஞ்சம் பெற்றுக்கொண்டு ரிச்சல்யூவுக்குத் தெரிவித்துவிட்டான். உடனே ரிச்சல்யூ கப்பல் புறப்படும் கலே துறைமுகத்தைப் பூட்டி எந்தக் கப்பலும் வெளியில் இல்லாதபடி செய்துவிட்டார். அத்துடன் ஆர்டெக்னானைச் சுட்டுவிடவும் ஏற்பாடுசெய்து, தனது கைத்துண்டைக் கீழே போட்டதும் சுடும்படி ஆட்களை மறைத்து வைத்திருந்தார். ஆர்டெக்னான் அவ்வழி வரவும், மறைந்திருந்த ஆட்கள் சுடவும், அதற்குத் தப்பித்துக்கொண்டு தோழர்களோடும் தையற்காரியோடும் சேர்ந்து துறைமுகத்துக்கு ஓட, அது பூட்டப்பட்டு எந்தக் கப்பலும் வெளியிலில்லாததைக் கண்டு தியங்கினான். கடைசியாக, இரவில் கதவிலேறிப் படகிற் குதித்துப் படகைச் செலுத்திக் கொண்டு இங்கிலாந்து போய்ச் சேர்ந்தான்.

ஃ

ரிச்சல்யூ இதுவரையும் வெறுமனே இருக்கவில்லை. மாலேடிவின்டர் என்ற ஸ்திரீயை லண்டனுக்கு அனுப்பி பக்கிங்காம் பிரபுவினிடமிருந்து அப்பதக்கத்தை எவ்விதமா

நீ எவ்வித தவறுதலும் உன் மனமறியச் செய்யாதிருக்கும்போது உன்னை நிந்திப்போர் உன் மேன்பாட்டில் பொறாமை கொண்டவர்களாகவே இருக்கலாம்.

வது களவாடி வரும்படி ஏற்பாடுகள் செய்துவிட்டார். அந்த ஸ்திரீயும் பக்கிங்ஹாம் பிரபுவின் வீட்டை யடைந்து வெகு சாமர்த்தியமாய்க் கத்தரிக்கோலால் அந்தப் பதக்கத்தைக் கத்தரித்துக்கொண்டு வெளி வரும் சமயத்தில் ஆர்டக்னான் உள்ளே நுழைந்தான். அங்கே பதக்கத்தைக் காணுமல் பக்கிங்ஹாம் பிரபு தவிப்பதை யறிந்து, தான் வழியில் கண்ட ஸ்திரீயே எடுத்துச் சென்றிருக்கவேண்டுமென்றறிந்து கப்பலுக்கு ஓட, அதே சமயம் கப்பலும் புறப்பட்டுவிட்டது. கடலில் நீந்திப் போய்க் கப்பலைப் பிடித்து ஏறிக் கொண்டான். பிறகு கப்பல் பாரீவில் இறங்கும் சமயத்தில் நள்ளிரவில் அந்த ஸ்திரீயின் அறைக்குள் புகுந்து எங்கும் தேடியும் கிடைக்காமல், கடைசியில் அந்த ஸ்திரீயை இறுகக் கட்டி, அவள் கையிலிருந்த பதக்கத்தைப் பிடுங்கிக்கொண்டு தண்ணீரிற் குதித்து நீந்தத் தொடங்கினுன். இவன் கரை சேர்ந்ததும், இவனுக்காக எதிர்பார்த்திருந்த தையற்காரியும் அங்கே காத்து நின்ருள். இருவருமாகச் சுற்று வழியாகப் பாரிஸுக்கு வந்து சேர்ந்தனர்.

ஃ

பதக்கத்தைப் பறிகொடுத்த ஸ்திரீயோ கரை இறங்கி ரிச்செல்யூவிடம் வந்து எல்லாவற்றையும் தெரிவித்தாள். அவர் எந்த வழியாக ஆர்டெக்னான் பாரிஸுக்குள் வந்தாலும் பிடித்துக் கொள்ளும்படி இரசிய ஏற்பாடுகளைச் செய்தார்.

ஃ

இராஜாங்கக் கூத்துநாளும் வந்தது. அந்த விருந்துக்கு ராணி வந்த போது அவள் மார்பில் பதக்கமில்லாதிருக்கக் கண்டு அரசர் கடுஞ்சினம் கொண்டார். இராணி அரண்மனையில் வைத்துவிட்டு வந்ததாகக் கூற, அரசர் அதைக்கொண்டு வரும்படி வற்புறுத்த, இராணியும் கலக்கத்துடன் அரண்மனைக்குத் திரும்பி வந்தாள். அந்த சமயம் ரிச்செல்யூ முன் சொன்ன மாலேடிவின்டர் என்ற ஸ்திரீயை ராணியிடம் அனுப்பி அங்கு என்ன நடக்கிறதென்று சுற்றிக் கொண்டிருக்கும்படி செய்தார்.

ஃ

ஆர்டெக்னான் தான் பாரீஸ் நகர வாசற்படிக்குள் நுழைய முடியாமல் காவல் வைக்கப்பட்டுள்ள மோசத்தை யறிந்து, தையற்காரியை யனுப்பி விட்டு, அங்கு கவிழ்த்துக் கிடந்த சிறு தோணியொன்றை ஆற்றில் தள்ளிக் கள்ளவழியாகச்சென்று அந்தப் புரத்துக்குள் நுழைந்தான். அங்கும் ரிச்செல்யூவின் ஆட்கள் காவல் இருப்பதை யறிந்து, அவர்களில் ஒருவனைக் கொன்று, அவன் சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு உள்ளே போகும் போது, ரிச்செல்யூவின் கையாளாகிய ஒரு பிரபு எதிர்க்க, அவனையும் தாக்கி வீழ்த்திவிட்டு, இராணியின்

பழித்துக் காட்டுவதே தொழிலாகச் சில பத்திராசிரியர்கள் நடக்கிருர்கள். பிரதான பத்திராசிரியர்களோ சச்சரவு சமாசாரங்களை விட்டு விட்டுப் பொதுவான செய்திகளை மட்டுமே பத்திரிகையில் வெளியிடுகிருர்கள். வேறு சிலரோ தங்களின் சொந்த சங்கதிகளை யெல்லாம் ஜனங்களுக்கு வேண்டிய சங்கதிகளாக வைத்துப் பத்திரிகையை நிரப்புகிருர்கள்; ஒரே சங்கதியை ஒரு பத்திராசிரியர் முக்கியமென்று நினைக்க, மற்ருெரு பத்திராசிரியரோ அதை ஒரு வீண் சங்கதி என்று நினைக்கிருர்.

இருப்பிடத்துக்கு நெருங்கி, ஆர்டெக்னான் பதக்கத்துடன் வந்திருப்பதாக உள்ளே சொல்லி யனுப்பினன். இதை அங்கிருந்த மாலேடிவின்டர் என்ற ஸ்திரீ கேட்டு மிக்க தந்திரமாய் ஆர்டெக்னானிடம் வந்து ராணி பதக்கத்தைக் கேட்கிருள் என்று தன் கையை நீட்டினள். ஆர்டெக்னான் இந்த சூதை யறிந்தவனாய்ப் பதக்கத்தைத் தான் ரகசியமாய் எடுத்து மறைத்துக்கொண்டு, அது இருந்த பெட்டியை மாத்திரம் அவளிடம் கொடுத்தான். அவள் அதை வாங்கிக்கொண்டு வேறொரு வழியாக வெகு சந்தோஷமாய் ரிச்செல்யூ விடத்துக்கு ஓடினள்.

ஃ

இதற்குள் ராணி வந்து ஆர்டெக்னானைப் பார்த்து சந்தோஷித்து, அவன் தந்த பதக்கத்தை ஆநந்தமாய்ப் பெற்றுக்கொண்டு, உடனே கூத்து விருந்துக்குப் பதக்கம் அணிந்தவளாய் வந்து சேர்ந்தாள். அரசரும் இராணி பதக்கம் அணிந்து வந்திருப்பதை யறிந்து மகிழ்வுற்ருர்.

ஃ

ரிச்செல்யூவினிடத்துக்குப் பதக்கப் பெட்டியுடன் ஓடின ஸ்திரீயோ பெட்டியில் பதக்க மில்லாததைக் கண்டு திகைக்க, ரிச்செல்யூவும் பிரமிப்பதானுர். உடனே ஆர்டெக்னானை எவ்விதமும் பிடித்து வதைப்பதென்று தன் ஆட்களைக்கொண்டு முயன்ருர். கடைசியில் அவரது காரியங்களொன்றும் பலிக்காமல் போனதுடன் அவர் செய்த தீமைகள் யாவும் வெளிக்கு வந்து விட்டன. அதன் பின்பு ஆர்டெக்னானுக்குத் தமது சேனையில் உயர்ந்த பதவி கொடுப்பதாக ரிச்செல்யூ அழைக்க, அவனே அதை மறுத்துவிட்டு, தான் அரசர் படையில்தான் இருக்கப் போவதாகக் கூறினன். இந்த சமயத்தில் அரசாது படைத்தலைவர் அங்கு வந்து ஆர்டெக்னானைத் தழுவிக்கொண்டு, அவனுக்குத் தமது பதவியையே கொடுக்கப் போவதாகக்கூறித் தம் உடுப்புகளை அணிந்து கொள்ளும் படி செய்தார். ரிச்செல்யூ இதைக் கண்டு வெட்கித் தலை குனியும்படியாயிற்று. அத்தருணத்தில் தையற்காரக் கன்னிகையும் அங்கு வந்து சேர, அவளது அரிய பெரிய உதவிகளுக்காக ஆர்டெக்னான் மகிழ்ந்து காதலுடன் அவளை ஆலிங்கனம் செய்து கொண்டான். அரசருக்கு ரிச்செல்யூவின் கபடம் யாவும் தெரிய வரவே, அவர் ஆர்டெக்னானைப் பாராட்டி, பாரீஸ் நகரத்துச் சேனதிபதியாக நியமனம் செய்தார். அரசியின் கற்பும் காக்கப்பட்டு, அவள் அடையவிருந்த மானபங்கமும் இழிவும் தெய்வ சகாயத்தால் தப்பிற்று. கடவுளே இந்த சமயத்துக்கு அரசிக்குத் துணையாக ஆர்டெக்னானை உதவியதாகவும் கொள்ளலாம். ஆர்டெக்னானுக்கும் தையற்காரக் கன்னிகைக்கும் விவாகம் நடந்தேறியது. ஆர்டெக்னான் தனது தந்தை முதலியவர்களைப் பாரீஸ் நகரத்துக்கு அழைத்துக்கொண்டு சுகமாக வாழ்வதானுன். இது ஒரு பெரிய கதை. உண்மையாக நடந்த சரித்திரம். தர்மமே ஜெயம்.

எவரும் எளிதில் நீதிகளைப் போதித்துவிடலாம். தான் அந்த நீதிகளின் படி நடவாமலும் இருக்கலாம். ஆனல் தான் பிறர்க்கு உணர்த்தும் அனுபவ போதனைகளோ ஸ்வயமாகவே கண்டும் கேட்டும் பட்டுமிருப்பதாகவேதான் இருக்கும்.

மார்க்கோபோலோவின் கதை

கீழ் தேசங்களை முதலிற் கண்ட மகா புருஷன்.



மார்க்கோ போலோ என்பவர் யார்? நிகலோபோலோ என்பவரின் குமாரர். இந்த நிகலோபோலோ வெனிஸ் வர்த்தகர்களின் கூட்டத்துள் ஒருவர். இந்த வெனிஸ் வர்த்தகர்களே ஆதியில் ஐரோப்பாக் கண்டத்திலிருந்து கீழ்திசை நாடுகளுக்கு வந்து வர்த்தகம் செய்வதில் முதன்மையானவர்களா யிருந்தார்கள்.

ஃ

நிகலோபோலோ வர்த்தகம் செய்ய எண்ணி தன் சகோதரனுடன் வியாபாரப் பொருள்களோடு ஐரோப்பாக் கண்டத்திலிருந்தும் கப்பலேறி மத்தியதரைக் கடலைக் கடந்து மத்திய ஆசியாவிலுள்ள தார்த்தாரி தேசம் போய்ச் சேர்ந்தார். அங்குள்ள அரசனாகிய பார்கா என்பவரின் ஸமுகம் சென்று தாங்கள் கொண்டுபோன அருமையான ஆபரணம் முதலிய விலையுயர்ந்த பொருள்களைக் காண்பித்து, அவற்றுள் மிகச் சிறந்தவற்றைக் காணிக்கையாகவும் கொடுத்தார்கள். அந்த அரசன் இவர்களைப் பாராட்டி வெகுமதிகள் அளித்தான். அவ்வரசனின் ஆதரவிலேயே ஒரு வருஷகால மிருந்து, தமது சரக்குகளையெல்லாம் விற்றுத் திரவியம் சேர்த்துக்கொண்டு சுதேசத்திற்குத் திரும்ப முயன்றனர். ஆனால், அத்தேசத்தில் கலகமுண்டாகி வழியெல்லாம் அபாயகரமா யிருந்ததால், அத்தேசத்தின் தலைநகரமாகிய பக்காரா பட்டணம் போய்ச் சேர்ந்தனர்.

ஃ

தாத்தாரி தேசத்தின் பிரதான சக்ரவர்த்தியான கூப்லோகான் சீன தேசத்தில் அரசுசெலுத்தி வந்தான். அந்த அரசனிடத்திற்குப் போக பக்காரா நகரத்திலிருந்தும் புறப்பட்ட ஒரு ஸ்தானாதிபதி இந்த நிகலோ போலோவையும் அவனுடன் சேர்ந்தவர்களையும் தன்னுடன் அழைத்துச் சென்றான். இந்த வர்த்தகர்களைக் கண்டால் சக்ரவர்த்தி சந்தோஷப்படுவாரென்பது அந்த ஸ்தானாதிபதியின் எண்ணம். ஒரு வருஷம் பிரயாணத்தில் கழித்து கூப்லோகானுடைய ராஜதானியான பேகின் நகரம் போய்ச் சேர்ந்து சக்ரவர்த்தியின் தரிசனத்தைப் பெற்றனர். கூப்லோகான் நிகலோபோலோவின் மூலமாக மேற்குத் தேசத்தாருடைய மதாசாரம் பாஷை, அரசியல், வர்த்தகம் யாவற்றையும் கேட்டு மகிழ்ந்து சில நாட்கள் வரை தன்னிடம் வைத்துக்கொண்டான்.

ஃ

கூப்லோகானுக்குத் தனது ராச்சியத்தைத் திருத்தத் தக்க சில புலவர்களை ரோமாபுரியிலுள்ள போப்பு மதாசாரியரிடமிருந்து தருவிக்க வேண்டுமென்று விருப்ப முண்டா

எவ்வளவு பலத்த எதிர்ப்புகளிருப்பினும் சமயோசிதமாய் நடந்து காரிய வெற்றி காண்பவனே வீரனாவான்.

யிற்று. அத்துடன் கிறிஸ்து மதத்தில் பற்றுதல் கொண்டு, எருசலேம் நகரத்தில் கிறிஸ்துநாதர் முன்னிலையில் ஜொலிக்கிற தீபத்திலிருந்து தைலமும் தருவிக்கப் பிரியமுள்ளவனாய் அதற்காக போப்புக்கு ஒரு கடிதம் எழுதி இந்த நிகலோபோலோவிடம் தந்து, புலவர்களுடன் தைலமும் கொண்டுவரும்படியாகக் கூறி அனுப்புவித்தான். வழியில் எவ்வித ஆபத்துமில்லாதிருக்கவும், ஆங்காங்குள்ள உத்தியோகஸ்தர்கள் உபசரித்து எல்லா வசதிகளும் செய்தனுப்பவும் கூடியதான தங்கத் தகட்டில் எழுதிய ஆக்ஞை யடங்கிய சாசனம் ஒன்றும் கொடுத்து அனுப்பினுன்.

ஃ

நிகலோபோலோவும் அவனைச் சேர்ந்தவர்களும் சின தேசத்தினின்றும் புறப்பட்டு வெகு பாடுகளுடனே சுதேசமாகிய ஐரோப்பா போய்ச் சேர்ந்தனர். நிகலோபோலோவின் மனைவி இறந்துபோய், குமாரனை மார்க்கோபோலோ மட்டும் தன்னந் தனியே இருந்தான். நிகலோபோலோ தன் குமாரனையும் அழைத்துக் கொண்டு மற்ற வர்த்தகர்களோடு எருசலேம் சென்று, சக்ரவர்த்தி வேண்டிய தைலத்தைச் சம்பாதித்துக் கொண்டு, போப் அவர்களிடம் குப்லோகானின் திருமுகத்தை சமர்ப்பித்து அவரிடமிருந்து இரண்டு புலவர்களையும் ஏராளமான வெகுமதிகளையும் சக்ரவர்த்திக்காகப் பெற்று அங்கிருந்து யாவரும் புறப்பட்டார்கள். ஆனல், இடையில் உள்ள நாட்டில் அரசர்களுக்குள் யுத்தங்கள் நேர்ந்துவிட, அவ்விரு புலவர்களும் தாங்கள் அந்த அபாயமான வழியில் வர மறுத்துவிட்டனர். எவ்வித அபாயத்துக்கும் துணிந்து, கொண்ட ஊக்கத்தை விடாமல் நிகலோபோலோவும் அவன் குமாரனும் மற்ற வர்த்தகர்களும் புறப்பட்டு, மத்திய ஆசியாவிலுள்ள வனந்திரங்களின் வழியே சென்று மூன்ருவது வருஷத்திலே சினதேசம் போய்ச்சேர்ந்தார்கள். சக்ரவர்த்தி இவர்களை அன்புடன் வரவேற்று, சொன்னசொல் தவருமல் உண்மையாக நடந்துகொண்டதற்கு வியப்பும் மகிழ்வுமானுன். சக்ரவர்த்தி மார்க்கோபோலோவின்மீது பிரியமுடையவனுகி,தன் ஸம்ரக்ஷணையிலேயே வைத்துக்கொண்டு, தன் அரண்மனைப் பிள்ளைகளுடன் தார்த்தாரி பாஷை கற்றுக்கொள்ளும்படி செய்தான். மார்க்கோபோலோ மிகவும் புத்தி நுட்பம் வாய்ந்தவனுதலின், வெகு சீக்கிரத்தில் நான்கு பாஷைகள் நன்ருய் எழுதவும் பேசவும் படிக்கவும் கற்றுத் தேறினுன். மார்க்கோபோலோவை தன் அரண்மனை விசாரணைத் தலைவனுகச் சக்ரவர்த்தி நியமித்தார். பிறகு ஆலோசனை சபையில் ஒருவராகவும் சேர்த்துக்கொண்டார். பிறகு சின தேசத்துக்குத் தென்மேற்கிலுள்ள ஒரு தேசத்துக்குக் காரியக்காரனுக அனுப்பினர். பிறகு மற்ருெரு தேசத்துக்கு தேசாதிபதியாக நியமித்துக் கௌரவித்தார். மார்க்கோபோலோ எந்தக் காரியத்தையும் திறமையாகச் செய்து சக்ரவர்த்தியின் மதிப்பைப் பெறுவதாதானுன்.

ஃ

மற்ருெரு பெண்மீது மனம் வைத்துவிட்ட ஒருவன் தன் மனைவியிடம் மிக்க கொடிய சண்டாளனுகவே நடந்துகொள்ளத் தொடங்கி அவள் சீக்கிரம் சாகானாஎன்று வாட்டி வதைக்கிருன். இதுதான் ஸ்திரீ சுதந்திரமா என்று வயிற்றெரிச்சலுடன் அலறும்படியாகிறது.

அக்காலத்தில் மார்க்கோ போலோ சஞ்சரித்த இடம் ஒன்றிரண்டல்ல. இந்த ஆசியாக்கண்டம் முழுமையும், மற்றும் பல தீவாந்திரங்களுக்கும் சென்றான். பாரசீக தேசத்தையும் கண்டான். அர்மீனியா தேசம் சென்று அங்குள்ள எண்ணெய் ஊற்றையும் பார்த்தான். ஜார்ஜியானுவுக்கும், திபேத்துக்குக் கிழக்கிலுள்ள யவன தேசங்களுக்கும் போனான். ஜப்பான் தேசத்தைப் பற்றி முதலில் ஐரோப்பியர்களுக்குத் தெரிவித்தவன் இவனே. சீனதேச வளப்பத்தை இதர தேசத்தினருக்கு வெளியிட்டவனும் இவனே. இந்தியன் ஆர்ச்சிபலகோ என்னும் தீவுகளையும், ஜாவா என்னும் தீவையும், பர்மா தேசத்தையும், அங்கே தங்கத்தால் கட்டிய தேவாலயம் முதலியவைகளையும், கொச்சின்சீனுதேசம் சென்று அங்குள்ள அற்புதங்களையும் கண்டுவந்தான். நமது இந்து தேசத்தின் கரையோரங்களையும் வந்து பார்த்தான்.

ஃ

இந்து தேசத்தில் உற்பத்தியாகும் பொன் வெள்ளிகளும், வைடூரியம், வச்சிரம், மரகதம், மாணிக்கம் முதலிய ரத்தினங்களும் மார்க்கோ போலோவுக்கு மிகுந்த ஆச்சரியத்தை உண்டாக்கின. அதற்கு முன்னமே இத்தேசத்தவர் மிகுந்த நாகரீகத் தேர்ச்சி யுடைவர்களாய்க் கல்வி கேள்விகளில் சிறந்து வைதீக விஷயங்களில் மாத்திரமே யன்றி லௌகீக வியாபாரங்களிலும் விசேஷித்து, இராஜநீதி முதலியவைகளை நன்கு நடத்தி வருவதையும், தேச முழுமையும் ஒரேமொரு மதமாக யிருப்பதையும், கைத்தொழில்களில் நன்றாகத் தேறினவர்களாகிப் பட்டுப் பீதாம்பரங்களும் விதம் விதமான கம்பள வகைகளும் சால்வைகளையும் நெய்வதையும், சித்ரசிற்பங்களும் நவரத்தின கசிதமான பூஷணங்களும் அழகு பெறச் செய்வதையும், மற்றுமுள்ள பல புதுமைகளையும் கண்டு மிகவும் வியப்படைந்தான்.

ஃ

இவைகளன்றியும் எடன், ஆசியாவின் வடபாரிசம் முதலியவற்றையும் கண்டு பூரித்தான். இவன் இங்கிருந்து திரும்பிப்போய் இத்தேசத்து வரலாறுகளை வெளியிட்ட பிறகுதான் ஐரோப்பியர்களுடைய மனதில் இக் கீழ்த் தேசங்களை வந்து பார்க்க வேண்டுமென்ற வீராவேச முண்டாகியது. இவ்வாறு பதினேழு வருஷகாலம் கழிந்தன. கூப்லோகான் வயது சென்று தள்ளாதவனானான்.

(மற்றதில் முடிவு.)

அமெரிக்காவுக்கு அருகிலுள்ள ஸான்பிரான்ஸிஸ்கோ நகரில் 10-வயதுள்ள சிறுவன் ஒருவனுக்குத் தலையில் அடிபட்டதால் அன்றுமுதல் அவன் வித்யாஸகுணமுடையவனாகி மிகக் கெட்டவனுயும் களவு, ஹிம்ஸை, செய்கிறவனுயும், பெருந்தீனி தின்பவனுயு மிருந்தான். இவனுடைய தொந்திரவைப் பெற்றோர்கள் பொறுக்க முடியாமல் ஆசுபத்திரிக்கு அனுப்பினார்கள். டாக்டர் அவனுடைய சரீர ஸ்திதியைப் பரீக்ஷித்து முதலிலிருந்த நல்ல குணங்களையும் தற்போதுள்ள கெட்ட குணங்களையும் கண்டு புத்தி கெட்டுப்போயிருக்கிறதென்று தலையிலுள்ள மூளையில் சஸ்திரப் பிரயோகம் செய்து மாற்றினார். இதனால் பையன் இப்போது நல்ல நடத்தையுடையவனானான். தலையிற் குட்டுவதும் கன்னத்தில் அறைவதும் பிசகு.



பெரியாரின் மொழிகள்



'லாங்பெல்லோ' (Longfellow)வின் பொன்மொழிகள்.

1. Each morning sees some task begun, Each evening sees its close; Something attempted, something done, Has earned a night's repose.

ஒவ்வொரு காலை வேளையும் சில வேலைகள் தொடங்கப் பெறுவதைக் காண்கிறது. சிலதைச் செய்ய முயல்வதும், சிலதை முடிப்பதும் (ஆன பின்பு) ஓர் இரவின் ஓய்வைச் சம்பாதித்துக்கொள்கின்றன.

2. The rays of happiness, like those of light, are colourless when unbroken.

சந்தோஷத்தின் கிரணங்கள்' வெளிச்சத்தின் கிரணங்களைப்போல் பூர்ணமாக இருக்கும்போது ஒருவித வர்ணமுமின்றித் தோற்றும்.

3. Now be strong, be strong my heart.

என்னுடைய இருதயமே பலமாக இரு; வன்மையுடையதா யிரு.

4. Love is sunshine, hate is shadow, Life is checkered shade and sunshine: Rule by love.

அன்பு சூரிய ஒளிக்குச் சமமாகும். வெறுப்பு இருளைப்போன்றது. வாழ்க்கையானது வெறுப்பாலும், அன்பாலும் பிணிக்கப்பட்டுள்ளது. அன்பால் நீ ஆட்சி செய்வாய்.

5. So long as time is, is Atonement.

காலம் இருக்கும் வரையில் பிரதி பலன் செய்ய முடியும்.

6. Throughout this beautiful and wonderful creation there is neverceasing motion, without rest by day or night, ever weaving to and fro.

இந்த அழகிய அபூர்வமான படைப்பினிலே, காலமுழுவதும்—பகலிலும் இரவிலும்கூட—ஓய்வில்லாது முன்னும் பின்னுமாக என்றைக்கும் செய்துகொண்டிருப்பதான ஆட்டம் ஒன்று இருந்துகொண்டே யிருக்கிறது.

7. I am persuaded that God's Armour of Light, As it is loved and lived in, will preserve you.

கடவுளின் ஆனந்த ஜோதியை நேசிப்பதாலும், அதனிடமாகவே ஜீவிப்பதாலும், அச்சோதி உன்னைக் காப்பாற்றும் என்று நான் உறுதியாகச் சொல்லுவேன்.

8. To will what God doth will, that is the only science, That gives us any rest.

கடவுள் எப்படி இஷ்டப்படுகிறாரோ, அவ்விதமே, நாம் ஆசைப்படுவதுதான் சிறந்த சாஸ்திரமாகும். அதுவே நமக்கு சாந்தத்தை அளிக்கிறது.

நொந்துபோன நெஞ்சுக்குத்தான் பட்ட அனுபவங்களை எழுதிப் படிப்பது ஒரு ஆறுதலாக இருக்கலாம். அப்படி எழுத சக்தியற்றவர்கள் பிறரிடம் சொல்லி ஆறுதல் அடைகிறார்கள்.

9. When the Lord's work is done, and the toil and the labour completed, He hath appointed to me, I will gather into the stillness, Of my own hearts awhile, and wait for His guidance.

எனக்காகக் கடவுள் எற்படுத்திய வேலையைச் செய்து முடித்ததும், உழைப்பும் முயற்சியும் பூர்த்தியான தும், சிறிது நேரம் என் ஹிருதயத்தைச் சாந்தத்தில் நிறுத்தி, கடவுள் (இனி) காட்டப்போகும் வழிக்காகப் பொறுத்திருப்பேன்.


10. All is of God! If he but wave His hand, The mists collect, the rains fall thick and loud; Till, with a smile of light on sea and land, Lo! He looks back from the departing cloud.

எல்லாம் கடவுளின் செயல்! அவர் கொஞ்சம் தன் கையை அசைத்தால் பனி மூடிக்கொள்ளும்; மழை கடுமையாகப் பெய்யும். ஆயினும், அவர் கடலையும் பூமியையும் பார்த்துப் புன்னகை செய்யின், ஹா! மேகங்கள் கலைந்து செல்லும்.

P. G. குலசேகரன்.

"எதோ இருக்கும் வரை நம்முடைய குலாசாரப்படி இருந்துபோனால் பகவான் மறுமைக்காவது நல்ல பதவியைக் கொடுக்க மாட்டாரா?"

அரிச்சந்திரன் கனவு.



கனாக் காண்பதற்குக் காரணங்கள் பல கூறுவர். பகல் நினைவே கனவில் தோன்றுமென்பர். வேறு சிலர் தெய்வீக வருமுன் குறியென்றும் உரைப்பர். சிலரது கனவுகள் விரைவில் பலிப்பதுண்டு. சிலர் எத்துணைப் பயங்கரக் கனவுகள் கண்டாலும் ஏதும் நிகழ்வதில்லை. சிலருக்குக் கனவில்லாமல் நித்திரை வருவதில்லை. ஒரு பெரிய அபாயத்திற் சிக்கித் தவித்துக் கதறும் வேளையில் விழிப்புண்டானால், அந்த அபாயத்தினின்றும் உடனே விடுதலை பெற்றதாகத் தோன்றும் சம்பவம் எவ்வளவோ மனோநிம்மதியைக் கொடுக்கவல்லது. உலக வாழ்க்கையில் நேரும் கஷ்டங்களும் மறு நிமிஷமே கனவைப்போல் மறைந்து ஏதுமில்லாததாகிவிடுமானால் அது கிடைத்தற்கரிய மகா பாக்கியமாகுமே!

ஃ

அரிச்சந்திரன் கண்ட கனவு மிக்க அற்புதமானது. தம்மைப் பெற்று வளர்த்த தந்தை தேகத்துடனே சுவர்க்க லோகத்திற்குப் போய்த் தேவர்களால் தள்ளுண்டு நட்சத்திர மண்டலத்தில் நிலைகொண்டிருந்த பின்பு, தாம் தேன்பொருந்திய மலர்மாலை சூடிய பெண்களைந்துபேரைப் பூர்வ புண்ணியத் தொடர்ச்சியினால் கூடிச் சுகித்திருக்கக் கண்டனர். அவ்வைந்து மாதர்களில் ஒருத்தியைத் தாமே அருமையான தவமுனியொருவருக்கு சம்மதித்துக் கொடுத்ததாகவும், மற்றொருத்தி தானேபோய் அம்முனிவரோடு கூடினதாகவும், மூன்றாமவள் உணவு முதலியன இல்லாமற் போயினளென்றும், வேறொருத்தி தானே விலகிப்போய்க் கண் குருடானாளென்றும், விட்டு நீங்காத ஒரு மாது மாத்திரம் இம்மையிலும் மறுமையிலும் தமக்கு நன்மை தருவதா யிருந்தனளென்றும் கனவு கண்டோமென்று அரசன், கல்வி கேள்விகளாற் சிறந்த சத்தியகீர்த்தியாகிய முதல் மந்திரியிடம் செப்ப, அவர் அதைப் பின்வருமாறு விளக்கினர்.

ஃ

“நீர் கனவில் கண்ட அருந்தவர் விசுவாமித்திரர். நீர் கலந்து மகிழ்ந்த மாதர் ஐவரும் பஞ்ச சக்திகள். அவருக்குக் கொடுத்த ஒருத்தி பஞ்ச பூதமாக நிற்கின்ற கிரியா சக்தியாகிய பொருள். ஒருத்திபோய் அவரோடு சேர்ந்தது வினைத்துணையாக நிற்கின்ற கிரியா சக்தியாகிய அரசாட்சியே.

என் சங்கதிகளை யறிந்து அதனால் நான் கெட்டவனென்று பிறர் நினைத்தாலும் பாதகமில்லை. நான் கெட்டுப்போனவற்றை யறிந்து மற்றவர்கள் புத்திபெற்றால் அதுவே எனக்குப் போதும்.

ஒருத்தி உணவு முதலியன இல்லாமல் விலகியது பிராணன் முதலிய வாயுக்களாக நிற்கிற பராசக்தியே. அதாவது, வளமையான நகர் நாடு முதலியவைகளை விட்டுத் தேக மெலிவாகுதல். ஒருத்திபோய்க் கண்ணிழந்தது ஐம்பொறி நுகர்ச்சியாக நிற்கிற ஞான சக்தியே. அதாவது, செல்வத்தையுமிழந்து, பிள்ளையும் மனைவியும் வெவ்வேறாகுதல். இப்படி வெவ்வேறான பெரிதான தீய செய்கையை முடிக்கிற விசுவாமித்திரனைப் பின்பு நாமே வெல்லக்கடவோம். ஒருத்தி நீங்காமலிருத்தலுக்கு உறுதி தருதல் விவேகம். இந்த விவேகத்தை உயிர்க்கு ஒளியாக நிற்கிற சிற்சக்தியென்று கொள்ள வேண்டும்" என்று முதன் மந்திரி கூறினார்.

ஃ

"என்னை யீன்றெடுத்த தாதை யாக்கையோ டெய்தியும்பர்
தன்னை யுற்றிமையோர் நீக்கத் தாரகைத் தலத்தமர்ந்த
பின்னையான் பிரசக் கூந்தற் பேதைய ரைவர்தம்மை
முன்னையூழ் விதியினாலே முயக்கமுற் றினிதிருந்தேன்."

"அருத்தியிற் புணர்ந்த மாத ரைவரி லருந்தவத் தோற்
கொருத்தியை யீந்தே னொருத்திபோ யவனோடுற்றா
ளொருத்தி யூணற்றகன்றா ளொருத்திபோய்க் கண்ணிழந்தா
ளொருத்திவிட் டென்னை நீங்காதிருமைக்கு முறுதிதந்தாள்."

"இப்படி யின்றுகண்டே னிக்கொடுங் கனவினாலே
யெப்படி விளைவதோவஃ துணர்ந்திலே னியம்புமென்னா
வப்படி யரசன்கூற வடியிணை தொழுது நன்னூற்
றப்பற வுணர்ந்த கேள்விச் சத்திய கீர்த்தி சொல்வான்."

"அருவினை விளைத்ததெல்லாங் கௌசிக னவனாலின்னம்
வருவினை மிகவுமுண்டு வளநகர் நாடிழந்து
திருவினை யிழந்துசேயுஞ் செல்வியும் வேறுவேறாப்
பெருவினை முடிப்பான்றன்னைப் பின்னையாம் வெல்வோமென் [றான்."

ஃ

கனவிற் கண்டபடியே துன்பங்களனைத்தும் அரிச்சந்திரனை வதைத்தன. அரசர் பதியை யிழச்தனர், பாலனை யிழந்தனர், படைத்த நிதியை யிழந்தனர், மனைவியை விற்றனர், சத்திய மொன்றை மட்டும் கைவிடாது பற்றினர்; அதுவே அவர் தலையைக் காத்தது.

ஒவ்வொரு வீட்டிலும் சுபாசுபங்களும், ஸந்தோஷ துக்கங்களும், உறவும், பகையும் குடிகொண்டிருக்கின்றன. குடும்பத்தில் எல்லோரும் ஒற்றுமையோடிருக்கிறார்களென்று எண்ண முடியவில்லை. ஒரு கையிலுள்ள ஐந்து விரல்களில் ஒன்று குட்டை, ஒன்று நீளம், ஒன்று கட்டை, ஒன்று மோதிரமணியும் விசேஷம் பெற்றது. இப்படிப் பலவிதமா யிருக்கின்றன. அதுபோல் ஒவ்வொருவரின் வீட்டிலும் சிலருக்கு சுகமும் பலருக்குத் துக்கமும் விளைந்துகொண்டிருக்கும். இது அவரவரின் வினைப்பயனாயின் யார் மீதும் குறைகூற முடியாது.

நாகானந்தம்

(629-ம் பக்கத் தொடர்ச்சி.)

V

பின்பு சங்கசூடன் ஜீமூத வாகனனைப் பார்த்து, "பரோபகாரத்துக்காகவே ஜன்மமெடுத்திருக்கும் வித்யாதரனே! நானும் என் அன்னையும் இங்கு சமீபத்தில் வீற்றிருக்கும் கோகர்ணேச்வரரை வணங்கி வருகிறோம். வந்த பின் நான் அரசனுடைய உத்தரவுப்படி கருடனுக்கு ஆகாரமாகிறேன். நீ உன் வீட்டுக்குப் போ" என்று கூறிவிட்டுத் தன்தாயுடன் கோகர்ணேச்வரரைத் தரிசிக்கச் சென்றான். ஜீமூதவாகனனோ கருடனுக்குத் தன்னை ஆகாரமாகக் கொடுக்கத் தீர்மானித்தும், அவ்வாகாரத்தின் அடையாளமாகிய சிவப்பு வஸ்திரங்களைப் பெறாமல் தன்னுடைய மனோரதம் நிறைவேறாதென நினைத்து, ஒரு வழியுந் தோன்றாமல் திகைத்து நின்றான்.

ஃ

வித்தியாதர-வித்தர்களுக்கு "தீபபிரதிபத்து" என்பது ஒரு பண்டிகை. இப்பண்டிகையில் ஜீமூதவாகனனுக்கும் மலயவதிக்கும் எப்பொருள்கள் கொடுக்கப்பட வேண்டுமென யோசிப்பதற்கே விச்வாவஸு மித்ராவஸுவைக் கடற்கரையிலிருந்து அழைத்துவரச் சுனந்தனைவிடுத்தான். அன்று குலவழக்கப்படி சிவப்பு வஸ்திரங்களையே அவர்கள் அணிவது வழக்கம். அவ்வழக்கப்படி, மித்ராவஸுவின் தாய் ஒரு சேவகன் மூலம் சில சிவப்பு வஸ்திரங்களை மலயவதிக்கும் ஜீமூதவாகனனுக்கும் கொடுத்து வரும்படி அனுப்பினாள். ஜீமூதவாகனன் மித்ராவஸுவுடன் கடற்கரைக்கு உலாவச் சென்றிருப்பதைக் கேள்வியுற்ற அச்சேவகன்கடற்கரையை நோக்கி வந்தான்.

ஃ

மூன்பு கூறியபடி ஜீமூதவாகனன் சங்கசூடனைக் காப்பாற்றுவதற்குச் சாதனமாகிய சிவப்பு வஸ்திரங்களைப் பெறாமல் வருந்துகையில், மலயவதியின் தாயால் அனுப்பப்பட்ட அச்சேவகன் அவனையணுகி, "அரசகுமார! மித்ராவஸுவின் அன்னை இச்சிவப்பு வஸ்திரங்களை இன்று அணியும்பொருட்டு உனக்கு அனுப்பியிருக்கின்றாள்." என்று கூறி; அவ்வாடைகளை அவனிடம் தந்து விடைபெற்றுச் சென்றான்.

ஃ

சமயத்திற் கிடைத்த அச்சிவப்புத் துணிகளைப் பெற்று ஜீமூதவாகனன் பேரானந்தமடைந்து, "மலயவதியை மணஞ்செய்துகொண்டதற்குப் பலன் இன்றுதான் எனக்குக் கிடைத்தது. பிறருக்காக உயிர்விடத் துணிந்தபோது, சரியான சமீபத்தில்

தன்னைப் பூலோகத்தில் வந்து ஞானத்தை அறியும்படி செய்தது எது?
ஆசையும் அன்பும் உண்டாகும்படிச் செய்தது எது? மழலைச் சொற்களாக
முதன்முதலில் வெளிவந்தது எது?—அது தேசபாஷையல்லவோ?

இவ்வாடைகள் எனக்குக் கிடைத்தன. ஸம்வர்த்தகங்களென்ற காலாந்த மேகங்களைப்போன்ற மேகங்கள் இப்போது ஆகாசத்தை மறைக்கின்றன; காற்றோ இப்பூமியைப் பாதாளத்திற் போகச்செய்து, சமுத்திரத்தை நாற்புறமும் வியாபிக்கச் செய்வதுபோல வெகு வேகத்துடன் வீசுகிறது; சூரியன் அஸ்தமிக்கும் சமயமாதலால் ஆகாயம் பொன்னிறமாகக் காணப்படுகிறது. மலயாசலத்தையும் அசையச் செய்யும் சுழற்காற்று வீசுகிறது. ஆகவே, கருடன் இப்போது சமீபத்திலேயே வந்துகொண்டிருக்க வேண்டும். ஆதலின், சங்கசூடன் வருமுன் நான் இவ்வாடையைத் தரித்து இக்கல்லின்மேலேறுகிறேன்'' என நினைத்து, அக்கொலைக்கல்லின்மீதேறினன். "ஆ! சங்கசூடனைக் காக்கும்பொருட்டு இக்கல்லைக் தழுவுவதால் உண்டாகும் சுகம் எனக்கு, மலயசந்தனத்தைப் பூசிய மலயவதியின் ஆலிங்கனத்தால் உண்டாகுமோ? அல்லது இக்கல்லின்மேல் படுத்திருக்கும் சுகம் எனக்குப் பாலியத்தில் அன்னையின் மடியில் படுத்துக்கொண்டிருக்கும்போது கிடைத்ததோ?'' எனக்கூறி, அக்கல்லின் மீது நிற்பதையே தன் ஜன்மபலனாக நினைத்து, ஜீமூதவாகனன் அச்சிவப்பு வஸ்திரங்களைப் போர்த்துக் கொண்டு, கருடனுடைய வரவை எதிர்பார்த்திருந்தான்.

ஃ

சிறிது நேரத்தில், சிறகுகளையடித்துக்கொண்டு கருடன்—"இக்கொலைக்களத்தில் மற்ற பாம்புகளைக் காக்கும்பொருட்டுச் சிவப்பு வஸ்திரங்களைத் தரித்து, பயத்தினால் நடுநடுங்கும் இப்பாம்பை வஜ்ரத்தைப்போன்ற என் மூக்கினால் கொத்தி எடுத்துச் செல்வேன்.'' என கர்ஜித்துக் கொண்டே அங்கு வந்து சேர்ந்தான் ஜீமூதவாகனனோ "என் சரீரத்தைக் கொடுத்துப் பன்னகங்களைக் காப்பாற்றியதால் நான் அளவற்ற புண்ணியத்தைச் சம்பாதித்தேன். ஆதலின் என் சரீரம் ஒவ்வொரு ஜன்மத்திலும் பிறருடைய நன்மையின் பொருட்டு உதவ வேண்டுமென நான் கோருகிறேன்.'' என மொழிந்தான்.

ஃ

ஜீமூதவாகனனை யணுகிய கருடன் அவனைப் பாம்பென நினைத்து, தன் மூக்கினால் அவனைக் கௌவிக் கொண்டே பறந்து சென்றான். இதைக்கண்டதிசயித்த தேவர்கள் ஜீமூதவாகனனைப் புகழ்ந்து, அவன் மீது தெய்வமலர்களைப் பொழிந்தனர்; துந்துபிகளை முழக்கினர், அம் மலர்களைக் கண்ட கருடன் "அடே! ஆகாயத்திலிருந்து என் புஷ்ப விருஷ்டி யுண்டாகிறது? ஸ்வர்க்கத்தில் என் துந்துபியின் சப்தம் கேட்கிறது? ஆ! தெரிந்துவிட்டது. என்னுடைய கதியின் வேகத்தினால் அசைந்த பாரிஜாத மரத்திலிருந்து இப்புஷ்பங்கள் விழுந்திருக்க வேண்டும்! இச்சுழற்காற்றைக் கண்டு காலாந்த மேகங்கள் "இது பிரளய காலமோ!'' எனச் சந்தேகித்து, இடிமுழக்கஞ் செய்கின்றன. சரி, நான் இந்நாகத்தை இம்மலய பர்வதத்தின் அப்பாகத்திற் கொண்டுபோய் பக்ஷிக்கிறேன்'' என்று யோசித்து, மலய பர்வதத்தின் மேலேறினன். நமது கதாநாயகனோ "இன்றே என்னுடைய ஜன்மம் ஸபலமாயிற்று'' என எண்ணிக் களிப்புற்றான்.

(தொடரும்.)

K. S. ஸ்ரீநிவாசாச்சாரியார்.

பத்மினியின் ஸாகசம்.

சுமார் நானூறு வருடங்களுக்கு முன்னர் ஆரவல்லி மலையோரத்திலுள்ள அடவியில் ஓர் அரசகுமாரன் குதிரையின் மீது போய்க்கொண்டிருந்தான். அவன் அகன்ற மார்பும், நீண்ட கைகளும் உடையவன். பரந்த முகமும், சிவந்த மேனியும், திரண்ட கன்னங்களும், நகைதவழும் உதடுகளும் உள்ளவன். அழகென்பது அவனுடைய அங்க முழுமையும் பரவி முகத்தினின்று வடியும். வயது இருபது அல்லது இருபத்திரண்டிருக்கலாம். அவன் கையில் ஈட்டியும், முதுகில் அம்புறாத்தூணியு மிருந்தன இடையில் பொற்கத்தி யொன்று தொங்கியவாறிருந்தது.

அவன் நெடுநேரம் காட்டில் திரிந்து, கடைசியில் ஓர் கரடியைக் கண்டு அதனைத் தொடரலானான். எங்கும் மரங்களும், கற்களுமானதால் குதிரையை வேகமாய்ச் செலுத்தக் கூடாது போயினும், முடிவில் எவ்வாறோ கரடியினிடம் சேர்ந்து, அதனைத் தன் பையிலிருந்த ஈட்டியாற் குத்தினான். குத்தவே குதிரைக் கால் தவறி கீழே விழுந்து அதன் தலைவனையும் வீழ்த்தியது. இவ்வாறு அவன் திடீரென்று விழவே ஈட்டியொடிந்து ஒருபாதி அவன் கையிலிருக்க, மறுபாதி கரடியில் தைத்துக்கொண்டது.

அவன் சிவுக்கென்றெழுந்து இடையிலிருந்து கத்தியை யெடுத்துக் கையிற் பிடித்துக் கரடி தன் மீது பாயாவண்ணம் நின்றான். கரடி காட்டில் வாழும் மிருகங்களில் மிக்க வன்மையும், ஆண்மையுமுள்ளது. கொஞ்சம் குறி தப்பினால் வேடரை அது கொல்லாது விடுவதில்லை.

ஈட்டிக்குத்தால் இரத்தம் சொரிய, அக்கரடி அதனைச் சிறிதும் பொருள் செய்யாது பற்களைக்கடித்து மயிரைச் சிலிர்த்தது. அவன் மேற் பாய்ந்தது. அவன் கையிற்பிடித்த அச்சிறு கத்தி என்ன பயனுடைத்து? கரடியும் அவனும் கை கலந்தார்கள். கரடி மேலும் அவன் கீழுமானான். அந்தோ! அவன் கதி அதோ கதியாயிற்று. ஆனால், கரடி திடீரென்று அத்தருணத்தில் அதிசயமாய் மடிந்தது.

அப்போது அவனுக்குண்டாகிய ஆச்சரியத்தையும், ஆனந்தத்தையும் யாரே சொல்ல வல்லார்? இன்னும் ஓர் நிமிஷம் தாமதமாயின் கரடி தன்னை அறைந்திருக்குமே! தன் உயிரும் உடலைவிட்டு ஓடியிருக்குமே! அவ்வாபத்தினின்றும் தப்புவித்தவர் தாயினும் நல்ல தயாபரன்தானோ? அல்லது அவ்வனத்தில் வாழும் வனதேவதையோ? என்றிவ்வாறு சந்தேகித்து, கீழே கிடக்கும் கரடியைக்

"என்ன பிரயோஜனத்துக்காக நாம் நம்முயிரைக் காப்பாற்ற வேண்டுமோ? இவ்வுலகில் நமக்கென்ன இருக்கிறது? எல்லாம் துக்கத்திற்கே காரணமாக இருக்கின்றதே யன்றி சுகம் ஒன்றையும் காணோம்."

காண்கையில், அதன் இடப்பக்கம் ஓர் அம்பு பாய்ந்திருந்தது. அவ் வம்பை எய்தவர் யாவரென்று நிமிர்ந்து நோக்க, கொஞ்சதூரத்தில் இரண்டு மரங்களி னிடையில் ஓர் குமரி கையில் விற் பிடித்து ஒரு குதிரைமீது குந்திக்கொண்டிருந்தாள். அவள் யாரென்பதறியாது அவளை உற்றுப் பார்க்கலானான். அவளுக்கு வயது பதினைந்து அல்லது பதினாறு இருக்கும். கறுத் தடர்ந்த மயிரும், பரந்துகாணும் நெற்றியும், கோவைக் கனிபோன்ற வாயும், முத்துக்களை யொத்த பற்களும், பவளத்தை நிகர்த்த உதடுகளும், செந்தாமரை யென்னும் கன்னங்களும் உடையவள். எல்லா அவயவங்களிலும் சிறியனவாகிய அவளுடைய கண்களிற் காணும் அழகையும், தண்மையையும் என்னவென்போம்?

அவன் அவ்வணங்கியலாளைக் கண்ட இமைப் பொழுதில் அவள் மறைந்தாள். அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. "அவள் வனத்தில் வதியும் வனதேவதையோ? அல்லது கானல் நீரைப்போன்ற பொய்க் காட்சியோ? என்றிவ்வாறு எண்ணிக் கொண்டே மற்றுமொரு முறை கரடியைச் சோதிக்க அதன் இடையில் தைத்த அம்பின் வழியாக இரத்தம் சொரிந்துகொண்டிருந்தது. உயிர் போய் உடலம் சில்லிட்டு வந்தது. இன்னும் சந்தேகமோ?

2-ம் அத்தியாயம்.

பகல் பன்னிரண்டு மணி இருக்கலாம். வெயிலின் கொடுமை அதிகரித்தது. அதனோடு பசியும், தாகமும் உண்டாகிக் களைமேலிட்டது. அக் காட்டில் மனிதசஞ்சாரம் காணப்படவில்லை. ஆகவே, இனி அங்கு உட்கார்ந்து உறங்குவதில் உபயோகமில்லை யென்றெண்ணித் தன் குதிரைமீதேறி எதிரில் தோன்றிய ஓர் பாதை யோரமாய்ப் போய்க்கொண்டிருக்க, தூரத்தில் சில குடிசைகளைக் கண்டான். அவனுக்குச் சிறிது சந்தோஷம் பிறந்தது. உடனே தன் குதிரையை வேகமாய்ச் செலுத்தி அக்குடிசைகளை நெருங்கி, அவற்றுள் பெரிய குடிசைக்குச் சென்று, அக்குடிசைக் குரியவர் யாவரென்று விசாரித்தான். ராஜ்கர் கோட்டையையாளும் அஜீத்சிங்குடையதென்றும், அவர் டாட் என்னும் ஆப்கனால் தம் நாடும் நகரமும் தோற்று அங்கு வந்துள்ளாரென்றும் கூறக் கேட்டு, அக்குடிசைக்குள் நுழைந்தான்.

அஜீத்சிங்கோ அன்பும் அறமுமுடையவன். இனிய மொழிகளும், நல்லெண்ணங்களுமுள்ளவன். அவன் வந்தவனை உட்காரச்சொல்லி, யாவன் என்று கேட்க, அவன் "ஐயா என் பேர் பிரதாப சிங்கு; தொல் குலமாகிய சூரிய குலத்தில் தோன்றியவன். அயோத்தியை யாண்ட இராமர் வழியில் வந்தவன். இன்று காலை நான் அரவல்லி மலையோரம் வேட்டையாடப் போய் ஓர் கரடியிடம் சிக்கிய தருணத்தில் ஓர் பெண் அக்கரடியைக் கொன்று என் உயிரைக் காப்பாற்றினாள். ஆனால் அப் பெண்மணி மின் போலும் தோன்றி மறைந்தாள். அவள் இன்னாரென்றறிய என் மனம் ஆத்திரப்படுகிறது. அவள் யார் என்று தாங்கள் அறி

மற்றவர்கள் தன்னைப்போல் தவறி விழாதிருப்பதற்காகத் தான் தவறிச் செய்துவிட்ட ஒரு தவறுதலைச் சொல்லிப் புத்தி கூறுவது எவ்வளவோ மேலான செய்கையாகும்.

வீரோ?" என்று வினவ, அஜீத்சிங்கு கொல்லென்று சிரித்து, "நண்பரே, அவள் என் அருமைச் செல்வி பத்மினி என்னும் பெயரினள். நான் என் நாட்டினின்றும் ஓடி வந்த நாள் முதல், இவள் வெறி பிடித்தவளைப் போல வில்லும் கையுமாக வெளியில் திரிகின்றாள். இவளுக்கு வேட்டையாடுவதைப் போலும் வேறொன்றில் விருப்பமில்லை." எனக் கூறினான்.

பிரதாப சிங்கு "அன்புள்ள ஐயாவே! இவ்வேந்திழை என்மீது இரக்கம் கொள்ளின் இவளை மணந்து. நான் உள்ளநாளும் உயிரென மதிப்பேன். மற்றொரு மாதை மறந்தும் விரும்பேன்" என்றான். அதற்கு அஜீத் சிங்கு, "நண்பரே, நீர் உயர் குடியிற் பிறந்தவரென்பதறிவேன். அழகினும், ஆண்மையிலும் சிறந்தவரென்பதும் தெரிகிறது. என் மகளை உனக்கு மணஞ்செய்து தருவது எனக்கு மகிழ்ச்சியைத் தருமாயினும் இவளோ என் நாட்டைத் திருப்பித் தரவல்லா னெவனோ அவனையே மணப்பதாகக் கூறுகின்றாள். அவன் அழகில்லானாயினும், பொருளற்றானாயினும் அவளுக்குச் சம்மதமே" என்றனர். பிரதாப சிங்கு, "அப்படியே தங்களுடைய நாட்டை மீட்பிப்பேன். இன்றே என் உடலும் உயிரும் பொன்னும் பூமியும் தங்கள் மகளுக்கர்ப்பித்தேன்" என்று சொல்லி எழுந்து போனான்.

3-ம் அத்தியாயம்.

டாட் என்னும் ஆப்கனுக்கு ஐந்து மனைவியருளர். அவனுக்கு வயது கிட்டத்தட்ட ஐம்பதிருக்கும். பருத்த வயிறும், குள்ள வடிவமும் உள்ளவன். கன்னம் குழிந்து, மார்புசுருங்கி, தலை மயிர் வெளுத்திருப்பினும் கண்ட மாதர்மீது காதல் கொள்ளும் காமுகனாவான். வயது அதிகரித்து வரினும் காதலோ குறையவில்லை.

பத்மினியின் அழகைப் பிறர் கூறக் கேட்டு, அவளை எப்படியாவது மணஞ்செய்ய எண்ணி, அஜீத் சிங்குக்கு ஓர் கடிதமும் எழுதி அனுப்பினான். அதில் "அன்புள்ள அஜீத் சிங்கே, நான் நெடுநாளாக உன் மகள் பத்மினிமேல் மாறாத ஆசை கொண்டேன். சந்திரன் போன்ற முகமும், சேலையொத்த கண்களும், முத்தை நிகர்த்த பற்களும், பவளங்களென்னும் உதடுகளும், மயிலைப் பழிக்கும் சாயலும், குயிலைத் தோற்கும் குரலும் என் மனதைக் கொள்ளைகொண்டன. அவள் அழகில் சிக்குண்டு, நான் செயலற்று நினைவு நீங்கி ஆவி அழிகின்றேன். உரை தடுமாறுகின்றேன். அவளை மறக்குமாறறியேன்; மணக்குமாறறியேன். என்னை அவள் மணப்பாளாயின் அவள் விரும்பியவாறு முத்துமாலைகளும், இரத்தினப் பதக்கங்களும், வைர நகைகளும், பட்டாடைகளும் தருவேன். என் பட்டத்தரசியாக்கி உயிர்க்குயிரெனக் கொள்வேன். என் மனைவியர் பலரைத் தொண்டுபுரியச் செய்வேன். நானும் அவள் தாமரைத் தாளில் தலையைச் சேர்ப்பேன். இக் கடிதம் கண்டவுடன் உன் மகளை என் மனைவியாக்குவாய். இல்லாவிடில் நீ இருக்குமிடம் வந்து உன்னை வதை செய்ய வழி தேடுவேன்" என்றிருந்தது.

மளிகைக் கடைக்காரர் வெகு விசுவாசமாய் இது நேர்த்தியான அரிசி என்று சொல்லி ஒரு மூட்டை யரிசி அனுப்பிவிடுகிறார். வீட்டிலோ பெண்கள் இந்த அரிசியை நாயும் தின்னாது என்கிறார்கள். பணம் கொடுத்துவாங்கிய வீட்டுத் தலைவன் எவர் பேச்சைக் கேட்பதென்று திகைக்கிறான்.

அஜீத் சிங்குக்கோ அடங்காக் கோபம்மூண்டது. தன் நாட்டை இழந்தான். நகரத்தைப் பிரிந்தான். மற்றச் செல்வத்தைத் துறந்தான். தன் கண்ணினுண்மணியாகிய பத்மினியையும் விடுவதோ? மாசற்ற தன் குடும்பத்தாருக்கு மாறுப் பழி தேடுவதோ? அவன் உடனே கடிதம் கொண்டுவந்த தூதன் தலையை வெட்டத்துணிந்து தன் இடுப்பிலுள்ள கத்தியை எடுத்தான். ஆயினும் ஏதோ எண்ணி எடுத்த கத்தியை உறையுள் சொருகி தன் மகளிருக்கும் மந்திரத்தில் நுழைந்து அவளிடம் கடிதத்தைக் கொடுத்தான். அவள் அக் கடிதத்தைப் படித்து அதிக துக்கப்படலானுள். டாட்கானின் இறுமாப்பு இருந்தவாறென்ன? தான் க்ஷத்திரிய மாதாயிருந்தும் அவன் மணக்கத் துணிந்தனனே!

ஆயினும் அவள் தன் துக்கத்தை யடக்கிக்கொண்டு அஜீத்சிங்கை நோக்கி, "அன்புள்ள தந்தையே! தூதனைக் கொல்வது சரியன்று, அவன் திரும்பிப் போகட்டும். இனி ஆகவேண்டியதை ஆலோசிப்போம்" என்றுள்.

அஜீத் சிங்குக்கோ கோபம் ஆறவில்லை. ஆயினும் தன் மகள் கூறியவாறு வந்த ஆளை அனுப்பி, அப்பால் அவன் நெடுநேரம் யோசித்து, டாட்கான் மனம்போலாகட்டும் என்று ஓர் ஆளிடம் சொல்லி அனுப்பினுன். ஒருகால் தன் பேச்சை அவன் சந்தேகிப்பானென்றெண்ணி பத்மினிக்குப் பதில் பாதி நாடு தரவேண்டுமென்றும் தெரிவித்தான்.

காமத்தால் கண்கெட்ட டாட்கோ அடங்காப் பெருமகிழ்ச்சி கூர்ந்து அஜீத்சிங்கின் இஷ்டப்படி ஆகட்டும் என்முன். அவனுக்குப் பத்மினியின் எண்ணமே பெரிதாகி அவளின்றித் தான் உயிர் வைத்திருப்பது கூடாதெனத் தோன்றியது.

4-ம் அத்தியாயம்.

ஒரு மாதம் கழிந்தது. குறித்த நாளும் வந்தது. பத்மினி தன்னை அணிகலன்களால் அலங்கரித்துக் கொண்டு தந்தையிடம் அநுமதி பெற்றுப் பட்டுத் திரை மூடிய ஓர் பல்லக்கில் ஏறிச் சென்றுள். அவள் பின்னே அவளுடைய அழகிய குதிரை போயிற்று. அக்குதிரையை யோட்டிச் சென்றவன் வேலைக்காரனுக வெளிக்குக் காணப்படினும், உண்மையில் வேலைக்காரன் அன்று. அவளைக் காதலித்துக் கடிமணஞ் செய்யக் கருதிய பிரதாபசிங்காகும். இருமருங்கும் வேறு மும்மூன்று பல்லக்குகள் போயின. இப்பல்லக்குகளி லேறிச் சென்றவர் பத்மினியின் பணிப் பெண்களெனப் பிறர் கூறினும், உண்மையில் போர் வீரர்கள். அவர்கள் சாய்ந்திருந்த பல வர்ணப் பட்டு மெத்தையின்கீழ் கத்திகளும் கட்டாரிகளும் இருந்தன. பல்லக்குகளைச் சுமந்து சென்றவரும் போர் வீரராவர். இவையன்றி, முப்பது குதிரைவீரர் முன்னும் பின்னுமாகத் துணை சென்றுர்கள். இவர்கள் ஒவ்வொருவரிடத்தும் இரண்டு கத்திகளிருப்பினும், இஃது ராஜபுத்திருடைய வழக்கமாதலால் அயலார் சந்தேகிக்க இடமில்லை.

இவ்வாறு இவர்கள் ராஜநகரத்தைச்சேர, டாட் செப்பறிய மகிழ்வுற்று, சிறந்த அணிபூண்டு சிங்காரப் புரவிமீதேறி, எதிர்கொண்டு வந்தான். டாட் வயது தளர்ந்தவனெனினும், பருத்த வயிறுடையவனுயினும், அணிந்த ஆடையணிகளால் அந்த முன்ளவனுகத் தோன்றினுன். பசும்

பொன்னுற் செய்த பட்டாக்கத்தியும், தலையில் தங்கச்சரிகை வேய்ந்த தலைப்பாகையும், அத்தலைப்பாகை யில் நவமணிகள் புதைத்த கலிகத் தொராவும் விளங்கின. கைகள் நிறைய வைர மோதிரங்களும். கழுத் தில் இரத்தினப் பதக்கங்களும் துலங்கின. பத்மினியும் திரையை விலக்கிப் பார்த்தாள். டாட்கான் உண்மையில் யுத்தவீரன். போரில் எதிரிகளைப் புறங்காட்டச் செய்யும் ரணசூரன்.

பெண் வீட்டார் கோட்டைக்குள் நுழைந்தார்கள். கோட்டை வாயிலைத் தாண்டியதும் எழு சிவிகைகளையும் சிவிகை சுமப்போர் கீழே இறக்கினர் கள். பத்மினி தன் பல்லக்கினின்றும் வெளிவந்து பிரதாப் சிங்கு ஏறிவந்த குதிரை மீதேறி கையில் வில்லும் அம்புமாக நின்றுள். மாறுவேஷம் பூண்ட ராஜபுத்திரர் மறைத்து வைத் திருந்த ஆயுதங்களை ஏந்தினர்கள். மற்றையோர் குதிரை வீரர்களிட மிருந்த இரண்டு கத்திகளு ஒவ் வொன்றை வாங்கிக்கொண்டார்கள். டாட் கானுக்கோ ஆச்சரிய முண்டா யிற்று. அச்சமும் குடிபுகுந்தது. அவன், "இதென்ன அபூர்வம்! பெண்ணும் பெண் வீட்டாரும் ஒரு நொடியில் ஆயுத பாணிகளாகி அம ருக்கு ஆயத்த மானுரே! பல்லக்குகளி லிருந்து பாவையர் பலரும் போர் வீரராய் வெளிவந்தனரே! நான் மகிழலாமென்றிருந்த மணக்கோலம் மனங் கலங்கும் போர்க்கோலமாயிற் றே." என்றிவ்வாறு எண்ணியவனுய், உடனே தன் ஆளை அழைத்துச் சங்கை ஊதச்சொன்னுன். சங்கத் தொனியும், சங்கத் தொனியோடு முரச வொலியும் கேட்டு அவன் குதி ரைப் படையும், காலாட் சேனையும் வந்தன.

முதன் முதல் பத்மினி வில்லை வளைத்து அம்பைப்பூட்டி டாட்கான் மார்புக்குக் குறிவைத்தாள். இரங்கும் நெஞ்சுடைய அவ்வேந்திழை ஏதோ எண்ணி உடனே அக்குறியைவிட்டு அவன் ஏறிய குதிரைமேலெய்தாள். உடனே அக்குதிரை விழுந்திறந்தது. அந்தோ, பெண்பேதையே! நீ முத லில் வைத்த குறிக்குச் சரியாக அம் பை விட்டிருப்பின் டாட்கான் மடிந் திருப்பானே! அவன் படைவீரரனை வரும் பயந்து ஓடிப்போவாரே! தேச முழுமையும் உன்னுடையதாகுமே! நீயும் உன் தாய் தந்தையரும் களி கூறலாகுமே!

குதிரை விழவும், டாட்கானும் விழுந்து புழுதியிற் புரண்டான். ஆனுல் அடுத்த நிமிஷத்திற்கெல் லாம் அவன் எழுந்து நாலண்டையும் பார்க்க. ரஜபுத்திரர் எதிரிகளைத் துரத்திக்கொண்டு ஊருக்குள் புகுந் தார்கள். தைரியம் குன்றுத டாட் கான் இதுதான் சமயம் என்றோடி கோட்டைக்கதவைச் சாற்றலானுன். ஊருக்குள் நுழைந்த ரஜபுத்திரர் பொறியிலகப்பட்ட எலியைப்போல வெளியே செல்லமுடியாது தவிப்பார் என்பது அவனெண்ணம்.

டாட்கான் கதவைச் சாற்றும் தருணத்தில் வெளியிலிருந்து இராஜ புத்திரர்கூடி உள் நுழைந்து ஊருக் குள் இருந்த ரஜபுத்திரர்க்கு உதவி

"மனைவி மக்கள் படும் கஷ்டத்தையோ கண்கொண்டு பார்க்க முடிய வில்லை. ஆற்றில் விழுந்து நம் ஆவியை ஒழித்தால் நம் கஷ்டமும் ஒருவாறு ஒழியும். இவர்களை யெல்லாம் விட்டுவிட்டு இறக்கவும் மனம் வரேன் என் கின்றதே!"

புரியச் சென்ருர்கள். டாட் அஞ்சாத வீரன் என்பதறிவோம். அவன் மற்ருெரு குதிரை எறித் தன்படைகளைத் திரட்டிக்கொண்டு பிரதாபசிங்கை எதிர்த்தான். பிரதாபசிங்கு செய்த வீரச் செய்கையோ செப்புந்தரமல்ல. கத்தியால் சிலரை வெட்டினன். கட்டாரியால் சிலரைக் குத்தினன். அம்புகளைப் பலர்மீது எய்தான். குதிரையை ஓட்டிச் சிலரைக் கொன்ருன்.

பத்மினி குறி தப்பாது எதிர்ப்பட்டவரெல்லோரையும் தன் அம்பிஞற் கொன்ருள். மற்ற ரஜபுத்திரப் போர்வீரரும் எதிரிகளால் நூற்றுக் கணக்காய் மடிந்தார்கள்.

டாட்கான் எப்படியாவது பிரதாபசிங்கைக் கொல்ல வேண்டுமென்றெண்ணிக் கையிலிருந்தஈட்டியுடன் அவன்மீது பாய்ந்தான். பிரதாபசிங்கு அக்குறிக்குத் தப்பி, அப்பால் அவன் மேற் பாய்ந்தும் தன் இரண்டுகைகளாலும் இறுகப்பிடித்துக் குலுக்கினன். அக் குலுக்கால் டாட்கான் விழிகள் பிதுங்கி வெளிவந்தன. பத்மினிக்கு மனந்தாளவில்லை. அம் மெல்லிநல்லாள அவனை விட்டுவிட வேண்டிக்கொள்ள பிரதாபசிங்கு அவள் இஷ்டப்படி செய்தான். டாட்கான் படைகள் ஊக்கம் இழந்து, உற்சாகம் போய், இனி ஆவதொன்றில்லை யென்றெண்ணி தம்மூர் முகம் நோக்கி ஓடினர்.

சண்டை முடிந்தது. பிரதாபசிங்கின் விரதமும் நிறைவேறிற்று. அஜீத்சிங்குக்குண்டான ஆனந்தத்தை நாம் அளவிடவேண்டுமோ?

உடனே அவன் புறப்பட்டுத் தன் நகரம் வந்து பழையபடி செங்கோலேந்தி அரசு செய்பவனுனன். முன் செய்த எற்பாட்டின்படி பத்மினிக்கும் பிரதாபனுக்கும் கல்யாணம் நடந்தது.

பிரதாபசிங்கு தன் மனையாளுடன் மாமனூரகத்தில் சிறிதுகாலம் இருந்து தன் ஊர்போய் அவளைத் தன் நிழல்போல அரைக்கணமும் பிரியாமல் இன்புற்றுவந்தான்.

ப. சி. கோவிந்தசாமி ராஜா.

சுதேச பாஷையில் பத்திரிகைகளை நடத்துவதில் இராஜ நிந்தனை எற்படின் அதற்குத் தப்புவது மிகவும் கஷ்டம். எனெனில் எந்த வியாசம் குற்றமென்று சொல்லப்படுகிறதோ அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அந்த மொழிபெயர்ப்பைக் கொண்டே நடவடிக்கைகள் நடத்தப்படுகின்றன. இந்த மொழிபெயர்ப்பு சிலசமயம் வேறு பொருள்பட்டு நிற்பதுமுண்டு. 1908-ம்ஞூ ஆகஸ்டு மாதத்தில் "சுதேச மித்திரன்" ஆசிரியரான ஸ்ரீமான் ஜி. சுப்பிரமணிய ஐயரின்மீது வந்த ராஜத்துவேஷக் கேஸில், குற்றமுள்ள வியாசங்களை இங்கிலீஷில் மொழி பெயர்த்ததில் "ஆங்கிலேயர்" என்ற பதத்துக்கு "கவர்ன்மெண்டு" என்றும், "திட்டுவது" என்ற தமிழ் பதத்துக்கு (Killing) "கொல்லுவது" என்றும் மொழிபெயர்க்கப்பட்டிருந்தனவாம். இந்த மொழிபெயர்ப்பு எவ்வளவோ விபரீதம் தருமன்ருே?

சிலர் அனுபவக் குறிப்புகளை எழுத அஞ்சுகிருர்கள். எனெனில், அது தங்களைப்பற்றியதென எங்கே பிறர் அறிய நேருமோ, அதனல் தங்களின் நற்பெயர் எங்கே கெட்டுவிடுமோ என்ற அச்சத்தால்தான். இது கோழைத்தனமாகும்.



ஹாஸ்ய சஞ்சீவினி



முனிசிபல் மீட்டிங்கு நடந்துகொண்டிருந்தது. இவ்வூருக்கு விஜயம் செய்யும் அந்தப் பிரபல கனவானுக்கு உபசாரப் பத்திரம் படிக்க 50-ரூபா செலவிட வேண்டும் என்று ஒரு கௌன்சிலர் கூறினார். இன்னொருவர் நான் அக்கனவானைப் பார்த்ததே யில்லையென்றார். அவரை யறியாதாரும் உண்டா என்றார் மற்றொருவர். இச்சமயத்தில் ஒரு கழுதை அங்கு கத்திக்கொண்டு கம்பீரமாக வந்து நின்றது! இவர்தானோ அந்தக் கனவான் என்றார் முன்பு பேசியவர்.

ஃ

தான் முற்றிலும் குணமடைந்துவிட்டதைத் தெரிவிப்பதற்காகத் தன் மனைவிக்கு ஒருவர் பின்வருமாறு எழுதினார்:—"சௌக்கியமாய் விட்டதும் புறப்பட்டு வருகிறேன்."

(இதில் ம் சேர்ந்தால் அசௌக்கியம்; ம் சேராவிடில் பூரண சுகம்.)

ஃ

பையன்:—அத்தான்! நல்லவேளையாய் தப்பாமல் வந்துவிட்டீர்கள். நீங்கள் வராவிட்டால் நான் அடிபட்டுக்கொண்டு முறுக்கு தின்னவேணும்.

அத்தான்:—நான் வராவிட்டால் உனக்கு அடிவிழுமா? ஏன்?

பையன்:—உங்களுக்காகச் செய்த முறுக்கு பக்ஷணங்களை நீங்கள் வந்து தின்னவில்லையே என்ற ஆத்திரத்தில் என்னை யடித்து இந்தா தொலைத்துக்கொள் என்று அம்மா திட்டித் தரும். இப்பவோ உங்கள் பேரால் நாங்கள் நன்றாகத் தின்னலாம்.

ஃ

கணவன்:—அதோபோகிற தயிர்க்காரி தனக்குத்தானே பிழைக்கத் தெரிந்துகொண்டாள். நீயும் அப்படியே எதையாவது செய்யப் பார்க்கிறதுதானே.

மனைவி:—எதைப் பார்க்கச் சொல்கிறீர்கள்? எந்த இழவைத்தான் கவனிக்கிறது. உங்களைக் கட்டிக்கொண்டதற்கு நானேதான் உழைத்துத் தின்னவேணும்போலிருக்கு.

ஃ

மனைவி:—காலணாவுக்கு இரண்டு வாழைப்பழம், எவ்வளவுக்கு வாங்க?

புருஷன்:—அரையணாவுக்கு ஐந்து பழம் கேள்.

மனைவி:—பழம் பெரிதல்லவா? அவள் தரமாட்டாள். காலணாவுக்கு இரண்டுதான் கொடுப்பாள்.

புருஷன்:—வீட்டுக்காரன் பக்கமாய் அவன் பேச்சோடு மனைவியும் சேர்ந்து பேசினால் எந்த சங்கதியிலும்

அனுபவ வாசகங்களைப் பழிப்போரும், பிறரது அனுபவ மொழியில் நம்பிக்கை யில்லாதவர்களும், தாங்கள் பட்ட அனுபவத்திலிருந்தும், இனி படப்போகும் அனுபவங்களிலிருந்துமேதான் தெளியவேண்டும்.

லாபமுண்டு. நீயோ வீட்டுக்கார னுக்கு எதிரிடையாய் மற்றவர்களின் பக்கம் பேசப்பட்டவள். அப்படியே இப்போதும் பழக்காரியின் பக்கம் பேசுவதால் அரையணவுக்கு ஐந்து பழத்திற்குப் பதில் நாலே பழம் உன க்கு வருகிறது. சரி வாங்கிக்கொள்.

ஃ

பாகவத அம்மை:—ஓ ! அக்கா! ஸ்ரீரங்கம் போனயே! அங்கே 'கடை' பக்கத்தில் இல்லையாமே. உனக்கு ரொம்ப கஷ்டமாச்சே?

இன்னொரு பாகவத அம்மை:— ஆ! அப்பா! எவ்வளவோ பாகவத கோஷ்டி! எவ்வளவோ ததியாராதனை கள்! அங்கே "கடை" ப்பேச்சு எடுக்க லாமோ? மதிலுக்கு வெளியே இருக் கிறதாம். எப்படியக்கா போகிறது?

ஃ

டாக்டர்:—அந்தக் கட்டியை அறு த்துத்தான் ஆகவேணும்.

பிணியாளி:—உங்களுக்கு அந்தக் கட்டி வந்ததுபோல நினைத்து அறுக் காமே வைத்தியம் சொல்லுங்கள்.

ஃ

தகப்பன்:—இவ்வுலக வாழ்வு எனக்கு ரொம்ப கஷ்டமா யிருக்கின் றது. நான் சந்நியாஸம் வாங்கிக் கொள்ளப் போகிறேன்.

மகன்:—என்ன விலை அப்பா? எனக்கும் ஒன்று வேணுமே.

(S. வாசுதேவன்.)

ஃ

கடைக்காரன்:—என்னடா!கயிறை அளந்தாயா?

கடைக்காரப் பையன்:—நான் அவரிடம் "கயிறே" அளக்கவில்லை. உண்மைதான் சொன்னேன்.

(S. வாசுதேவன்.)

ஃ

ஒருவர்:—அந்த சுப்பு சாஸ்திரி பெயர் எங்கு பார்த்தாலும் அடிபட றது.

பக்கத்திலிருந்த பையன்:—வாத் தியார் ஒரு அடி அடித்தாலே சுரீர் என்று வலிக்கிறதே. ஊர் முழுதும் அடிபட்டால் எவ்வளவு வலிக்கும்? பாபம்! (S. ரங்கராஜன்.)

ஃ

குழந்தை:—உங்க அப்பாவுக்கும் அம்மாவுக்கும் எத்தனை பிள்ளைகள்?

தந்தை:—எங்க அம்மாவுக்கும் அப்பாவுக்கும் பிறந்த பிள்ளையை ஒன்ருகச் சேர்த்துப் பிசைந்து ஒரே பிள்ளையாக்கிவிட்டார்கள்.

குழந்தை:—அந்தப் பிசைந்த பிள்ளை நீதானு அப்பா?

ஃ

(1) இட்டென்று மறியாத
விதவை பல்நீதிகள்
இயம்பலிற் பெரியளாவள்;

(2) எசலுறு மலடிக்கோ
இடிகுரல் வாய்பெரியது;

(3) எத்தையும் சாதிக்குமத்

குழந்தை பெற ஆணும் பெண்ணும் சேருகின்றனர். குழந்தை பெற்ற பிறகு அதைக் காப்பாற்ற ஆணும் பெண்ணும் கூடி வாழ்கின்றனர். இந்தக் கூடிவாழும் நிலைமையைத்தான் கல்யாண மெனப்படும் என்று ஸ்ரீ. ம. சிங்கார வேலு, பி. ஏ., பி. எல். கூறுகிருர். (குழந்தை பெறும் விருப்பமின்றிக் கூடு தற்கு என்ன பெயர் என்று ஒருவர் வினவுகிருர்.)

துட்டிலா வக்கிலும்
ஜம்பத்திலே பெரியன்;
(4) துத்தலுக் கில்லாதவோர்

சுத்தவேழைக் குளத்
தேயுள்ள கோரிக்கை
சொல்லொணு வண்ணம்
பெரிது

(5) சட்டம் படிக்கின்ற அற்ப
வித்வான் பெரியன்
சாற்றுமா க்ஷேபனைக்கே;

(6) சாந்த மறியா மூர்க்கன்
கோபத்திலே பெரியன்;

(7) சாறுசெய் கோலத்தகன்

பொட்டையாம் புரவியும்
கொள்ளுண்ணலிற் பெரிது;

(8) ஆவேறு பெரிது சதையில்;

(9) புக்க வைணவ னுமம்
பெரிது;

(10) சோறளியாத
புருடன் திட்டிற் பெரியனே.

ஃ

அவசரக்காரன்:—ஒரு ஐந்து ரூபாய் கடன் கொடுப்பீர்களா? அதிக அவசரம்.

நிதானக்காரன்:—அவசரமாய்க் கடன் பெற்றவர்கள் பிறகு, "என்ன ஓய்! பிரமாதமாகக்கடனைக் கொடுத்து விட்டு அலைகிறது; நான் அந்தப் பணத்தைத் தராவிட்டால் உம்மால் என்ன செய்ய முடியுமென்று திட்டுகிறார்களாம். இதில் நீரும் ஒருவராய் விடுவீரோவென்று நிதானமாய் யோசித்தபடி யிருக்கிறேன். ஆனதால் என் யோசனை முடிந்தபின்பு வரலாம்.

ஃ

குமாராண்டி:—அம்மா! என்னை இனி 'துரைராஜா' என்று கூப்பிட வேண்டும்.

தாய்:—அட முட்டாள், நாமோ சக்கிலியர். உனக்கு அந்தப் பெயர் வைத்தால் பார்த்தவர்களுக்கு நல்லா யிருக்குமா?

குமாராண்டி:-என் நல்லாயிராது? உலகம் நியாய ஒழுங்கில்தான் நடந்து கொண்டிருக்கோ?

தாய்:—என்னடா! அப்படி உலகம் ஒழுங்கு தப்பிப்போனது?

குமாராண்டி:—நன்னூல் முதல் சூத்திரம் தெரியாதவன் புலவன் என்றும், 3-செண்டு நிலத்துக்கு வழியில்லாதவன் பண்ணையார் என்றும், கடையில் 10-ரூபா சரக்கில்லாதவன் 'அண்டு கம்பெனி' என்றும், மோசக்காரனை வெகு யோக்கியன் என்றும், சின்ன மிட்டாதார்களும் அக்தார்களும், ஜமீன்தார் என்றும், சில பகல் வேஷக்காரர்கள் சாமியார் என்றும், தலைவலிக்கு மருந்து சொல்லத் தெரியாதவர் பண்டிதர் வைத்தியரென்றும் வைத்துக்கொண்டால், நான் மட்டும் துரைராஜா என்று என் வைத்துக் கொள்ளக்கூடாது. அதனாலே எந்த ஊரு முழுகிப்போகும்?

தாய்:—அப்படியானால் சரி, துரை ராஜாவே! இங்கே வாடா கண்ணே!

குமாராண்டி:—அதுதான் சரி. இனி அப்படியே கூப்பிடு அம்மா.

ஒருவன் நினையாத சமயத்தில் ஒரு விஷயம் ஆரம்பிக்கப்போக, அதற்கு வேண்டிய சரக்குகள் அகப்படாமல் தவிக்கையில், கடவுள் இன்னொருவரை அனுப்பி சகாயம் செய்து அதைப் பூர்த்திபடுத்துகிறார். அந்த மனுஷ்யரை கடவுள் அனுப்பிய தூதராகச் சொல்லலாம்.

பணத்திற்கு உண்டான உயர்வு எப்படி?

ஐசுவரிய மென்றும், செல்வமென்றும், சம்பத்து என்றும் பலவிதமாகச் சொல்லுகிறோமே, அதற்கு உண்மையான அர்த்தம் என்னவென்று பார்ப்போம். பணமும், நினைத்தபொழுது பணமாக மாற்றிக்கொள்ளக் கூடிய பொன் வெள்ளிமுதலிய உலோகங்களும் மாத்திரந்தான் ஐசுவரியம்; மற்றொன்றும் ஐசுவரியமல்லவென்று நினைக்கலாமா? அது பொருந்துமா? பொன்னையும் வெள்ளியையும் கட்டி கட்டியாய் ஒரு தேசத்தில் சேர்த்துவிட்டால் அதற்குச் செல்வப் பெருக்கம் உண்டாகி விடுமோ? உலகத்தில் வர்த்தகம் என்னும் தொழில், பொன் வெள்ளி உனக்கு அதிகமாகிறதா, எனக்கு அதிகமாகிறதா பார்ப்போமென்று போட்டிப்போட்டுக்கொண்டு செய்த தொழிலாகவே இருந்து வருகிறது.

ஃ

ஜலம் காற்று முதலானவைபோல யாவருக்கும் இலவசமாய் அகப்படக் கூடிய பொருள்களைத் தவிர, மனிதனுக்கு வேண்டிய மற்றெல்லாப் பொருள்களும் ஐசுவரியத்திற் சேர்ந்தவையே. உபயோகத்திற்கான பொருள்களைச் சேகரித்து வைப்பது, அல்லது அவைகளைத் தேவையான போது வாங்குவதற்கான கருவிகளை வைத்திருப்பதே ஐசுவரியமுடைத்தாயிருப்பதென்பதாகும். நமக்கு வேண்டிய பொருள்கள் பிறரிடத்திலிருந்து வரவேண்டுமானால், அவைகளுக்குப் பதிலாக ஏதேது கைம்மாறாகக் கொள்ளப்பட வேண்டுமோ, அதெல்லாம் ஐசுவரியம் என்பதைச் சேர்ந்ததே யாகும். ஒரு வஸ்து எவ்வளவு உபயோகமானாலுஞ் சரி, எவ்வளவு அவசியமானாலுஞ் சரி, அது பதிலுக்குப் பதில் பொருள்களைக் கொண்டுவர மாட்டாதாயின் அது ஐசுவரியம் என்ற பெயர் பெற மாட்டாது. பணம் தவிர வேறொன்றுக்கும் பதிலுக்குப் பதில் பிரதிப் பொருள் கிடைக்க மாட்டாதென்பதில்லையே; ஆகையால் செல்வம் என்பது பணம் மாத்திரமல்ல. ஆயினும் பணம் முதன்மையான செல்வம் என்று எண்ணப்படுகிறதல்லவா? அதற்கும் தகுந்த நியாயமுண்டு. ஏனெனில், அது ஒரு விசேஷ காரியத்துக்கு உதவுகிறது. அதென்ன காரியம்? பணம் ஏன் விரும்பத்தக்கினது? இது கேள்வி.

ஃ

வஸ்துக்களினுடைய பெறுமானங்கள் வெவ்வேறாக இருக்கின்றனவாதலால்; அவைகளுக்கெல்லாம் பொதுவான ஒரு அளவு இல்லாவிடின் அவைகளுள் ஒவ்வொன்றுக்கும்

தன் கணவன் இளைத்துப் போயிருப்பதை ஒரு கேவலமாக எடுத்துக் காட்டிப் பழிக்கும் மனைவி தன் கேடுகாலம் நெருங்கியே அவ்விதம் இழிந்துரைப்பவளாவாள். அச்சொல்லைக் கணவன் மரிக்குமளவும் மறவான்.

மற்றவைகளுக்குமுள்ள சம்பந்தத்தை அறிவது மிகவும் வருத்தமாயிருக்குமே. இதற்கு ஒரு திருஷ்டாந்தம் பாருங்கள், குடை தைத்து ஜீவனம் பண்ணுகிற ஒருவனுக்கு அரிசிவேண்டுமானால், ஒரு குடைக்கு எவ்வளவு அரிசியென்று தெரிந்துகொள்ளுகிறது? அவனுக்குக் குதிரை வேண்டுமானால், ஒரு குதிரைக்கு எத்தனை குடைகள் கொடுக்கிறது? இப்படியே ஒவ்வொரு பொருள் வேண்டும்போதும் வெவ்வேறு கணக்குப் பார்க்க வேண்டியிருக்குமன்றோ: பொருள்களினுடைய தாரதம்மிய மதிப்பும் நன்றாய்த் தெரியமாட்டாது. அப்படியில்லாமல், இப்போதிருக்கிறதுபோல ஒவ்வொரு பொருளுக்கும் நாணய விலை ஏற்பட்டுப்போனால், யாதொரு வருத்தமுமிராது. எப்படியெனில், ஒரு குடையின் விலை 1-ரூபாய்; அரிசி ஒரு ரூபாய்க்கு எட்டு படி என்று இப்படியே பொருள்களுக்குள்ள சம்பந்தங்களைப் பணத்தின் மூலமாய் எளிதில் தெரிந்து கொள்ளலாம். முகத்தலளவைகள், ஆழாக்கு, படி, மரக்கால் என்றும், நீட்டலளவைகள் அங்குலம், அடி, கஜம் என்றும் எப்படித் தெளிவாய்த் தெரிகின்றனவோ, அப்படியே வஸ்துக்களின் பெறுமானமும் தம்பிடி, அணா, ரூபாய் என்று யாவருக்கும் தெரியும். இந்தப் பொதுவான அளவையல்லாமல், அவைகளினுடைய ஏற்றத்துக்கும் தாழ்ச்சிக்கும் தகுந்தபடி தாரதம்மியம் பார்த்துப் பிரிப்பதற்கு வேறு வகை இல்லை. ஃ

பணத்தினால் உண்டாகும் பலன் இது மாத்திரமல்ல; இதைவிட மேலானதோர் பலனுமுண்டு. குடைக்காரனுக்கு அரிசி வேண்டுமேயானால், குடையை வேண்டி நிற்கிறவன் யாராவதுண்டா? அவனிடத்தில் அரிசி உண்டாவென்று தேடி அலைய வேண்டுமே தவிர, நினைத்தபோது குடை போயிற்றய்—அதற்குப் பதிலாக அரிசி வந்ததாம் என்பதில்லை. அன்றியும், ஒரு குடைக்கு எவ்வளவு அரிசி கிடைக்குமோ, அவ்வளவு அரிசி அவனுக்குத் தேவையில்லாவிட்டால், அவன் என்ன செய்வான்? குடையை ஒடித்துக் கொடுக்க முடியாதே. குடையானது எல்லாரும் எந்தக் காலத்திலும் விரும்பத்தக்கினதல்லவாதலாலும், பிரித்துப் பகுகக் கூடியதல்ல வாகையாலும், இதில் வெகு கஷ்டம் ஏற்படுகிறது. ஆகையால், எந்த வஸ்துவானது பகுக்கக் கூடியதாயும், எல்லாராலும் விரும்பப்பட்டதாயும், மற்றச் சாமான்களுக்குக் கைம்மாறாகக் கொள்ளப்பட யோக்கியமாகவும் இருக்கிறதோ, அதை எப்பாடுபட்டாவது சம்பாதித்துச் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டுமென்று எல்லாருக்கும் இஷ்டமிருக்குமல்லவா? ஆகாரத்துக்கு உபயோகப்படும் வஸ்துக்கள் இந்தத் தன்மைக ளமைந்தவைக ளாயிற்றே என்றாலோ, பஞ்சம் சீக்கிரத்தில் வருமென்று தெரிந்தாலல்லாமல், அவைகளை அதிகமாய்ச் சேர்த்து வைக்க யாருக்கு இஷ்டமிருக்கும்? அப்படிச் சேர்த்து வைத்தாலும் நெடுநாளைக்குக் கெட்டுப்போகாமல் நிற்கமாட்டா. ஆகையாலேதான், முன் சொன்ன மூன்று குணங்களோடுகூட, எத்தனை நாளாயினும் பழுதாகாத குணமுள்ள வஸ்து என்னவிருக்கிறதென்று பார்க்கவேண்டி யிருக்கிறது.

ஃ

நாகரீகம் விர்த்தியாகுந்தோறும் ஒவ்வொரு துராசாரமாய்த் தொலைப்பது நன்று. சாஸ்திர விரோதமான காரியங்களைச் செய்யலாகாதேயன்றி அசாஸ்திரீயமான கெட்ட வழக்கங்களைத் தவிர்க்கத் தடையென்ன?

அநேகமாயிரம் வருஷங்களுக்கு முன் தொடங்கி எறக்குறைய எல்லா ஜாதியார்களும் உலோகங்கள் அதாவது முக்கியமாய்ப் பொன்னும் வெள்ளியும் மேற்குறித்த காரியத்துக்கு எற்றவை யென்று கொண்டிருக்கிறார்கள். சோறும் துணியு முண்டானால் உடம்பை அலங்கரித்துக்கொள்ள ஆபரணம் வேண்டுமென்ற ஆசை உண்டாகி, விலை உயர்ந்ததும் அலங்காரத்துக்கு அடுத்ததுமான பொன் வெள்ளியைத் திரட்டிச் சேர்த்துவைக்க ஒவ்வொருவனும் ஆவலுடன் முயல்கிறான். இந்த உலோகங்கள் எப்படிப் பட்டவை யென்றால் அழிவில்லாதவைகள்; ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எளிதில் கொண்டு போகத் தகுந்தவைகள்; பார்வைக்குக் கொஞ்சமாயினும் விலையில் மேன்மையானவைகள்; பிறர் கண்ணுக்குத் தெரியாமல் ஒளித்து வைக்கத் தகுந்தவைகள்; வெகு நுட்பமாயும் பகுக்கக் கூடியவைகள்; சுத்தமாயிருந்தால் மாறாத தன்மை யுள்ளவைகளுமாம். ஆகவே, இத்தகைய விலை பெற்ற பொன், வெள்ளி உலோகங்களை நாணயங்களாக வியாபாரத்தில் வழங்குவதற்கு எல்லா தேசத்தினரும் விரும்பலாயினர்.

(மற்றதில் முடிவு.)

மூடத்தனத்துக்குத் தகுந்த மூடத் துணைகள்.

ஒரு பெண் தன் வீட்டிற்கோ தன் கணவனுக்கோ எதிரிடையாக நடந்துகொண்டு மூடத்தனமும் தகாததுமான காரியங்கள் செய்கையில், அதற்குப் பக்கத்து வீட்டுப் பெண்ணும் எதிர்வீட்டு நாரியும், மூலைவீட்டு மூக்காயியும் கூடிக்கொண்டு துணையாகிறார்கள் தவறு செய்தவளை இந்தப் பெண்கள் தாங்கி உற்சாகப்படுத்தி அந்த சமயத்திற்கு அவளுக்குவேண்டியதெல்லாம் செய்கிறார்கள். அவள் தன் கணவனுக்குத் தெரியாமல் தாய் வீடு செல்ல விரும்பினாலும், போகக்கூடாத இடத்துக்குப் போக நினைத்தாலும் இந்தப் பெண்கள் துணையாயிருந்து அழைத்துச் செல்கிறார்கள். இவர்களைவிடக் குடித்தனத்திற்கு வேறு கொள்ளி வேண்டியதில்லை. தகாததைச் செய்து நடப்பவளுக்கு நல்ல புத்தி சொல்லித் திருத்தக்கூடிய விவேகமோ இந்தப் பெண்களுக்குச் சற்றாகிலும் கிடையாது. நல்லதுக்கு எதிரானவற்றையே இந்த நாசகாலிகள் செய்கிறார்கள்.

சில பெரிய மனிதர்கள் பெரிய பரோபகாரமான வேலையையோ இயக்கத்தையோ ஆரம்பித்துக்கொண்டு, அதன்மூலமாகத் தாங்கள் லாபமடையவும் அந்தரங்கத்தில் பல வழிகளைத் தோண்டிக்கொள்கிறார்கள். அவ்வழியில் முயன்று தங்கள் வியாபாரத்தையும் பெருக்கிக்கொள்கிறார்கள்.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்ரதாபன்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

போகிற—வருகிற கவர்னரு சாமிகள்.



கவர்னருசாமிகள் மஹா பெரிய சாமிகளப்பா! அவர்கள் ராஜ சக்ரவர்த்தியின் பிரதிநிதிகளப்பா! ஒவ்வொரு கவர்னருசாமியும் லண்டனிலிருந்து புறப்படுவார்களப்பா! இன்னார் கவர்னராக வரப்போகிறார் என்று ஒரு வருஷ முன்பே பேச்சு கிளம்பும்! அது தப்பு என்று மறுத்து இன்னொரு பேச்சு கிளம்பும்! அதற்கப்பாலே எல்லாம் உள்ளே நுழைந்து அறிந்த ஒருவர் இன்னார்தான் வருவார் என்று சொல்லப் புறப்படுவாரு! அதற்குமேலே திடீரென்று ஒருவர்பேரு கிளம்பும்! அவர்தான் கவர்னர் சாமியாக வருவாரென்று உறுதியாகும். பிறகு அவரை இராஜ சக்ரவர்த்தியவர்கள் கவர்னராக நியமித்திருப்பதாகத் தமது ஆக்ஞையை வெளியிடுவார்கள். பிறகு புதிய கவர்னருக்குச் சக்ரவர்த்தி பேட்டிதந்து கௌரவித்து அனுப்புவார்கள். உடனே புது கவர்னருடைய சரித்திர வரலாறுகள் பத்திபத்தியாகப் பத்திரிகைகளிலே தோன்றிக்கொள்ளும். புதிய கவர்னரு சாமிக்கு லண்டனிலே விருந்துகள் நடப்பதிலே, அதில் அவர் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் மகிமையான அர்த்தங்கள் கற்பிக்கப்படும். அப்பாலே அவர் இந்தியா வந்ததும், அதை வெகு விசேஷமாகக் கொண்டாடப்படும். பத்திரிகைகளிலெல்லாம் புது கவர்னருசாமியின் படங்கள் வெளியாகும். இது ஒரு பெரிய ஆர்த்த வைபவமாகக் கொண்டாடப்பட்டு புது கவர்னருசாமி தமது ஸ்தானத்தில் வீற்று அமர்வாரு.

இவ்வளவும், இன்னும் எவ்வளவோ விரிவாகச் சொன்னாலும் பொருந்தக்கூடிய இத்தனையும் லண்டனிலிருந்து இங்கு புறப்பட்டுவந்து சேர்ந்ததுடன் அடங்கும். அதற்குப் பிறகு இனி இங்கே நடக்கிற வைபவங்கள் சொல்லமுடியுமோ! ஆ! கவர்னருசாமி பெரியசாமி யல்லவோ! கவர்னர்சாமி வீற்றிருக்கிற மகிமையாலேதான் அந்த இடத்துக்கு பிரஸிடென்ஸி (Presidencey) என்றும் இராஜதானிப்பட்டணம் என்றும், கௌரவம் ஏற்பட்டுக்கொண்டு எவ்வளவோ பிரதாபம் காட்டுகின்றது! கவர்னர் சாமிகள் இல்லாமற்போனால், கவர்ன்மெண்ட் அவுஸ்கள் என்பதேது? அதுமேலே கொடிமரங்க

∴


ளேது? பாவட்டாக்கள் பறப்பதேது? கவர்னர் வந்தார் போனார் என்கிற 17-டமீர் டமீர் குண்டுகளேது? ரெயில்வே ஸ்பெஷல் வண்டிகள் ஓடுவதேது? ரயில்வே ஸ்டேஷன்களில் கலெக்டர், கவுன்ஸிலர், ஜட்ஜிகள் முதலிய கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர் வந்து கண்டுகொள்வதேது? பிரஜா தரிசனம் என்கிற பேட்டிகளேது? அடுத்தடுத்துப் பால்களேது? விருந்துகளேது? கொண்டாட்டங்களேது? கவர்னர் அங்கே வாரார், இங்கே வாரார் என்றால் போலீஸாரின் பாராக்கள், கட்டுக்காவல்கள் முதலியன ஏது? நாட்டுக்குச் செல்வப்பிள்ளைகள் நாங்கள்தானென்று முனிசிபாலிட்டியார் முன்பந்தியில் வந்து கண்டுகொள்வதேது? கவர்னரின் சுற்றுப்பிரயாணமென்று பயணங்கள் வைத்துக்கொள்வதேது? அதனாலே ஆங்கில ஹோட்டல்காரர்களை ஆங்காங்கு தயாராக வைத்து ஆயிரமாயிரமான ரூபாய் செலவுகளால் தீனி சாப்பாடுகள் சப்ளைசெய்கின்ற விசேஷங்கள் ஏது? வேட்டைக்குப்போனால் அங்கே கூடாரம், அங்கே தீனி, காட்டுக்குப்போனால் அங்கே தீனி என்கிற தீனி கண்டிராக்ட் செலவுகள் ஏது? அவர்களுக்கு வருமானமேது? பிழைப்பேது? ஒவ்வொரு ராஜாக்களையோ, ஜமீன்தார்களையோ கவர்னர்கள் காணப்போனால், அவர்கள் தங்கள் ஊர்களையே புது விதமாக அலங்கரித்து வரவேற்புகள் கொடுக்கிற ஆரவாரங்கள் ஏது? அங்கே டீ பார்ட்டி, ஈவினிங் பார்ட்டி, அந்த பவுண்டேஷன், அந்த ஸ்தாபனம் திறத்தல், இந்த ஸ்தாபனம் திறத்தல் என்கிற ஆர்ப்பாட்டங்களேது? அந்தந்த ராஜா ஜமீன்கள் ஏராளச் செலவு செய்து கடன்பட்டுக் கௌரவப்படுவதேது? பெரிய பட்டங்களிலே ஆசைவைத்த பெரிய மனிதர்கள் செய்கிற பெரிய செலவு விருந்துகள் ஏது? அந்தந்த ஊரிலே ஆனைவேட்டை, புலிவேட்டை, எலி, மான் வேட்டைகளேது? போட்டில் காற்று வாங்கப்போகும் தமாஷ்களேது? குடிஜனங்களையும், நாட்டு மனிதர்களையும் கண்டு எல்லார் குறைகளையும் ஆனமட்டும் கவனிக்கிறதாகச் சொல்லுகிற தெய்வவாக்குகளேது? எங்கெங்கோ அந்த மீட்டிங், இந்த மீட்டிங்குகளிலே அமிர்த வசனப் பிரசங்கங்களேது? காடாறு மாதம் வீடாறுமாதமென்று நீலகிரி மகா பலேஷ்வார் முதலிய மலைகளுக்குப் பிரயாணங்களேது? அங்கே கவுன்ஸில்களேது? கச்சேரிகள் ஏது? சிப்பந்திகளேது? ஆபீஸ் வேலைக்காரர் குமாஸ்தாக்களேது? அங்கங்கே உபசாரப் பத்திரங்கள் வாசிக்கிற அழகுகள் ஏது? அதற்குப் பதிலாகச் சொல்லுகிற ருசிகரமான இன்ப வார்த்தைகளேது? அந்த உபசாரப் பத்திரங்களை (அட்ரஸை) அடக்கி வைத்துக்கொள்கிற வெள்ளிப்பெட்டி, தந்தப்பெட்டி வேலை செய்கிற பி. ஆர். அன்ஸன்சு போன்ற பெரிய பிரபல கம்பெனி ஷாப்புக்காரர்களுக்குப் பிழைப்பேது? கொடி பிடித்துக் குதிரைமேலேறிய அரசாங்க சேவகக் கவர்னர் லெட்டர் கொண்டு ஓடுவதேது? வருஷா வருஷம் A. B. C. பட்டங்களைக் கையாலெடுத்துக் கொடுத்துக் கௌரவிக்

குடும்பத்தில் வரம்புகடந்து சிலர் நடந்துகொள்ளுகையில், அவர்களையடக்கி சிக்ஷிக்கக் குடும்பத்தலைவன் முயலும்போது அவனை எதிர்த்துப் பேசுவோர், அன்று முதற்கொண்டு அந்தச் குடும்பத் தலைவனின் ஞாபகத்தில் ஆத்திரத்துடன் பதிவு செய்யப்பட்டவராகவே இருப்பார். அதன் பலன் பிறகு தெரிந்துவிடும்.

கும் சாங்கியங்களேது? நல்ல கவர்னரு என்று நாலுபேர் வாயிலும் வார்த்தை வந்து, வெறும் வாயை மென்றுகொண் டிருப்பவர்களுக்குப் பேச்சு கிடைப்பதேது? என்போல் வாய்த் தொணப்புகிறவர்களுக்கும், சமாசாரம் கிடைக்கவில்லையே என்கிற பத்திராதிபர்களுக்கும் கவர்ன்மெண்ட் கதைகள் பேசுவதேது? கவர்னர், துரைசானி ஆஸ்பிட்டல் வரவேற்பு, செல்ட்ரன்பார்டி முதலியவைகளேது? கவர்னர் துரையைப் போலப் பிரதிமை பண்ணிவைக்க, படம் எழுதிவைக்க, என்றூரு தலைவர்கள் சந்தாக்கள் சேர்க்கத் திட்டங்கள் போடுகிறதேது? அதற்குக் கையொப்பங்கள் போட்டு வசூலிக்க மீட்டிங்குகள் கூடுகிறதேது? இன்னும் இந்த விகடனின் நினைவுக்கு வராமல் மறந்து சிந்தி சிதறிப்போயும், என் நினைவுக்கு வந்தால் அவரவர்கள் நினைவுக்கு வந்ததும் வராமலுமாக இருக்கிற எத்தனையோ அட்டகாச ஆர்ப்பாட்டங்களெல்லாம் ஏது? இவ்வளவுக்கும் சமாளித்து எல்லா கௌரவங்களுக்கும் பெருமைகளுக்கும் மூலஸ்தானமா யிருக்கிற கவர்னரு பதவிமகாமகோன்னதபதவியாச்சுதே கவர்னரு மகா பெரிய சாமிக்குச் சமமாச்சுதே! பெருமாளு இருக்கிற வரையிலே திருநாளு உண்டு என்பதாய்க் கவர்னர் சாமி வீற்றிருக்கிற வரையிலே எல்லா சீரும் சிறப்பும் மகிமைகளும் எவ்வளவோ உண்டு!

ஃ

விகடன் இந்தத் தடவைக்கு என் கவர்னர் சாமியின் மகத்துவங்களைச் சொல்ல வந்தேனென்றால். இதுவரையிலும் நம்ம சென்னப்பட்டணத்திலே நடக்காத புதிய அபூர்வ சங்கதியொன்று நடக்கப்போகிறதால்தான்! அது ஒரு சந்தோஷமான சங்கதி! வெகுகாலம் இந்தியர்கள் எதிர்பார்த்த சங்கதி! நியாயமாய் இந்தியர்களுக்கு மேலான அரசாங்க பதவிகள் கொடுப்பதிலே தாராளத் தன்மையை அதிகமாய்க் காட்டுகிற சங்கதி! நல்ல சங்கதி! அது என்னவென்றாலோ, இப்போது நம்ம சென்னப்பட்டணத்திலே இருக்கிற சீமையிலே இருந்து வந்த கவர்னரு சாமி சில மாதத்துக்கு இந்தியா ராஜப்பிரதிநிதியாக ஆகப்போகிறாரு! அங்குள்ள ராஜப்பிரதிநிதியாரு ரஜா எடுத்துக்கொண்டு இங்கிலாந்து போகிறாரு! இப்படியாக, சென்னைக் கவர்னரு பதவிக்கு ஒரு காலி ஏற்படுகிறது. அந்த மகா கவர்னர் பதவிக்கு கனம் தங்கிய ஸர் முகம்மது உஸ்மான் சாகிபு அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறாரு! இது சென்னைக்கே இதுவரை கிடைக்காத பெரிய பதவியாகும்! நம்ம ஊர் முஸ்லிம் சமூகத்தார்கள் பெரிய கொண்டாட்டம் கொண்டாடுவார்களென்று விகடன் சந்தோஷிக்கிறேன்! ஆனால் ஒரு சங்கதி! முதன்முதல் இந்தியர்களிலே கவர்னராக வந்தவர் லார்ட் சின்ஹா. அவர் தமது அநுபவத்திலே தாம் கவர்னராக வந்தும் தாராளமாக எதுவும் செய்ய முடியாதபடி அநேக நிர்ப்பந்தங்கள் தம்மைச் சூழ்ந்திருந்ததாகச் சொன்னதாய் விகடனுக்கு ஞாபகம்! அப்படியாக, நம்ம புதுக் கவர்னரு பெரிய நன்மைகளாக எதுவும் செய்வதற்கு இல்லாவிட்டாலும், முக்கியமானவைகளைச் செய்து, ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை வளர்த்து, சென்னைக்கு உண்டான முதல் இந்திய கவர்னரின் பேரு எந்த நாளைக்கும் விளங்கும்படியாகச் செய்வாரென்றும் வேண்டிக்கொண்டு, விகடன் என் கோணைத் தடியைத் தூக்கியபடி நின்று சலாம் வந்தனைகள் சொல்லுகிறேன்! புது கவர்னரு நீடூழி வாழ்க. ராம்! ராம்! சுபம்! ஞு! சுவாஹா!!



கும்பகோணத்து மகா மகக்குளம்
போன வருஷம் மாசி மாதத்துப்
பெருமையை நினைத்துக் கொட்டாவி
விடுகிறதாம்!

ஒன்றைத் தொட்டுப் பெரிய
அதிர்ஷ்டங் கண்டவனுக்கு மற்ற
திலே ஓட்டைதானும்!

நீண்ட நாள் பெண்ணை விவாக
மின்றி நிறுத்தி வைத்தால் அது
இரண்டாந்தாரத்துக்கே போகுமாம்!

லஞ்சம் பெருத்த இடத்திலே
தான் கொஞ்ச மிஞ்ச முடிகிறதாம்!

மனைவி மக்களைத் தெருவில்
அலையவிட்டு ஒண்டியடிச்சான் மடங்க
ளில் சேர்ந்து காவியணிந்து, கஞ்சா
புகை இழுத்துத் தெரு சுத்தினால் ஞா
னம் பளிச்சென்று திறந்துவிடுமாம்!

பத்திரிகைப் போட்டிப் பந்தயங்
களிலே ஜெயிக்க இப்போது எல்லா
ரும் தமிழ் அகராதியைத் தேடிப்
புறப்பட்டுவிடவே, ஏற்கெனவே
அகராதியை வைத்திருப்போர் பாடு
தங்களிடம் இல்லையென்று சொல்லி
மறைக்கவேண்டி யிருக்கிறதாம்!

அக்கிரமம் செய்தவர்களைப்பற்றி
ஆ! கடவுளே நீகேள் என்று ஒருவன்
கதறினால், அக்கிரமம் செய்தவர்கள்
நன்றாயிருக்க கதறினவனுக்கே கஷ்ட
மும் பிணியும் வருகிறதே என்று ஒரு
வர் விகடனைக் கேட்டதற்கு, ஆரம்
பத்திற்கு அப்படித்தான் தோன்றி
அக்கிரமத்திற்கு வெற்றிபோலக் காட்
டும், பின்னுக்கு இருக்கிறது சோதனை
என்று பதில் சொன்னானும்!

வெகு நாளைக்கு மோசம் போகா
திருக்க, முதலிலேயே அதிகமாகச்
செய்து ஏமாறிப்போய் விழித்துக்
கொள்வது நல்லதுக்கே தானும்!

எவ்வளவுக்குத்தான் தன் அயோ
க்யதையை மறைத்துவிட்டுப் புது
மோஸ்தர் காட்டினாலும், அவனை
முன்னே அறிந்தவன் அதில் மயங்க
மாட்டானும்!

எவருக்கும் தெரியாமல் மறைக்
கிற ஒரு பெரிய ரகசியத்தை
அவிழ்த்துவிட ஒரு சிறு குழந்தை
போதுமாம். அப்பா உள்ளேயிருக்
கிறாரா என்றால், ஆஹா! இருக்கிறார்
என்று சொல்லி விடுமாம்!

நியூயார்க்கில் ஜிம்மி பிளாரபி
என்ற பிரபல குத்துச் சண்டைக்
காரர் லக்ஷம் பவுனுக்குமேல் சொத்து
தேடியும், கடைசியில் வறுமையால்
பட்டினியில் வாடிக் குளிர் தாங்காது
ஓரிடத்தில் செத்துப்போனா ரென்
பதைக் கேட்ட விகடன், என் ஊர்
நாடகக்காரர்களையும் இந்த இனத்
தில் சேர்த்துக் கொள்ளலாமென்று
சொன்னானும்!

நன்றாய் உழைக்கிற பெண்ணும்,
ஆடவனும் நடுவிலே சேர்ந்துபோக
நாலைந்து சொட்டு வார்த்தைகள்
வேண்டுமாம்!

மரியாதையாகப் பேசு என்ற
அதட்டிய தன் கணவனைப் பார்த்து,
என் தாயை வைத்துக்கொண்டவ
னுக்கு மரியாதை ஒரு கேடா என்று
மனைவி கேட்டாளாம்!

எங்களுக்குச் சரியான சொத்து
சேர்த்து வைத்துச் சிங்காரிக்காத
வரையில் தென்னிந்திய நாடகம்
செழிக்காதென்று சில நாடக நடிகர்க
ளின் ரகசியக் கண்ணாட்டிகள் பேசிக்
கொண்டார்களாம்!

சிநேகிதனாயும் வேண்டியவனாயு
மிருப்பவனின் குணத்தை யறிய
அவனை ஒரு விரோதியாகும்படி
செய்துகொண்டு பார்த்தால் தான்
அவனது உண்மைக் குணங்களும்,
நன்றியறிவின்மையும், மூர்க்கமும்
கபடமும் வெளியாகுமாம்!

சென்றமாதம்

தென்னிந்தியாவிற் புயல்:-கடற்கரையடுத்த ஊர்களிலும், பிற இடங்களிலும் கனத்த புயல் காற்றும் மழையும் தோன்றி உயிர்ச் சேதமும், பொருள் நஷ்டமும், பயிரழிவும் பயங்கரமாய் விட்டன. 1916-ம் வருஷத்திய புயல் காற்றைவிட மிக்க கோரம் விளைத்துளது.

வடஇந்தியாவிற் பூகம்பம்:—பொங்கல் பொங்கிய மறுநாளான தைமாதம் 2-ம் தேதியில் பீஹார் மாகாணத்தில் திடீரென்று கனத்த பூகம்பம் நேர்ந்து முசபர்ப்பூர், பாட்னு, மாங்கீர் முதலிய நகரங்கள் இடிந்து வீழ்ந்து அழிந்தன. நேப்பாளத்திலும் கனத்த பூகம்பம் உண்டாகி காட்மாண்டு என்ற தலை நகரம் ஸர்வ நாசமாயது. கட்டிடங்கள் பூமியின் அசைவால் இடிந்து விழுகையில் அதன் அடியிற் புதையுண்டு இறந்தோரின் பரிதாபம் எவர் மனத்தையும் திடுக்கிடச்செய்யும். 20-ஆயிரம் பேர் உயிரிழந்ததாகச் சொல்லப்படுகிறது. பொருள் நஷ்டம் அடைந்தவர்களும், மக்கள் உறவு சுற்றம் பெற்றோர்களை இழந்தோரும் எத்தனை லக்ஷமோ! இவர்களின் துன்ப நிவாரணத்திற்காக நிதி சேகரிக்கப்பப்படுகிறது. பீஹார் என்றால் அழகிய நாடு என்றும். ஜனகர் அரசாட்சி செய்த இடமென்றும், சீதை விளையாடிவளர்ந்த பூமியென்றும் மகாத்மா கூறுகிறார். தென்னிந்தியாவில் 1900 வருஷத்தில் ஆகஸ்டு மாதம் 30-ம் தேதி பூகம்பமென்று திண்டுக்கல் கந்தசாமி ஜோசியர் என்பவர் கூற, அதை ஜனங்கள் பூரணமாய் நம்பி. அன்றிரவு எவரும் வீட்டில் இராமல் வெளியிடங்களிலும், மைதானங்களிலும் படுத்துறங்கினர் எனினும் பூகம்பம் எதுவும் நேரவில்லை.

குடியரசு:—இதன் ஆசிரியர் ஸ்ரீமான் இராமசாமி நாயக்கருக்கு 6-மாத வெறுங்காவலும், 300 ரூபா அபராதமும், பதிப்பாசிரியரான ஸ்ரீமதி கண்ணம்மாளுக்கு 3-மாத வெறுங்காவலும் 300 ரூபா அபராதமும், அபராதம் தராவிடில் மேலும் ஒருமாத வெறுங்காவலுமாக கோயம்பூத்தூர் ஜில்லா மாஜிஸ்திரேட் சிக்ஷை விதித்தனர்.

சீனுவில் பூகம்பமும் வெள்ளமும்:-இங்கும் கனத்த சேதமாம். 4000 பேருக்கு வீடில்லை 3000-பேர் இந்த ஆபத்திலிருந்தும் மீட்கப்பட்டனர். இன்னும் எவ்வளவோ சேதங்கள். அங்குள்ள மஞ்சளாறு பொங்கிப் பிரவகித்து, வெள்ளத்தில் பதினாயிரத்துக்கு மேற்பட்ட ஆண் பெண் குழந்தைகள் அடித்துக்கொண்டு போகப்பட்டனராம்.

1934-ம்ஹு:—1933-ம் வருஷத்தில் வியாபார மந்தத்தாலும், பல துன்பங்களாலும் கஷ்டமடைந்தவர்கள் 1934-ம் வருஷம் யாவற்றையும் நிவர்த்தித்துஇருளிலிருந்தும்வெளிச்சத்தில் வரச் செய்யுமென்றும் நம்பி எதிர்நோக்கினர். புது வருஷ ஆரம்பமோ புயலும், பூகம்பமும், பிணியும் அலறுகையுமாய் அச்சந்தருகிறது. முதலில் இங்ஙனம் விபரீதம் விளைத்துப் பின் நலம் பயக்குமோ யாதோ!

மஹாத்மா:—தென்னிந்தியாவைப் புனிதப்படுத்தி ஆசீர்வதிக்க விஜயம் செய்துள்ளார்.

மாயமாய்ப்போன மங்கை.

பால விவாகம்

சாரதாச் சட்டம்.

ஜானகி:—பாகிரதியினுடைய பெண்ணின் கல்யாணத்துக்குப் போக வேண்டாமா? நமக்கெல்லாம் மிகவும் வேண்டியவளாயிற்றே நீ வரவில்லையா?

செல்வம்:—நன்றாகச் சொன்னாய், நான் வராமலிருப்பேனா என்ன? தங்க விக்கிரகம் போன்ற குழந்தைகளைப் பார்க்காத கண் என்னத்துக்கு? நாழிகையாயிற்று போகலாமா.

ஜானகி:—எங்கள் ஸரஸ்வதி வரட்டும். அவளையும் அழைத்துக் கொண்டு போகலாம். அவள் தோழிக்கல்லவோ கலல்யாணம்.

செல்வம்:—இதோ ஸரஸம் வந்து விட்டாளே புறப்படு.

ஸரஸ்வதி:—அம்மா எங்கே போகப் போகிறாய் நானும் வருவேன்.

ஜானகி:—ஸரஸம் வா, உன் தோழி நீலாம்பாளுக்குக் கல்யாணமாம். உனக்கும் கல்யாணம் செய்யலாமா?

ஸரஸ்வதி:—போ அம்மா, எனக்கு ஒன்றும் கல்யாணம் வேண்டாம். ஆமாம் கலியாணம் பெரியவளாப் போனான்னா செய்வா. நீலா தான் சின்னவளாச்சே!

ஜானகி:—இப்பொழுது இந்த மாதிரி உத்தரவு வந்திருக்காம் ஊரெல்லாம் சொல்லிக்கிறா.

செல்வம்:—எந்தமாதிரி உத்தரவு, பச்செக் குழந்தைக்கிக் கூடவா தாலிகட்ட உத்தரவு, நல்ல உத்தரவு.

ஜானகி:—அதென்னமோ அம்மா எனக்குத் தெரியாது. நமக்கென்ன பயம்? அவர் பெரிய பணக்காரர். அவர் பொண் கல்யாணம் செய்யாதிருந்தால் சட்டக்காரர்களுக்குக் கூடத்தெரிந்துவிடும். அவர் பண்ணவேணும். நாமென்ன எந்த மூலையிலோ கிடக்கிறோம். நாமிருப்பதுகூட ஒத்தருக்கும் தெரியாது நம்மைப் பற்றி அக்கரையில்லை. கையில் காசகப்பட்டபோது செய்து கொள்ளலாம்.

இவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த செல்லத்தின் பிள்ளை கிட்டு சிரித்துக்கொண்டே ஓடிவந்து என்ன அம்மா உங்களுக்கு ஒன்றுமே தெரியவில்லையே; பெண்களுக்குப் பதினறு வயதிற்குமேல் தான் கலியாணம் செய்ய வேணுமென்று சட்டம் ஏற்படுத்தி யிருக்கிருர்களே ஒழிய இந்த மாதிரி சின்னக் குழந்தைக்குப் பண்ணும்படி சொல்லவில்லை. அடுத்த வருஷம் இந்த மாதிரிக் குழந்தைகளைக் கலியாணம் செய்பவர்களை ஜெயிலில் போட்டுத் தண்டிக்கப்போகிருர்கள். அதற்குப் பயந்து பெரியவளான பிறகு கலியாணம் செய்தால் குலத்துக்கு நாசம் ஏற்படுமென்று பயந்து தான் மகா தேவையர் பெண்ணுக்குக் கலியாணம் செய்கிருர். அர்த்தம் தெரியாமல் நீங்கள் உளறிக் கொட்டிக்கிளறி மூடுகிறீர்களே? பணக்காரர்கள் பெண் தான் கணக்கிலிருக்கும், நாமிருப்பதே தெரியாதென்கிருயே, அவர்கள் எடுத்து வைத்திருக்கும் கணக்கில் நானுமிருக்கிறேன் நீங்கள் எல்லோரும் இருப்பீர்கள். பெண் பெரியவளான பிறகுதான் கல்லியாணம் செய்ய வேணுமாம் இதுதான் உத்திரவு.

ஜானகி:—அய்யோ அதென்ன அப்படிக்கூட வரசெய்கிறது. ஆனல் எங்க ஸரஸத்துக்கு எப்படியாவது இந்த வருஷமே கல்லியாணம் செய்யத்தான் வேணும்.

ஸரஸம்:—நடக்காது. வா அம்மா; நீலா கல்லியாணத்துக்கு நான் கட்டாயம் போகனும்; எனக்கு அவளைப்பார்க்க ரொம்ப ஆசையாயிருக்கு; அப்பாம் பேசின்டிருக்கலாமம்மா. என்று கூத்தாடினன்.

ஜானகி:—ஆமாம் நீ ஆசைப்படுவாய், அவள் பணக்கரரார் ஆத்துப் பெண், கல்லியாணம் அமக்களம் படுகிறது. அங்கே அவள் உன்னைத்தான் லக்ஷியம் பண்ணப் போகிருளாக்கும்.

செல்லம்:—ஆமாம் ஆறுவயதுக் குழந்தைக்குப் பணக்காரர் ஏழையென்று தெரியுமாக்கும்; நீ வாடி ஸரஸம் என்று தன் பிள்ளை கிட்டுவையும் அழைத்துக்கொண்டு ஜானகியும் வர எல்லோருமாகக் கல்லியாண வீடு நோக்கிச்சென்று கொண்டிருந்தார்கள்.

தெருக்கள் தோறும் கல்லியாணம் பார்க்கத் திரள் திரளாக ஜனங்கள் சென்று கொண்டிருந்தார்கள். சிலர் நாழிகையாயிற்று

மாலை மாற்றும் வேடிக்கையைக் காணவேணுமென்று வேகமாகச் சென்றனர். இந்தக் கல்லியாணத்தைப் பார்க்கக் குடுத்து வைக்க வேணுமே என்றனர் சிலர். கல்லியாணச் செலவு முப்பத்தையாயிரமாம் என்றனர் சிலர். அங்கங்கே மாவிலைத் தோரணங்கள் கட்டி நீர் தெளித்துக் கோலமிட்டு அழகாக அவ்வூர் முழுவதும் உற்சவம் கொண்டாடுவதுபோல அலங்கரித்திருந்தது. அவ்வூரிலுள்ள ஆலயங்களிலெல்லாம் அன்று பிரபலமாக அபிஷேகங்கள் நடந்து கொண்டிருந்தன. அக்கலியாண வீடோ ஒரு அகன்ற சிங்கார வனம்போன்ற தோட்டத்தில் வெகு உன்னதமாகப் பளிரென்று வெள்ளைச் சலவை கல் கட்டடம் போல் காந்தியுடன் அதன் இரண்டடுக்கு மெத்தையோடு பிரகாசித்தது. அதைச் சுற்றிப் பலவிதமரங்களும் செடிகொடிகளும் செழிப்பாய் வளர்ந்து பார்ப்போர் மனதைக் கவர்ந்தன. வாயிற் பக்கம் அழகாகக் கொட்டகைப் பந்தரிட்டுப் பல வர்ணச் சீலைகளாலும் வாழை முதலியதாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தது. அதனுள் வாத்தியங்கள் விதம் விதமாகக் கோஷித்துக் கொண்டிருந்தன. ஆண்களும் பெண்களும் சிறுவரும் சிறுமியரும் பலவிதப் பட்டாடைகளாலலங்கரித்துக்கொண்டு அங்கும் இங்கும் நடமாடிக்கொண்டிருந்தனர். இரட்டை மாட்டு வண்டிகளிலும் மோட்டார் வண்டிகளிலும் அநேகர் வந்திறங்கிக் கொண்டிருந்தனர். அந்த பங்களாவிர்கடுத்தாற்போல் மற்றொரு பங்களாவும் அலங்கரிக்கப்பட்டு வாத்தியங்கள் முழங்கிக்கொண்டிருந்தது. அப்பொழுது கதிரவன் தன் இளங்கிரணங்களை எல்லா வஸ்துவின் மீதும் பொன் மயமாய் வீசிக்கொண்டிருந்தான். வெகு நன்றாயிருந்தது. அப்பங்களாவிற்குப் பின் ஒரு பர்லாங்குக் கடுத்தாற் போல் ஒரு குளம் இருந்தது. அக் குளக்கரையைச் சுற்றிலும் மாமரங்கள் கொத்துக் கொத்தாகக் காய்த்துத் தொங்கிக் கொண்டு நீலக்கரிகள் நடுவே வைரங்கள் பதித்தாற் போலப் பிரகாசித்து நிழல் தந்து ஜிலுஜிலென்றிருந்தது. அப்பங்களாவின் நாற்புறமும் கண்ணுக்கினிய பல புஷ்பத்தருக்களால் நிறையப்பெற்று மிகவும் மனோரம்மியமாயிருந்தது.

அக்கல்யாண வீட்டினுள் பந்தரிட்டு மாவிலைத் தோரணங்களாலும் வாழை கமுகு முதலிய மரங்களாலும் கொடிகளாலும் கட்டி அழகு செய்த பெரிய முற்றத்தில் கல்யாண மேடையிட்டிருந்தது. அதன் மத்தியில் அவ்வூர் பெயர்பெற்ற மிராசுதார்

மஹாதேவையரும் அவர் பத்தினி பாகீரதியும், அவர்களின் செல்லக் குழந்தையான ஆறு வயது நீலாம்பாளை மடியில் வைத்துக்கொண்டு கன்னிகாதானத்துக்குரிய சடங்குகளை நடத்திக் கொண்டிருந்தார்கள். அக்குழந்தையோ தன் அகன்ற கள்ளங் கபடற்ற கண்களால் சுற்றிச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்து அநேகந் தடவை அவ்விடத்தை விட்டு ஓடி விளையாட நினைத்து எழுந்தது. அதன் பெற்றோர் அதை நல்ல வார்த்தைகளினால் சமாதானஞ் செய்து கொண்டிருந்தனர். அதைக் கண்ட அங்குள்ளாரனைவரும் கொல்லென்று சிரித்தார்கள். அவர்களோடுகூட அக்குழந்தையும் சிரிக்க ஆரம்பித்தது. அக்குழந்தையை அவ்விடம் நிறுத்தி வைப்பதே அவர்களுக்குக் கஷ்டமாயிருந்தது. அச்சமயத்தில் கும்பலை நீக்கிக் கொண்டு கிளி கொஞ்சுவதுபோல், நீலா நீலா என்று ஒரு சிறு பெண் எட்டிப் பார்த்தாள். உடனே நீலா குடு குடென்று ஓடிப் போய் ஸரஸம் எப்பொ வந்தே என்று அவளைக் கட்டிக்கொண்டாள்.

ஸரஸ்வதி:—நீலா உனக்குக் கல்யாணமாமே, உன் கழுத்தைக் காட்டு, தாலி எங்கே?

நீலாம்பாள்:—இல்லையடி புதுசா என்னமோ நகையெல்லாம்பண்ணிப் போட்டிருக்கா, இதெல்லாம் போட்டுக்க எனக்குப் பிடிக்கவேயில்லை, இந்த முத்துமாலைதான் நன்றாயிருக்கு, பார்த்தியா? இதை ஒனக்குப் போட்டா நன்னாருக்கும் பார். என்று நாலு ஸரங்களாகச் சேர்க்கப்பட்ட முத்துமாலை ஒன்றைக் கழற்றி ஸரஸம் கழுத்தில் போட்டாள். மஹாதேவையர் குழந்தை எங்கே என்று பார்க்க அவள் தோழியுடன் கைகோர்த்துக் கொண்டு சிரித்து நிற்பதைக் காண அவர் மனம் பூரித்த பூரிப்பைச் சொல்லி முடியாது. ஸரஸத்தின் தாயாகிய ஜானகி நீலாவைத் தூக்கி திருஷ்டி கழித்து முத்தமிட்டுக்கொண்டிருந்தாள். உடனே பாகீரதியம்மாள் அவ்விடம் சென்று அவர்களை வரவேற்று நீலாவுடன் ஸரஸ்வதியையும் அழைத்து வந்து நீலாவுக்குத் தோழிப் பெண்ணாக அமர்த்தினாள். உடனே நீலாம்பாள், அம்மா நான் மாத்திரம் கல்யாணம் செய்து கொள்வேனுக்கும்; ஸரஸம் பண்ணிக்கல்லியே; அவள் பண்ணின்டாத்தான் நானும் பண்ணிக்குவேன்; இல்லாவிட்டால் நான் மாட்டேன் போ. வாடி ஸரஸம் நாம் விளையாடப் போகலாம் என்று ஓட ஆரம்பித்தது. (தொடரும்.)

" அமிர்த குணபோதினி "

ஸ்ரீமுக ஸூ௵த்திய மாசி மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்	தமிழ்	வாரம்	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியவை.
ம-அ	12	1	திங்	திர-15-10, உரா-30-42, கும்பரவி 7-6, விஷ்ணுபதி புண்ணியகாலம், மஹா சிவராத்திரி.
சி	13	2	செவ்	சசி-7-0, உப-● 52-5, ஸ்ரூவ-24-27, திருவல்லிக்கேணி தெப்பம்.
பி-சி	14	கும்ப (சாப) ஸ்ரீ 4—46 3	புத	பிர-51-53, அவி-18-39, பால்குணசுத்தம்.
ம-சி	15	4	வியா	துவி-45-51, சத-13-39, சந்திர தரிசனம்.
சி	16	5	வெ	திரி-41-10, பூட்-9-48.
சி-பி	17	6	சனி	சது-38-9, உட்-7-27, சாந்த சதுர்த்தி.
அ-சி	18	7	ஞா	பஞ்-37-1, ரே-6-59.
சி	19	8	திங்	ஷஷ்-37-55, அசு-8-23, மீனாயனம் 17-24.
சி	20	9	செவ்	ஸப்-40-41, பர-1-42, கிருத்திகா விரதம்.
சி-அ	21	10	புத	அஷ்-45-4, கிரு-16-46, புதாஷ்டமி.
உ-ம	22	11	வியா	நவ-50-44, ரோ-23-10.
சி	23	12	வெ	தச-57-9, மிரு-30-29, தென்னேரி தெப்பம்.
சி	24	13	சனி	ஏகா-60-0, ஆரு-38-8.
சி	25	14	ஞா	ஏகா-3-50, புந-45-46, ஸர்வைகாதசி.
சி	26	15	திங்	துவா-10-6, பூச-52-49, நரசிம்ம துவாதசி, கரிநாள்
சி	27	16	செவ்	திர-15-38, ஆயி-58-58, திருவொற்றியூர் மகிழடி சேர்வை.
சி	28	17	புத	சசி-20-10, மக-60-0, மாசிமகம். [கை.
அ-சி	1	18	வியா	○ 23-28, மக 3-58, காமதஹனம், ஹோலி பண்ட
சி	2	19	வெ	பிர-25-29, பூர 7-47, வஸந்தோத்ஸவம்.
உ ம	3	20	சனி	துவி-26-26, உத்-10-27.
அ-சி	மார்ச்சு ஸ்ரீ 4	21	ஞா	திரி-26-7, ஹஸ்-11-57, பிரம்மகல்பாதி.
பி-அ	5	22	திங்	சது-24-46, சித்-12-25,
சி-ம	6	23	செவ்	பஞ்-22-25, ஸ்வா-11-54
சி-அ	7	24	புத	ஷஷ்-19-12, விசா-10-31, திதிதுவயம்.
சி-பி	8	25	வியா	ஸப்-15-10, அநு-8-19, அஷ்டகை.
ம-அ	9	26	வெ	அஷ்-10-25, கேட்-5-24.
சி	10	27	சனி	நவ-5-15, உப-53-41, மூல-1-50, உப-55-52
அ	11	28	ஞா	ஏகா-52-46, உரா-53-14, ஸ்மார்த்த ஏகாதசி.
அ-சி	12	29	திங்	துவா-46-16, பூவ-48-35, வைஷ்ணவ ஏகாதசி.
சி-ம	13	30	செவ்	திர-39-52, அவி-44-1, சிவராத்திரி, மீனரவி-59-52

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>ரவி குஜ புத</td><td colspan="2" rowspan="2">15உ-க்கு ராசி</td><td>கேது</td></tr>
<tr><td>சுக்-ச ராகு</td><td></td></tr>
<tr><td></td><td></td><td>குரு</td><td></td></tr>
</table>

" அமிர்த குண போதினி " பிரஸ், 158 A, பிராட்வே, சென்னை—1934

இனிய செந்தமிழ் நாவல்கள்.

அமிர்தகுமாரி	1	4	0
ஆயிரம் தலைவாங்கிய அதிசய சிந்தாமணி	1	0	0
பாலிகாகல்பகம்	0	6	0
அங்கயற்கண்ணி	1	12	0
நவீன நவரத்ன ஒப்பாரி	0	5	0
பூபாலன் ஸ்ரீபாலன்	1	12	0
மாயிகளின் துயரம்	0	2	0
காதலற்ற கல்யாணம்	0	1	0
அம்பலவாணன்	1	4	0
அண்டப்புளுகன்	0	8	0
அம்பலத்தரசன்	1	4	0
மலைவிழுங்கிய மகாதேவன்	0	6	0
மாயாஜால விநோதம்	1	0	0
சதிபதிகளின் மர்மம்	1	0	0
தங்கக்குகை ரகசியம்	0	12	0
திருக்கழுக்குன்றத்துக் கொலை	1	8	0
பிரதாப சந்திரன்	0	4	0
மர்மமுகி	0	12	0
மதனகாந்தி	1	8	0
அமிர்த சாகரன்	1	4	0
ஆனந்த மனோகரன்	1	0	0
பால் சிங்	1	4	0
பொற்றொடி	1	2	0

வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் அவர்களால் எழுதப்பட்டவை.

பூர்ண சந்திரோதயம்	7	8	0
சௌந்தர கோகிலம்	6	0	0
மாயா விநோதப் பரதேசி	5	0	0
திகம்பர சாமியார் பால்ய லீலை	5	0	0
மதனகல்யாணி	4	8	0
மேனகா	3	0	0
கும்பகோணம் வக்கீல்	3	0	0
விலாசவதி	3	0	0
மிஸிஸ் லீலா மோகினி	3	0	0
கனகாம்புஜம்	2	12	0
மன்மதபுரியின் மூடுமந்திரம்	2	12	0
பாலாமணி	2	8	0
பன்னியூர் படாடோப சர்மா	2	4	0
துரைக்கண்ணம்மாள்	2	4	0
ஸதாநந்த போதக சாமியார்	2	4	0
வசந்தமல்லிகா	1	8	0
வித்யாசாகரம்	1	4	0
வஸந்தகோகிலம்	1	4	0
காதலின் மகத்துவம்	1	4	0
நீலலோசனி	(அச்சில்)		

ஜே. ஆர். ரங்கராஜு எழுதிய நாவல்கள்

வரதராஜம்	2	0	0
ஜெயரங்கன்	1	8	0
இராஜேந்திரன்	1	0	0
விஜயராகவன்	1	0	0
இராஜாம்பாள்	0	12	0
மோஹன சுந்தரம்	0	12	0
சந்திரகாந்தா	0	12	0
ஆனந்த கிருஷ்ணன்	0	12	0

வை. மு. கோதைநாயகி எழுதிய நாவல்கள்

ராதாமணி	2	8	0
வைதேகி	2	8	0
பத்மசுந்திரன்	2	8	0
சாருலோசனா	2	8	0
நவநீத கிருஷ்ணன்	2	0	0
சாமளநாதன்	2	0	0
ருக்மிணி காந்தன்	2	0	0
ஸாரமதி	1	12	0
சண்பகவிஜயம்	1	12	0
கௌரீமுகுந்தன்	1	12	0
சோதனையின் கொடுமை	1	8	0
உத்தம சீலன்	1	4	0
பரிமளகேசவன்	1	4	0

அமிர்த குணபோதினி ஆபீஸ், 158-A, பிராட்வே, சென்னை.

கதம்பமாலை	1	0	0
சுதந்தபுஷ்பம்	1	0	0
கோபாலரத்னம்	0	14	0
மூன்றுவைரங்கள்	0	8	0
வீரவசந்தா	0	8	0
நளினசேகரன்	0	8	0

புதிதாய் வெளிவந்த நாவல்கள்

ரத்னபுரி ரகசியம்	14	0	0
ஞான செல்வாம்பாள்	9	10	0
கன்னியின் முத்தம்	5	0	0
கருங்குயில் குன்றம்	4	2	0
அமராவதி	4	0	0
கமலவள்ளி	3	8	0
மான்டி கிருஸ்டோ	3	0	0
சபாரஞ்சிதம்	2	12	0
கற்பக சுந்தரி	2	12	0
கனகபூஷணம்	3	0	0
கடற்கொள்ளை	3	0	0
பவளத்தீவு	3	0	0
மதனாம்பாள்	3	0	0
கௌஹர்ஜான் காதல்	3	0	0
இந்திராபாய்	2	8	0
கற்கோட்டை	2	0	0
ராஜாமணி	2	0	0
கள்ளக்காதலன் வலை	2	0	0
சந்திராபாய்	2	0	0
மதிமோசக் களஞ்சியம்	2	0	0
தேவாமிர்தம்	2	0	0
சந்திரமீனாள்	2	0	0
கிருஷ்ணவேணி	2	0	0
ஆதிலட்சிமி	1	12	0
சுந்தரி மனோகரன்	1	8	0
பண்டிதை மெஸ்மரிசா	1	8	0
தங்கையை மணந்தோன்	1	8	0
தேசபக்தன் கந்தன்	1	8	0
முருகன் ஓர் உழவன்	1	8	0
கமலாம்பாள் சரிதை	1	8	0
மின்சாரமாயவன்	1	8	0
தேவலோககிரிமினல்கேஸ்	1	4	0
வேதாந்த கிரிமினல்கேஸ்	1	4	0
மனமோகன மாணிக்கம்	1	8	0
கப்பற்கொள்ளை	1	4	0
இளங்கோவன்	1	4	0
கற்பகச் சோலை	1	4	0
தேவசுந்தரி	1	4	0
சௌந்தராபாய்	1	0	0
மலையாள பகவதி	1	0	0
ஜெயகாந்தம்	1	0	0
தலைவாங்கி சிந்தாமணி	1	0	0
சுகுணவதி	1	0	0
தினகர சுந்தரி	1	0	0
பன்னீர் செல்வம்	1	0	0
மங்கையர்க்கரசி	1	0	0
சித்ராம்பரி	1	0	0
மாயாஜாலம்	2	0	0
இருகொலை ரகசியம்	1	0	0
தபாற் கொள்ளை	0	14	0
கிருஷ்ணாசிங்	0	14	0
சாரதையின் தந்திரம்	0	12	0
புருடோத்தமன்	0	12	0
மலையாள மீனாள்	0	12	0
தயாபரசுந்தரி	0	12	0
சுந்தரவேணி	0	12	0
ராமதிலகம்	0	12	0
ரஸ்புட்டின் ஜாலம்	0	12	0
அம்பாலிகை	0	12	0
இந்திரகுமாரி	0	12	0
ஆனந்தரங்கன்	0	10	0
பூங்கோதை	0	10	0
நூர்ஜஹான்	0	8	0

இரகசிய சாஸ்திரங்கள்

ஆதி ஜாதக ரகஸ்யம்	4	0	0
சோதிட ஆசிரியன்	4	0	0
ஜீவவசிய பரம ரகசியம்	3	0	0
ஹஸ்தரேகை சாஸ்திரம்	2	0	0
வசீகரண தந்திரம்	2	0	0
மணவாழ்க்கை மர்மம்	2	4	0
இல்வாழ்க்கை ரகசியம்	2	0	0
இன்பவாழ்க்கை ரகசியம்	2	0	0
அசல் கொக்கோகம்	2	0	0
சதிபதிகள் மர்மம்	1	0	0
சொர்ப்பன சாஸ்திரம்	0	12	0
திரிகாலரேகை சாஸ்திரம்	0	10	0
கனவின் பலன்	4	0	0

சிறந்த சங்கீத நூல்கள்.

தியாகராஜ ஹிருதயம்	4	0	0
தியாகராஜ கீர்த்தனை	3	0	0
ஸங்கீத ரத்னாவளி	3	0	0
சர்வார்த்த சிந்தாமணி	2	8	0
ஸங்கீத ரசார்ணவம்	2	8	0
கர்னாடக ஸங்கீதம்	1	0	0
ஸங்கீத சித்ராம்பரி	1	0	0
ஹார்மோனிய ஸங்கீதம்	1	0	0
கிராமபோன் ஸங்கீதம்	1	0	0
ஷை 6 பாகங்கள்	6	0	0
ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் சரித்திரம்	0	8	0

வேதாந்த நூல்கள்

வால்மீகி ராமாயணம்	15	0	0
பாரத வசனம்	10	0	0
மஹாபாகவதம்	8	0	0
ஆநந்த ராமாயணம்	6	0	0
திருவருட்பா	6	0	0
மகா பக்தவிஜயம்	6	0	0
தணிகை புராணம்	5	0	0
ஆதி ஜாதக ரகஸ்யம்	5	0	0
கம்ப ராமாயணம்	5	0	0
நாலாயிர திவ்யபிரபந்தம்	4	0	0
திருக்குறள் உரை	4	0	0
நைடதம் உரை	4	0	0
தாயுமானவர் பாடல்உரை	4	0	0
போகர் 7000	4	0	0
சுந்தர காண்டம்	3	0	0
பாரத சுருக்கம்	3	0	0
வில்லி பாரதம்	3	0	0
மெட்டீரியா மெடிகா	3	0	0

லைப்ரேரிகட்குரிய புத்தகங்கள்.

திருப்புகழ் பெரிது முதல் பாகம் 642 பாடல்கள்	2	8	0
இரண்டாம்பாகம் 611 பாடல்கள்	2	8	0
வீரமாமுனிவர் செய்த அகராதி (தமிழுக்குத்தமிழ்)	2	8	0
நளவெண்பா மூலமும் விசேட விருத்தியுரையும்	2	8	0
வில்லிபுத்தூராழ்வார் பாரதம் மூலமும் அரும்பதவுரையும்	4	0	0
திருக்குறள் மூலமும் உரையும்	2	8	0
நாலாயிர திவ்யபிரபந்தம்	3	0	0
விநோதரசமஞ்சரி	1	4	0
ஞானவாசிட்டம் மூலமும் உரையும்	4	0	0
வேதாந்த சூடாமணி உரையுடன்	1	4	0
விவேகானந்த சுவாமிகள் இந்துமதப் பிரசங்கம்	0	6	0
மோஹ முத்கரம்	0	8	0
திருவிளையாடல் புராணம் வசனம்	1	4	0
பெரியபுராணம் வசனம்	1	4	0
நல்லாப்பிள்ளை பாரத வசனம் 18 பர்வமும் (நான்கு வால்யம்)	7	0	0
கம்பர் இராமாயணம் செய்யுள் 7 காண்டங்களும்	6	0	0
ஷை வசனம் படங்களுடன்	3	0	0
மஹாபாகவத வசனம் படங்களுடன்	3	0	0
பாரீஸ் கதை	2	8	0
இராமநாடகம்	2	0	0
பக்தவிஜயம் 5 பாகங்கள் சேர்ந்தது	6	0	0
கரும்பலகைச் சித்திரம்	1	0	0
பதார்த்தகுண சிந்தாமணி	1	4	0
ஸ்கந்தபுராணம் வசனம்	4	0	0
விநாயகபுராணம் வசனம்	4	0	0
நாலடியார் மூலம் உரை	1	0	0
அராபிக்கதை	2	8	0
மூவர் தேவார அடங்கன் முறை	5	0	0
இராமலிங்கஸ்வாமி திருவருட்பா	3	0	0
மனுதர்ம சாஸ்திரம்	2	0	0
தமிழ்ப்பெயர் அகராதி	10	0	0
இலக்கண விளக்கம்	5	0	0
நல்லொழுக்க போதம்	1	0	0
மாணவர் நீதக்கோவை	1	0	0